Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 23 ஞாயிற்றுக்கிழமை (09.11.2014) பக்கங்கள் 20 ஓசை – 040

## பொதுவேட்பாளர் யார் குழப்பமடையும் ஐ.தே.க.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக கருஜெயசூரியவை நிறுத்துவதா அல்லது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவை நிறுத்துவதா என்ற இருவேறு நிலைப்பாடுகள் காணப்படுவதாக தெரியவருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ சபை இந்த இருவரினதும் பெயர்களை பரிந்துரை செய்துள்ளது. முக்கிய எதிர்க்கட்சி சார்பில் பொதுவேட்பாளரை நிறுத்துவதற்கு ரணில்விக்ரமசிங்க இணங்கியதை தொடர்ந்து கட்சி இது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றது.

நேற்று முன்தினம் மாலை கட்சியின் ஜி.20 குழு இது குறித்து ஆராய்ந்துள்ள போதிலும் உறுதியான முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை என தெரியவருகின்றது.

எனினும் கட்சியின் சில முக்கிய உறுப்பினர்கள் பண்டாரநாயக்க குடும்பத்தை சேர்ந்தவர்களை நியமிப்பதை எதிர்த்து வருகின்றனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## பொதுவேட்பாளர் தெரிவு எப்படி இடம்பெறவேண்டும்

### விளக்கமளிக்கும் தயான்



இலங்கையில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பொதுவேட்பாளரை, பல விடயங்களையும் கருத்திற்கொண்டு தெரிவு செய்யப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் இராஜதந்திரிகளில் ஒருவரான தயான் ஜயதிலக்க இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

குறித்த பொதுவேட்பாளர், அனைத்து எதிர்க்கட்சிகளின் காத்திரத்தை பெற்றிருக்க வேண்டும். அத்துடன் எதிர்க்கட்சி வாக்காளர்கள் மத்தியிலும் மதிப்பை கொண்டிருக்கவேண்டும்.

அதேநேரம், குறித்த பொதுவேட்பாளர் ஏற்கனவே பெருமளவு வாக்கு வங்கியை கொண்டிருக்க வேண்டும்.

19 ஆம் பக்கம் பார்க்க

# இலங்கையின் நேர்மைத்தன்மை கேள்வி எழுப்பக் கூடாது ஐ.நா.

## அரசாங்கம் தெரிவிப்பு



இலங்கையின் நேர்மைத் தன்மை குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஷெயித ராத்அல்ஹுசைன் கேள்வியெழுப்பமுடியாதெனத் தெரிவித்துள்ள இலங்கை அரசாங்கம், அவர் பொறுமையிழந்து வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்துகிறாரெனவும் குற்றம் சாட்டியுள்ளது.

இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கைக்கு இலங்கை அரசாங்கம் அனுப்பிய பதிலிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப்பதில் கடிதத்தை ஜெனிவாவிற்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க அனுப்பி வைத்துள்ளார்.

ஒரு இறைமையுள்ள நாடு என்ற வகையில் தனது கவலையை வெளியிடும் இலங்கையின் உரிமையை, தனது அறிக்கை மூலம் மனித உரிமைகள் ஆணையர் நிராகரித்துள்ளதாக ரவிநாத் ஆரியசிங்க குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. முறைமையின் மூத்த அதிகாரியாக இருக்கும் ஒருவர் ஐ.நா.வின் இறைமை மிக்க உறுப்பு நாடு ஒன்றை அளவுக்கு அதிகமான வார்த்தைப் பிரயோகங்கள் மூலம் தாக்கியுள்ளது தமக்கு கவலை தரும் விடயம் என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா.வின் விசாரணைக் குழுவின் புலன்விசாரணையை அரசாங்கம் நிராகரித்தமையானது தகவல் எதனையும் மறைக்

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை புகலிடதாரிகள் பிரேஸிலில் குடியேற்றம்

இரண்டு வருடங்களுக்கும் மேலாக டுபாயில் தங்கவைக்கப்பட்டிருந்த இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் சிலரை பிரேஸிலில் குடியேற்ற திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் நாளை திங்கட்கிழமை பிரேஸில் நாட்டில் குடியேற்றப்பட உள்ளனர். நான்கு ஆண்கள், இரண்டு பெண்கள் மற்றும் ஒரு சிறுமி உள்ளிட்ட ஏழு பேர் இவ்வாறு குடியேற்றப்பட உள்ளனர்.

இந்தியாவிலிருந்து கடந்த 2012 ஒக்ரோபர் மாதம் படகு மூலம் அவுஸ்ரேலியாவுக்குப் புகலிடம் கோரிச் சென்ற 45 தமிழர்களில் இந்த ஏழு பேரும் உள்ளடங்குகின்றனர். இவர்கள் சென்ற படகு விபத்துக்குள்ளான

19 ஆம் பக்கம் பார்க்க

## 29 ஐஸ்கிறீம் நிறுவனங்கள் இன்றுமுதல் இயங்க அனுமதி

வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தினால் யாழ். மாவட்டத்தில் தடை விதிக்கப்பட்ட 59 ஐஸ்கிறீம், யூஸ் உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்களில் 29 நிலையங்கள் இன்று முதல் மீண்டும் செயற்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ். வர்த்தகர் சங்கம் அறிவித்துள்ளது.

யாழ். மானிப்பாய் வீதியிலுள்ள வர்த்தக சங்க கேட்போர் கூடத்தில் விசேட ஊடக சந்திப்பொன்று நேற்றுக்காலை நடைபெற்றது. இதில் வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் ஐஸ் உற்பத்தி விற்பனை செய்யும் வர்த்தகர்களும் கலந்து கொண்டனர். இதன் போது கருத்து தெரிவிக்கும்போதே யாழ். வர்த்தகர் சங்கத் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் சிறு கைத்தொழில் முயற்சியாளர்களினால் நடத்தப்படுகின்ற ஐஸ்கிறீம், யூஸ் மற்றும் உப உணவு உற்பத்தி நிலையங்களில் 59 நிலையங்களுக்கு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து வர்த்தகர்கள் வணிகர் கழகத்திடம் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து கடந்த 27ஆம் திகதி மேற்படி வர்த்

19 ஆம் பக்கம் பார்க்க

## பொன்னாலை காட்டுப்பகுதியில் அழுகிய நிலையில் ஆணின் சடலம்

யாழ்ப்பாணம் பொன்னாலைச் சந்திக்கு அண்மித்த கடற்கரையை அண்டிய காட்டுப்பகுதியில் நேற்று மாலை ஆண் ஒருவரின் சடலம் அழுகிய நிலையில் இனங்காணப்பட்டுளளது. பொன்னாலைச் சந்தியிலிருந்து சம்பில்துறை செல்லும் பிரதான வீதியில் ஒரு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள காட்டுப்பகுதியில் கடற்கரை ஓரமாக மேற்படி சடலம் பொது மக்களால் அடையாளம் காணப்பட்டு, வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், குறித்த நபர் உயிரிழந்து சில வாரங்களாக இருக்கலாமென்று தெரிவித்துள்ளனர். மேற்படி சடலம் இன்றையதினம் மல்லாகம் மாவட்ட நீதிபதி முன்னிலையில் மீட்கப்படுமென்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ஜனாதிபதி சட்டவிளக்கம் கோரல் புத்திசாதுரியம் என்கிறார் கொமின்

மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியுமா என உச்ச நீதிமன்றின் சட்ட விளக்கத்தை கோர ஜனாதிபதி எடுத்த தீர்மானம் புத்திசாதுரியமானது என சட்டத்தரணி கொமின் தயாசிறி தெரிவித்துள்ளார். சாதாரண விடயத்தை சில தரப்பினர் பூதாகரமாக்க முயற்சித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மூன்றாம் தவணை குறித்து கேள்வி எழுப்பிய தரப்பினர் சட்ட விளக்கம் கோராத நிலையில் ஜனாதிபதியே உச்ச நீதிமன்றிடம் சட்ட விளக்கம் கோரியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார். உச்ச நீதிமன்றின் சட்ட விளக்கத்தை ஜனாதிபதி கோரியதன் மூலம் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்ததன் பின்னர் மனுக்களை தாக்கல் செய்வதனை தடுத்துள்ளார்.

முன்னாள் சட்ட மா அதிபர் சரத் என் சில்வா, சட்ட விளக்கம்

19 ஆம் பக்கம் பார்க்க

## சமுர்த்தி ஆவணங்கள் வவுனியாவில் தீக்கிரை

வவுனியா சின்னப்புதுக்குளம் பகுதியில் அமைந்திருக்கும் சமுர்த்தி அலுவலகம் நேற்றுக் காலை இனம் தெரியாதவர்களினால் தீவைக்கப்பட்டுள்ளது.

வவுனியா சின்னப்புதுக்குளம் பகுதியில் அமைந்திருக்கும் சமுர்த்தி அலுவலகத்தில், நேற்று சிரமதான வேலைக்கு சென்றவர்கள் அங்கு சிரமதானம் செய்து கொண்டிருக்கும் போது, சமுர்த்தி அலுவலக யன்னல் ஊடாக புகை வந்ததை அவதானித்ததை

19 ஆம் பக்கம் பார்க்க



# மழைவீழ்ச்சியின் நிச்சயமற்ற தன்மையால் யாழ்.மாவட்டத்தில் நெற்செய்கையில் வீழ்ச்சி

## வடமாகாண பிரதி விவசாய பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)


யாழ்மாவட்டத்தில் அண்மைய காலத்தில் நிலவும் மழை வீழ்ச்சியின் நிச்சயமற்ற தன்மை, உற்பத்தி தன்மை குறைவு, வறட்சி, மற்றும் விவசாயிகளின் ஆர்வமில்லா தன்மை காரணமாக இவ்வருடம் நெற்பயிற் செய்கை வீழ்ச்சி அடைந்துள்ளதாக வடமாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபால சுந்தரம் தெரிவித்தார்..

இவ்வருட காலபோகத்தில் 10 ஆயிரத்து 800 ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் நெற்செய்கை மேற்கொள்பவர்களில் 80 வீதமானவர்கள் பகுதி நேர பணியாகவே விவசாய நடவடிக்கையில ஈடுபடுகின்றனர்.

கடந்த 2 வருட காலமாக நாட்டில் நிலவிய அதிக வறட்சி, கூலி வேலையாட்களுக்கு நிலவிய தட்டுப்பாடு போன்ற காரணங்களால் பகுதி வேலையாக நெற்பயிர் செய்கை செய்யும் விவசாயிகள் இம்முறை பெரிய அளவில் ஆர்வம் காட்டவில்லை.

வழமையாக யாழ்ப்பாணத்தில் 12 ஆயிரத்து 301 ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை செய்யப்பட்டு வந்திருந்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜி.ஜி.பொன்னம்பலத்தின் பிறந்த தினம் அனுஷ்டிப்பு




(யாழ்ப்பாணம்)

அமரர் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் 113 ஆவது பிறந்த தினத்தையொட்டி குருநகரில் அமைந்துள்ள ஜி.ஜி.பொன்னம்பலத்தின் நினைவுச்சிலைக்கு நேற்று மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

குருநகர்ப் பகுதியில் அமைந்துள்ள ஜி.ஜி.பொன்னம்பலத்தின் நினைவுத்தூபிப் பகுதியில் காலை 9.30 மணிக்கு நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, அமரர் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் நினைவுச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து வடமாகாண சபை உறுப்பினர்களான ஆனோல்ட், சயந்தன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சொலமன் சிறில் மற்றும் பிரதேசசபை தலைவர்கள் மலர்மாலை அணிவித்தனர்.

மேலும் நினைவுத்தூபிக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் நினைவுரைகளும் இடம்பெற்றன. (பா)

# டொன் பொஸ்கோவிற்கு விரைவில் மண்டபம்

டொன் பொஸ்கோ வித்தியாலயத்திற்கு மண்டபம் ஒன்றை அமைத்துத்தருவதாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உறுதியளித்துள்ளார்

டொன் பொஸ்கோ வித்தியாலயத்தின் பரிசளிப்பு நிகழ்வு நேற்று அங்கு நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வருகை தந்த போதே ஆளுநர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

டொன்பொஸ்கோ வித்தியாலயத்திற்கு மண்டபம் ஒன்று இல்லாத நிலையில் நேற்றைய பரிசளிப்பு விழா தற்காலிக கொட்டகையிலே நடைபெற்றது. (பா)

# பருவ மழையைத் தொடர்ந்து தலைதூக்குகின்றது பாதீனியம்

(யாழ்ப்பாணம்)

தற்போது பெய்து வரும் மழையினைத் தொடர்ந்து குடாநாட்டின் பல பகுதிகளிலும் பாதீனியச் செடிகள் வளர்ந்து காணப்படுகின்றன. குறிப்பாக மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி பிரதேசம், உரும்பிராய், சுன்னாகம், ஊரெழு, ஏழாலை, நீர்வேலி, மல்லாகம் தெல்லிப்பளை, கட்டுவன் பகுதிகளில் இச் செடியின் வளர்ச்சி அதிகளவில் காணப்படுவதால் விவசாய நிலங்களிலும் வீதி ஓரங்களிலும் அதிகளவில் வளர்ந்து காணப்படுவதால் விவசாய செய்கை பாதிக்கப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வளர்ந்து வரும் பாதீனியச் செடிகளை அழிப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் மக்கள் நலனில் அக்கறை உள்ள அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோருகின்றனர். (66)

# "திருநெல்வேலி ரெட்" வெங்காய விதை விநியோகம்

யாழ்.மாவட்ட வெங்காய செய்கையாளர்களுக்கு "திருநெல்வேலி ரெட்" சின்ன வெங்காய விதைகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் விநியோகம் செய்யப்பட்டு வருவதாக திருநெல்வேலி ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி எஸ்.கருணைநாதன் தெரிவித்தார்.

குடாநாட்டுச் சூழலுக்கு பொருத்தமானது என ஆராய்ச்சிகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட சின்ன வெங்காய விதைகளே திரு நெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தால் இவ்வாறு விநியோகிக்கப்படுகின்றது.

பொதுவாக சின்ன வெங்காயம் 90 நாட்கள் கால அறுவடையை கொண்டமைந்ததாகக் காணப்படும். ஆனால் 'திருநெல்வேலி ரெட்' வெங்காயத்தை 55 நாட்களில் அறுவடை செய்ய முடியும்.

இந்த வெங்காய விதைகள் ஒரு அந்தர் (அண்ணளவாக 50 கிலோ) 2,750 ரூபாய் வீதம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் மழை வெள்ளத்தில் கற்கும் மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் தரம் 1 வகுப்பறையின் கூரை ஓடுகள் சேதமடைந்துள்ளமையால் மழை நேரங்களில் இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் மழை வெள்ளத்தில் இருந்தே கல்வி கற்க வேண்டிய அவல நிலை காணப்படுவதாக பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

இக்கூரை ஓடுகள் மைதானத்தில் மாலை வேளைகளில் கிரிக்கெட் விளையாடுவோரால் சேதமாக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சேதமான கூரைகளை திருத்துவதற்கு வலயக் கல்வி அலுவலகமே நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதிபரினால் தெரிவிக்கப்பட்ட நிலையில் மழை நேரங்களில் பாடசாலைக்கு மாணவர்களை அனுப்பினால் அவர்கள் மழை வெள்ளத்தில் இருந்து கற்க வேண்டியுள்ளது. இதனால் உடற்சுகயீனங்களுக்கு ஆளாகுவதால் தாம் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்கவேண்டியுள்ளதாக தெரிவித்து பாடசாலைக்கு தமது பிள்ளைகளை அனுப்ப பெற்றோர் தயக்கம் காட்டுகின்றனர்

எனவே இது விடயம் குறித்து உரியவர்கள் கவனம் எடுக்க வேண்டும் என பெற்றோர் கேட்டுள்ளனர். (இ)


## டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங் கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108 பலாலி வீதி,
யாழ்ப்பாணம்
(இலுப்பையடிச் சந்தி
அருகாமை)
021 222 8680,
077 592 5088.

(C/3727)


# தேங்காயின் விலை சடுதியாக உயர்வு

(வரணி)

தேங்காயின் விலை தற்போது சடுதியாக உயர்வடைந்துள்ளது. இருபது முதல் இருபத்தைந்து ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட தேங்காய் தற்போது 40 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. தற்போது தேங்காய் வரவு சந்தைகளில் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

மழை காலம் என்பதால் இந்த விலை உயர்வு என தென்னை செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர். தற்போது மரக்கறி வகைகளும் 100 ரூபாவிற்கு மேலே விலை உயர்வடைந்த நிலையிலேயே விற்பனை செய்யப்படுகிறன. (150)


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

| | |
|---|---|
| வெற்றி வாரம் - | 306 |
| திகதி - | 2014.11.07 |
| வர்ணம் - | நீலம் |

வெற்றி இலக்கங்கள் — ஆங்கில எழுத்து

04 26 34 57 F

பரிசுத் தொகை ரூபா. 16,904,600/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 07 | 350,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 203 | 203,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 371 | 371,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 8985 | 539,100/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4831 | 193,240/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 117826 | 2,356,520/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 16939 | 338,780/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 16,904,600/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,351,640/- |

எதிர்வரும் செவ்வாய்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 17,135,360/-

2014.11.11ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk

(C/3590)




டொன்பொஸ்கோ வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கான பதக்கங்களையும் சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார். (பா.பார்த்தீபன்)

- வேள்ட்விஷன் -

# தெற்காசிய முகாமையாளர் ஜலன்ஸ்கி வடக்கு திட்டங்களை பார்வையிட்டார்

வடக்கில் சாவகச்சேரியிலும் வலி.மேற்கிலும் வேள்ட்விஷன் முன்னெடுக்கும் குடி தண்ணீர் திட்டங்களை தெற்காசியாவிற்கான குடிதண்ணீர் மற்றும் சுகாதாரத் திட்ட முகாமையாளர் அன்ரூ ஜலன்ஸ்கி தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் பார்வையிட்டனர்.

வலி.மேற்கில் பொன்னாலை கல்விளான், வட்டுக்கோட்டை, நெல்லியான் மற்றும் முழுமையாக குடிதண்ணீருக்கு கஷ்டப்படும் 5 கிராமங்களைப் பார்வையிட்டு அறிக்கை செய்துள்ளனர்.

அத்துடன் நெல்லியான் பிரதேச சபை கிணற்றிலிருந்து சுத்திகரிககப்பட்ட குடி தண்ணீரை கல்விளான் மக்களுக்கு குழாய் மூலம் மானிய விலையில் வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளதுடன், இதற்கான ஆவணங்களை பிரதேசசபையிடம் இருந்து பெற்றுக்கொண்டுள்ளனர்.

இத்திட்டக் குழுவினர் வலி. மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி.நா.ஐங்கரன் தலைமையில் ஆராய்ந்துள்ளனர்.

இதில் தெற்காசிய (South Asia) குடிதண்ணீர் மற்றும் சுகாதார திட்ட முகாமையாளர் அன்ரூ ஜலன்ஸ்கி ரிவாஸ் II திட்ட முகாமையாளர் எஸ்கிளாரன்ஸ சுதர்சன், ரிவாஸ் III திட்ட முகாமையாளர் ஜெ.ஆர். அன்ரனி, வலி.மேற்கு ரிவாஸ் III இணைப்பாளர் ஜெ.அலெக்ஸ் ரொச் மற்றும் பிரதேச சபை செயலாளர், உள்ளூராட்சி உதவியாளர், தொழில்நுட்ப அலுவலர் ஆகியோர் வலி.மேற்கின் சுகாதார மற்றும் குடிதண்ணீர் திட்டம் குறித்து விரிவாக ஆராய்ந்தனர்.

இதேவேளை வலி.மேற்கு பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) மற்றும் சுகாதார திட்டம் தொடர்பில் கருத்து கூறுகையில்,

மக்கள் பங்கேற்பு திட்டத்தில் வலி. மேற்கில் உள்ள 25 கிராம அலுவலர் பிரிவுகளில் வாழும் மக்கள் குடிதண்ணீருக்காக ஏங்கி நிற்கின்றனர்.

ஒவ்வொரு கிராமமும் எமக்கு குடிதண்ணீரை வழங்குமாறு கோரிக்கை விடுத்த வண்ணம் உள்ளது.

எனவே, வேள்ட்விஷன் நிறுவன தெற்காசிய தலைவர், அன்ரூரு ஜலன்ஸ்கி வலி.மேற்கில் உள்ள 25 கிராம அலுவலர் பிரிவில் வாழும் மக்களுக்கு லொறி அல்லது ரக்டர் பவுசர் மூலம் குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சி.பாலகிருஸ்ணன் கேட்டுக்கொண்டார்.

# முன்பள்ளி ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு புத்தூர் மேற்கு கலைமதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன்ஸ் கழகங்களின் பிராந்திய தலைவர்.என்.பிரதீபன்,சிறப்பு விருந்தினராக கோப்பாய் லயன்ஸ் கழகத்தலைவர் ஜெ.தற்பரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (08)

# விவாதப்போட்டியில் இரு பாடசாலைகள் மாவட்டமட்ட போட்டிக்கு தெரிவு

(யாழ்ப்பாணம்)

சமூக பாதுகாப்பு திணைக்களத்தினால் யாழ்.மத்திய கல்லூரியில் நடாத்தப்பட்ட விவாதப் போட்டியில் யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணியும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும் மாவட்டமட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளன.


இப்போட்டி 2 கட்டங்களாக இடம்பெற்றதுடன் இதில் 25 அணிகள் கலந்துகொண்டன. இதில் குறித்த பாடசாலை அணிகள மாவட்ட மட்டத்திற்கு தெரிவாகி யுள்ளன.

இப் போட்டி அடுத்தவார மளவில் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (17)



ஆரம்பபிரிவு மாணவர்களுக்கான மாகாண மட்ட நாடக போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி நாடக குழுவினர் வடமாகாணத்தில் பல பாடசாலைகளுடன் போட்டியிட்டு முதலாம் இடத்தைப் பெற்றுள்ளனர் அவர்கள் அதிபர், பொறுப்பாசிரியருடன் காணப்படுகின்றனர். (48)

# பொய்ப்பீரங்கிகளுக்கு பிறகாலதான் நீங்கள் போவீங்களோ மக்காள்?



நவம்பர் மாதம் பிறந்து விட்டுது எண்டால் பொய்ப்புலிகளுக்குக் கொண்டாட்டம்தான்.

மரம் நடுகிறது, விளக்குக் கொளுத்திறது, வீதி- களையும் வளவுகளையும் துப்புரவு செய்பிறது எண்டு சொல்லி மாவீரர் நாளைக் கொண்டாடுகிற மாதிரி ஒரு ஷோ காட்டுவினம்.

இதைப் பார்த்திட்டு ராணுவமும் கொஞ்சம் உஷாராகி 'எங்க செய்யில் செய்து பாருங்கோ பாப்பம். ஆராவது விளக்குக் கொளுத்திற கெட்டித்தனத்தை காட்டுங்கோ அப்ப தெரியும் என்ன நடக்கும்' எண்டு சொல்லிற மாதிரி ஒரு போர்க்கோலம் பூணும்.

'இதுக்குத்தானே காத்திருந்தோம் கந்தசாமி' எண்ட மாதிரி தமிழ்த் தேசியவாதிகளும் இணையப் போராளிகளும் புத்திஜீவிப் பிரமுகர்களும் குய்யோ முறையோ எண்டு கத்தத் தொடங்கி விடுவினம்.

பிறகென்ன பேப்பர்காரப் பெடியளுக்கும் கொண்டாட்டம்தான்.

இந்த அமர்க்களம் ஒரு பத்துப் பதினைஞ்சு நாளைக்கு நடக்கும்.

பிறகு ஒண்டும் நடக்காது. எல்லாம் வழமையாகிவிடும்.

இந்த மாதிரியான ஒரு வாய்ப்பாடு இப்ப நாலஞ்சு வரிசமாக நடந்து கொண்டிருக்கு.

நல்லூர்த் திருவிழாவைப்போல, வற்றாப்பளை அம்மன் பொங்கலைப்போல, மடுமாதா திருநாளைப்போல இதுவும் ஒரு வருடாந்தத் திருவிழாப்போலத்தான்.

இப்பிடியே நவம்பர் திருவிழா. ஜெனிவாத் திவிருவிழா, தேர்தல் திருவிழா எண்டு சனங்களுக்குத் தண்ணி காட்டுகிற – அம்மம்மாக் குழல் ஊதிக்காட்டுகிற விளையாட்டுகளைக் காட்டத் தொடங்கீடுவினம்.

எங்கட சனங்களும் எப்பவும் நாங்கள் இழிச்சவாய்களாகத்தான் இருப்பம் எண்ட மாதிரி எல்லாத்துக்கும் தலையாட்டுவினம்.

தப்பித்தவறியும் 'இதெல்லாம் சரியா? இப்பிடித் திருவிழாக் கொண்டாடுகிறவை எல்லாம் முந்திப் புலிகள் போராடேக்க, போர் செய்யேக்கை என்ன செய்து கொண்டிருந்தவை? அந்த நாளையில இவை புலிகளோட சேர்ந்து முன்னரங்கில நிண்டிருந்தால் இப்ப கையில தமிழீழம் கிடைச்சிருக்குமே!

இப்பிடி இப்ப கிடந்து ஆமியோடயும் பொலிசோடயும் மல்லுக்கட்டத் தேவையில்லை. மாவீரர் நாளுக்கு ஒளிச்சுப் பயந்து பதுங்கி விளக்கைக் கொளுத்திற அவலமும் வந்திருக்காது.

உருப்படியில்லாத மாகாணசபையில ஒதுக்கின காசையே செலவழிக்க வக்கில்லாத – அதிகாரமில்லாத – நாலு அமைச்சுப் பதவிகளுக்கும் அடிபட்டிருக்கத் தேவையில்லை.

ஆனால் அப்ப முன்னுக்கு நிண்டு போராடுறதுக்கு தெம்போ திராணியோ இல்லை. அண்டைக்கு போராட்டம் உச்சத்தில நிக்கேக்க இவையெல்லாம் பியர்க்கடைக்குள்ளையும் பல்கலைக்கழக விரிவுரை மண்டபங்களுக்கையும் சந்திபிலையும் நிண்டு தங்கட காரியத்தைப் பார்த்த ஆட்கள்.

சிலபேர் கடல்கடந்து இந்தியாவுக்குப்போயிருந்து போட்டு இப்ப வந்து குடை பிடிக்கினம்.

வேற சிலபேர் கண்டம் கடந்து தூரப்போயிருந்து போட்டு இப்ப வந்து நாட்டுப்பற்று இனப்பற்றில புரக்கேறி அந்தரப்படுகினம்.

எல்லாம் புலி இல்லாத காலத்தால வந்த வினை.

புலிகள் இப்ப இருந்திருந்தால் இந்த மாதிரிப் பம்மாத்துக் கோஷ்டிக்கு நெற்றியில பொட்டு வைச்சிருப்பாங்கள்.

இல்லாட்டிக்கு உயிரோட கொள்ளிதான்.

ஆனால், புலி இல்லாவிட்டாலும் புலியை வைச்சுப் பிழைக்கிற இந்தக் கில்லாடிகள் அப்பவே புலிகளுக்குத் தண்ணி காட்டி 'உங்களின்ரை ஆதரவாளர்கள் நாங்கள். உங்களுக்காகவே நாங்கள்' எண்டு நடிச்சவையல்லோ.

இந்த நடிப்பில மயங்கித்தானே புலிகள் அழிஞ்சவை எண்டு சொல்லிறார் சுந்தரமூர்த்தி அண்ணை.

அப்பிடிப் புலிகளையே மருட்டி மயக்கின இந்தக் கோஷ்டிக்கு சாதாரண அப்பாவிச் சனங்களை மருட்டி மயக்கிறதில என்ன பிரச்சினை எண்டு கேட்கிறார்.

சுந்தரமூர்த்தி அண்ணையின்ரை கேள்வி நியாயம்தான்.

இப்பிடித்தான் இவையின்ரை ஏமாத்து விளையாட்டுகள்.

தாங்கள் பாதுகாப்பாகவும் வசதியாகவும் இருந்து கொண்டுதான் இவை அரசியலைப் பேசுகினம்.

இவையின்ரை உரிமைக்கோரிக்கை எல்லாம் பேப்பரில எழுதிறதும் மேடையில பேசிறதும் நாலு பேர் சந்திச்சால் சூழயிருந்து மகிந்தற்றை மண்டையை உடைப்பம். ஜெனீவாவுக்கு சிவத்தைக் கம்பளத்தை விரிப்பம் எண்ட கணக்கில புலம்பிறதும்தான்.

அதுக்கு அங்கால ஒரு பயல் துணிஞ்சு நிண்டு போராடவோ, ஒரு காரியத்தைச் செய்யவோ மாட்டாங்கள்.

ஆனால், தமிழர்கள் வீரர்கள். அசகாய சூரர்கள். வீழ்ந்து கிடப்பமோ. வெற்றி வரும்வரை ஒயமாட்டோம் எண்டெல்லாம் முழங்குவாங்கள்.

இந்தப் பொய்ப்பீரங்கிகளுக்குப் பிறகாலதான் நீங்கள் எல்லாம் அணிதிரளப் போகிறீங்களோ மக்காள்?

வெற்றி நமது தவறுகளை மூடி மறைத்துவிடும். - பார்பர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## ‘வாய்ப்பந்தல்’ அரசியல்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் வாய்வீச்சுக்களை நம்பி மக்கள்தான் அவர்கள்மீது அபரிமித நம்பிக்கையை வெளிப்படுத்தி பாராளுமன்றத்திற்கும் மாகாணசபைக்கும் பிரதேச சபைகளுக்கும் தெரிவுசெய்து அனுப்பிவிட்டுக் காத்திருக்கிறார்கள்.

ஆனால், அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளோ தங்களையும் நம்பவில்லை; தங்களுக்குள் ஒருவரையொருவரும் நம்பவில்லை; தங்கள் தலைவர்களையும் நம்பவில்லை. தேர்தல் முடிந்து தேர்தல் வரும் வரைக்கும் தங்களுக்குள் வெட்டுப்பழி குத்துப்பழி காட்சிகளைத்தான் “மக்கள் சேவை”யாக நடத்துகிறார்கள்.

வடக்கு முதலமைச்சர் சொகுசாக வாழ்கிறார்; ஏனைய உறுப்பினர்களின் பிரச்சினையைக்கூட கேட்பதில்லை என்று அவரது தமிழரசுக் கட்சிக்காரர்களே ஊடகங்களைக் கூட்டிக் குற்றம் சுமத்துகிறார்கள்.

வடக்கு மாகாணத்தின் தங்கள் கட்சிக்கார அமைச்சர் ஒருவரை ‘ஒத்தைக்கு ஒத்தை’ சண்டைக்கு அழைத்துச் சந்நதம் கொள்கிறார் அதே தமிழரசுக்கட்சியின் மாகாணசபை உபதவிசாளர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தமிழரசுக் கட்சி செயலாளர்களில் ஒருவரான சுமந்திரனோடு சேர்ந்து கொண்டு கட்சியில் யாருக்கும் தெரியாமல் இரட்டைவேச அரசியலை நடத்துகிறார் என்று வெளிப்படையாகவே பொருமுகின்றனர் ஏனைய உறுப்பினர்கள்.

அதாவது, ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்சவை வெல்ல வைப்பதற்கான “டீலை” அவர்கள் முடித்துவிட்டதாகவும், இதில் கட்சியின் ஏனைய உறுப்பினர்களிடமிருந்து எந்தக் கருத்துக்களும் கேட்கப்படவில்லை என்று அவர்கள் கொதித்துப் போயுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் ரணிலையே ஜனாதிபதி வேட்பாளர் என்று அறிவித்த பிறகு, ரணிலுக்கு நாங்கள் ஆதரவளிக்க மாட்டோம் என்று திரு சம்பந்தன் தெரிவித்திருப்பதானது, ஜனாதிபதி மகிந்தவுடன் அவர் ஏற்கனவே இரகசியமாகப் பேசி விட்டதையே காட்டுகிறது என்பது கட்சிக்காரர்களின் குற்றச்சாட்டு.

இதில் கொடுமை என்னவென்றால், தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து எந்த ஜனாதிபதி வேட்பாளர் சாதகமான வாக்குறுதியைத் தருகிறார் என்று அறிந்துகொள்ளும் பகிரங்கப் பேச்சுவார்த்தை எதிலும் ஈடுபடாமல், தலைவர்கள் தங்கள் சொந்த நலன்களுக்காக முடிவுகளை எடுக்கிறார்கள் என்பதுதான்.

இவ்வாறு, மக்கள் முதுகில் மட்டுமல்லாமல் தங்கள் முதுகிலும் சவாரி விடுகிறார்கள் தலைவர்கள் என்று சொந்தக் கட்சிக்காரர்களிடமே கோபம் வெடித்திருப்பதுதான் தமிழரசுக் குத்துவெட்டுக்களின் இன்றைய புதிய பரிணாமம்.

வழக்கம்போல அதிகாரத்திலிருக்கும் தலைவருடன் இரகசிய ஒப்பந்தம் நடைபெற்று விட்டாலும், அதை மக்களுக்குச் சொல்ல முடியாதல்லவா? எனவே, தமிழ் மக்கள் தாங்களே விரும்பியது போல் வாக்களித்துக் கொள்ளட்டும் என்ற பெருந்தன்மையான அறிவிப்பைத்தான் தலைவர்களால் வெளியிட முடியும்.

என்ன ஒரு கொடுமை பாருங்கள். வாக்குகள் அளித்துத் தங்களைத் தெரிவு செய்த மக்களுக்காக எந்தவொரு அரசியல் முடிவையும் வெளிப்படைத் தன்மையோடு எடுக்க முடியாத வங்குரோத்து நிலைமையில்தான் இந்தத் தலைவர்கள் எப்போதும் இருந்துவருகிறார்கள்.

இதுவரை தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டமொன்றை பகிரங்கமாக அறிவிக்க முடியவில்லை. அதேபோல மத்தியில் எவர் ஆட்சிக்கு வந்தால் எமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வோம் என்றும் மக்களுக்குச் சொல்ல முடியவில்லை.

இலங்கையில் உள்ள யாருமே சரியில்லை. சர்வதேசமும் வரவரச் சரியில்லை. இந்தியாவும் எப்போதும்போல் சரியில்லை என்று ஆகிவிட்ட ஆத்தாக்கடைசியில், சாத்வீகப் போராட்டத்தின் மூலம் அடுத்த வருடம் தீர்வை எடுத்துத் தந்துவிடுகிறோம் என்று மற்றொரு வாய்ப்பந்தலையும் போட்டிருக்கிறார்கள்.

அந்த வண்டவாளமும் இன்னும் 52 நாட்களில் தெரிந்துவிடும்.

- ஆசிரியர்



### வடமாகாண மரநடுகை மாதம்
### கார்த்திகை 2014

“பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும் போது பூமியிலுள்ள மிகச்சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றைக்கொண்டிருப்போம்.”

——— பிராங்க் லோயிட் ரைற் (அமெரிக்க கட்டடக் கலைஞர், எழுத்தாளர்)

# ஐ.நா.வுக்கு போலிசாட்சியம்
# சேகரித்தவர் தப்பிஓட்டம்
## தெற்கில் இருந்து கசிகிறது தகவல்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு போலி சாட்சியங்களை வழங்க முயற்சித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள விஜேந்திரகுமார் எனப்படும் சன்மாஸ்டர் இந்தியாவிற்கு தப்பிச் சென்றுள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளது.

யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளுக்காக வெற்று சாட்சியப் படிவங்களில் கையொப்பங்களை திரட்டியதாக சன் மாஸ்டர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை சன்மாஸ்டர் நீர்கொழும்பிலிருந்து படகு மூலமாக இந்தியா சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி கைது செய்யப்பட்ட சின்னத்தம்பி கிருஸ்ணராஜா என்பவருக்கு, சன்மாஸ்டரே அறிவுறுத்தல்களை வழங்கியதாகவும், படிவங்களை வழங்கியதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கிருஸ்ணராஜாவிடம் நடத்திய விசாரணைகளின் மூலம் சன் மாஸ்டர் இந்த சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சன் மாஸ்டர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா தொகுதி அமைப்பாளர் என அரசாங்கத் தரப்பினர் குற்றம் சுமத்தியுள்ளனர். எனினும், சன் மாஸ்டருக்கும் கட்சிக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போலியான சாட்சியங்களை திரட்டும் பணிகளில் ஈடுபடவில்லை என தெரிவித்துள்ளது. எவ்வாறெனினும் சன்மாஸ்டர் படகு வழியாக இந்தியாவிற்கு தப்பிச் சென்றுள்ளதாக உயர்மட்ட புலனாய்வுத் தகவல்கள் தெரிவிகின்றன.

இதேவேளை, சன் மாஸ்டர் சில மேற்குலக நாடுகளின் இராஜதந்திரிகளுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அப்படி ஒன்றும் இல்லை
# அது எனது பரம்பரைச்சொத்து
## சொல்கிறார் சஜின்வாஸ்

(கொழும்பு)

தம்மீதான சொத்துக்கள் தொடர்பிலான குற்றச்சாட்டில் உண்மையில்லை என வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அண்மையில் தாம் பாரியளவில் சொத்துக்களை சட்டவிரோதமான முறையில் குவித்துள்ளதாக நாடாளுமன்றில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது எனவும், இந்தக் குற்றச்சாட்டில் உண்மையில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஹெலிகொப்டர் ஒன்றைக் கூட வைத்திருப்பதாக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தது.

தம்மிடம் காணப்படும் சொத்துக்கள் நீண்ட கால அடிப்படையில் உழைத்து சம்பாதித்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரே இரவில் இந்த சொத்துக்களை குவிக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

எந்த நேரத்திலும் தமது சொத்துக்கள் தொடர்பில் எதிர்க்கட்சியினர் கண்காணிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வங்கிக் கடன் ஒன்றைப் பெற்றுக் கொண்டு ஹெலிகொப்டர் ஒன்றைக் கொள்வனவு செய்வதில் தவறில்லை எனவும், அரசியல்வாதி என்ற காரணத்திற்காக உழைக்காமல் இருக்கவோ வாழாமல் இருக்கவோ முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக எதிர்க்கட்சியினர் தமக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை அடுக்கி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

# பஜனை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் இன்று விசேட பஜனை நிகழ்வு இடம் பெறவுள்ளது.

மாலை 5.00 மணியளவில் இல: 17, உரும்பிராய் சந்தியில் உள்ள மேற்படி மண்டபத்தில் இந்த பஜனை இடம்பெறவுள்ளது. துறவி இராஜேஸ்வரானந்தா கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்.

# சீனாவின் தலைநகரமாக இலங்கை
# நாடாளுமன்றில் ரவி எம்.பி. கிண்டல்

சீனாவின் தலைநகரமாக இலங்கை மாறி வருவதோடு கொழும்புத் துறைமுகம் சீனாவுக்கு தாரைவார்க்கப்பட்டு அரசாங்கம் இந்தியாவுடன் இராஜதந்திர நட்புறவில் விரிசலை ஏற்படுத்திக் கொண்டுள்ளது என கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் ஐ.தே. கட்சி எம்.பி. ரவி கருணா நாயக்க குற்றஞ்சாட்டினார்.

அத்துடன், ரணில் விக்ரமசிங்க தலைமையிலான புதிய ஆட்சியில் இந்தியாவுடன் துறைமுகங்கள் தொடர்பாக புதிய உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டம் மீதான நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், கப்பல்துறை அபிவிருத்தி மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சுக்கள் தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே ரவி கருணாநாயக எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கையின் துறைமுகங்கள் அனைத்தையும் அரசு சீனாவுக்கு வழங்கி விட்டது.

கொழும்புத் துறைமுகம் சவுத்போர்ட் திட்டத்தின கீழ் சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்துறைமுகத்திற்கு சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல் வந்து போகிறது.

இதனால் இந்தியா எமது நாட்டை சந்தேகமாக நோக்குவதற்கான நிலை ஏற்பட்டுள்ளது.


அன்று ரணிலின் ஆட்சியில் இந்தியாவுடன் நெருங்கி இங்கு துறைமுகங்களை அபிவிருத்தி செய்வோம்.

இரு நாட்டு துறைமுகங்களூடாக வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெற்றன.

ஆனால், இன்று இலங்கை சீனாவின் தலைநகரமாக மாறி வருகின்றது. கொழும்பு துறைமுகம் உட்பட நாட்டின் துறைமுகங்கள் அனைத்தும் சீனாவுக்கு தாரைவார்க்கப்பட்டுள்ளது.

வெகுவிரைவில் ரணில் தலைமையில் ஆட்சி மலரும். அதன்போது இந்தியாவுடன் துறைமுகங்கள் தொடர்பாக உடன்படிக்கைகளை செய்து கொண்டு நட்புறவை பேணுவோம் என்றார்.

எங்கள் பிரச்சினையைச் சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானிக்கின்றது என்றும் விரைவில் அது தீர்வைப் பெற்றுத் தரும் என்றும் மேடைக்கு மேடை முழங்கிய சேனாதிராசாவே இனப்பிரச்சினையின் தீர்வுக்காகச் சாத்வீகப் போராட்டம் என்று கூறுவதன் மூலம் சர்வதேசத்தை நம்புவதில் பலனில்லை என்பதை ஒத்துக்கொண்டுவிட்டார். தீர்வுத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான ஆலோசனைகளை வழங்குமாறு தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்ததன் மூலம் ஏற்கனவே அரசாங்கத்திடம் தீர்வுத் திட்டம் கையளிக்கப்பட்டதாகக் கூறுவது பொய் என்பதை சுரேஷ் பிரேமச்சந்திரன் புட்டுக் காட்டிவிட்டார். அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் எனக் கூறுவது தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கான கோஷம். பேரினவாத அரசாங்கம் என்றும் தமிழர் விரோத அரசாங்கம் என்றும் விமர்சிப்பவர்களே அந்த அரசாங்கம் தானாக ஒரு தீர்வை முன்வைக்க வேண்டும் எனக் கூறுவது எவ்வளவு பெரிய ஏமாற்று.



# வழி தெரியாது தடுமாறும் கூட்டமைப்பு அரசியல்

## சங்கர சிவன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரட்டை முக அரசியல் இவ்வளவு கெதியில் அம்பலமாகும் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். இனப்பிரச்சினையின் தீர்விலேயே தமிழ் மக்களின் விமோசனம் தங்கியுள்ளது. தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்குவதாக உரிமை கோரும் கூட்டமைப்பு இனப்பிரச்சினைக்கான தீர்வில் சிறிதளவேனும் கவனம் செலுத்தவில்லை. அரசியல் தீர்வுக்குச் சாதகமாக எதுவும் செய்யக்கூடாது என்று புலிசார்புப் புலம் பெயர் அமைப்புகள் விடுத்த கோரிக்கையை ஏற்று இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் எதுவும் செய்யாமல் ஒதுங்கியிருக்கின்றார்கள். இது ஒரு முகம். இனப்பிரச்சினைக்கான தீர்வையிட்டு உதாசீனமாக இருப்பதாக எவராவது குற்றஞ்சாட்டக்கூடாது என்பதற்காகச் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்றும் அரசாங்கத்துக்கு ஒரு தீர்வுத் திட்டத்தைக் கொடுத்திருக்கின்றோம் என்றும் அரசாங்கமே தீர்வை முன்வைக்க வேண்டும் என்றும் அவ்வப்போது கூறித் தமிழ் மக்களின் காதில் பூச்சுற்றியது மற்றைய முகம். கெட்டிக்காரன் பொய்யும் புரட்டும் எட்டு நாளைக்கு எனக் கூறுவர். கூட்டமைப்புக் கெட்டிக்காரரின் பொய்யையும் புரட்டையும் அவர்களே இப்போது அம்பலப் படுத்திவிட்டார்கள்.

சாத்வீகப் போராட்டம் நடாத்தப் போவதாக மாவை சேனாதிராசா அறிவித்தத்துடன் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்ற பொய் அம்பலமாகியது. சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தருமென்றால் சாத்வீகப் போராட்டம் எதற்காக? எங்கள் பிரச்சினையைச் சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானிக்கின்றது என்றும் விரைவில் அது தீர்வைப் பெற்றுத் தரும் என்றும் மேடைக்கு மேடை முழங்கிய சேனாதிராசாவே இனப்பிரச்சினையின் தீர்வுக்காகச் சாத்வீகப் போராட்டம் என்று கூறுவதன் மூலம் சர்வதேசத்தை நம்புவதில் பலனில்லை என்பதை ஒத்துக்கொள்கின்றார். அரசாங்கத்திடம் தீர்வுத் திட்டம் கையளிக்கப்பட்டதாகக் கூறுவது பொய் என்பதை சுரேஷ் பிரேமச்சந்திரன் புட்டுக் காட்டிவிட்டார். தீர்வுத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான ஆலோசனைகளை வழங்குமாறு தமிழ் மக்களுக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார். ஏற்கனவே அரசாங்கத்துக்குத் தீர்வுத் திட்டமொன்றைக் கொடுத்திருந்தால் வேறொரு தீர்வுத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டிய தேவை என்ன? அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் எனக் கூறுவது தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கான கோஷம். பேரினவாத அரசாங்கம் என்றும் தமிழர் விரோத அரசாங்கம் என்றும் விமர்சிப்பவர்களே அந்த அரசாங்கம் தானாக ஒரு தீர்வை முன்வைக்க வேண்டும் எனக் கூறுவது எவ்வளவு பெரிய ஏமாற்று.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தான் தமிழ்த் தலைமையின் பிரதான பணியாக இருக்க வேண்டும். ஆனால், கூட்டமைப்புத் தலைவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. பிரச்சினைக்கான தங்கள் தீர்வு என்ன என்பதை ஒரு நாளாவது கூறவில்லை. மக்களை உணர்ச்சிவச நிலைக்குக் கொண்டு வரக்கூடிய ஆவேசப் பேச்சுக்களைத் தேர்தல் மேடைகளில் நிகழ்த்தினார்களேயொழியப் பிரச்சினைக்கு எந்த விதத்தில் தீர்வு காண்பார்கள் என்பதை மக்களுக்குச் சொல்லவில்லை. மக்கள் முகங்கொடுக்கும் துயரங்களைப் பட்டியல் போட்டுக் காட்டுவதற்குத் தலைவர்கள் தேவையில்லை. அது எல்லோராலும் முடியும். பிரச்சினையைத் தீர்ப்பதற்கே தலைவர்கள் தேவை. அறுபது வருடங்களுக்கு மேலாக இனப்பிரச்சினை தீர்வின்றி வளர்கின்றதென்றால் உண்மையான தலைவர்கள் தோன்றவில்லை என்று அர்த்தமா? அல்லது மக்கள் உண்மையான தலைவர்களின் பக்கம் திரும்பவில்லை என்று அர்த்தமா?

ஒவ்வொரு தேர்தலின் போது ஆவேசமாகப் பேசுவதும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத் தங்களைத் தெரிவு செய்யும்படி கூறுவதும் தமிழரசுக் கட்சி முதல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரை வழக்கமாகிவிட்டது. அடுத்த தேர்தலிலும் இதே கதைதான். எந்தப் பிரச்சினையும் தீர்ந்த பாடாக இல்லை. ஆவேசப் பேச்சுக்களால் பிரச்சினையைத் தீர்க்க முடியுமென்றால் இனப்பிரச்சினை எப்போதோ தீர்ந்திருக்கும். அந்த அளவுக்குப் பேச்சுமன்னர்கள் தமிழ் அரசியலில் இருந்திருக்கின்றார்கள். நடைமுறைச் சாத்தியமான தீர்வுத் திட்டமும் அந்தத் தீர்வு தொடர்பாகக் கருத்தீடுபாடான செயற்பாடும் தான் பிரச்சினையின் தீர்வுக்குத் தேவையானவை. கூட்டமைப்பிடம் தீர்வுத் திட்டமும் இல்லை. கருத்தீடுபாடான செயற்பாடும் இல்லை.

ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு காண்பதே தங்கள் நிலைப்பாடு என்று கூட்டமைப்புத் தலைமை உச்ச நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்து கூறியிருக்கின்றது. தமிழீழக் கோரிக்கையை எப்போதோ கைவிட்டு விட்டோம் என்று சம்பந்தனும் சுமந்திரனும் ஊடகங்களுக்குத் தெரிவித்திருக்கின்றார்கள்.

இந்த நிலையில் கூட்டமைப்பு ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வை அடைவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கின்றது. தீர்வுத் திட்டமொன்றைத் தயாரித்து முன்வைப்பது அதற்கான ஆரம்ப நடவடிக்கையாக அமைய வேண்டும். ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வுக்கான தீர்வுத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு இயலாத நிலையில் கூட்டமைப்பு இருக்கின்றதென்றால் அந்த இயலாமையை நீக்குவதற்கான நடவடிக்கைகளை முதலில் மேற்கொள்ள வேண்டும்.

ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்பதற்குக் கூட்டமைப்புக்குள் ஏகோபித்த ஆதரவு இல்லை. சம்பந்தனும் சுமந்திரனும் மாத்திரம் பகிரங்கமாக இது பற்றிப் பேசுகின்றார்கள். மற்றவர்கள் ஐக்கிய இலங்கை பற்றி வாய் திறக்கவே தயங்குகின்றார்கள். ஐக்கிய இலங்கையில் தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்ட சிறுபான்மையினரைத் தவிர கூட்டமைப்பின் மற்றைய தலைவர்களை இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தலாம். தனிநாடு தான் தீர்வு என்று உறுதியாக நம்புவர்க்ள் ஒரு பிரிவினர். சிறிதரன், சிவாஜிலிங்கம் போன்றோர் தங்கள் நிலைப்பாட்டைப் பகிரங்கமாக வெளிப்படுத்துகின்றனர். தனிநாட்டை ஆதரிக்கும் மற்றவர்கள் அவ்வளவு பகிரங்கமாகப் பேசுவதில்லை. புலம் பெயர் அமைப்புகளுடனான தொடர்பு அறுந்துவிடுமே என்பதால் ஐக்கிய இலங்கையில் தீர்வு என்ற கருத்தை ஏற்காதிருப்பவர்கள் இரண்டாவது பிரிவினர். புலம் பெயர் அமைப்புகளுடனான உறவை வலுப்படுத்தி அதன் மூலம் சுயலாபம் அடைவதைத் தவிர இவர்களுக்கு வேறு நோக்கம் இல்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வில் அக்கறை இல்லை. மக்களுக்கு உணர்ச்சியூட்டி அதிரடி அரசியல் செய்வதன் மூலம் பதவிகளைக் காப்பாற்றுவதிலும் புலம்பெயர் அமைப்புகளுக்கு விசுவாசமாக நடப்பதிலும் தான் இவர்களுக்கு அக்கறை. இவ்வாறாக வெவ்வேறு சிந்தனைகளையும் நோக்கங்களையும் கொண்டவர்களின் கூட்டுக் கதம்பமாகவே கூட்டமைப்பு இருக்கின்றது. இதுதான் தீர்வுத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்குக் கூட்டமைப்பின் இயலாமை.


கூட்டமைப்பு இப்போது தர்மசங்கடமான நிலையில் இருக்கின்றது. ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்று உச்ச நீதிமன்றத்துக்கு உறுதியளித்திருப்பதாலும் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டதாக ஊடகங்கள் மூலம் பகிரங்க அறிவிப்புச் செய்திருப்பதாலும் ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்ற நிலைப்பாட்டிலிருந்து விலக முடியாது. விலகினால் சட்ட ரீதியான நெருக்கடியைச் சந்திக்க நேரிடும். ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வுக்கான தீர்வுத் திட்டத்தைத் தயாரித்து வெளியிடுவதும் சாத்தியமில்லை. அது கட்சிக்குள் நெருக்கடியைத் தோற்றுவித்துவிடும். கடந்த ஐந்து வருடங்களாகச் செய்தது போல எந்தத் தீர்வைப் பற்றியும் பேசாமல் மக்களிடம் போலி நம்பிக்கைகளை வளர்த்துக் காலங்கடத்தலாமென்றால் அதுவும் சாத்தியமில்லாது போய்விட்டது. சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று இனிமேல் சொல்ல முடியாது. அரசாங்கத்திடம் தீர்வுத் திட்டத்தைக் கையளித்திருப்பதாகச் சொன்னதெல்லாம் பொய் என்றாகிவிட்டது. அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் என்பது வெற்றுக் கோஷம்.

தமிழ் மக்களின் அரசியல் தலைமை என்று உரிமை கோருபவர்கள் அம்மக்களின் அடிப்படைப் பிரச்சினையான இனப்பிரச்சினையின் தீர்வுக்கு வழிகாட்ட இயலாதவர்களான இக்கட்டு நிலைக்குக் கூட்டமைப்பு வந்துவிட்டது. மக்களுக்குச் சொல்ல இவர்களிடம் இப்போது எதுவும் இல்லை. சுருக்கமாகச் சொல்வதானால் கூட்டமைப்பின் அரசியல் முட்டுச்சந்தில் நிற்கின்றது.

இந்த இக்கட்டிலிருந்து கூட்டமைப்பு விடுபட வேண்டுமானால் கற்பனா உலகிலிருந்து யதார்த்த உலகுக்குத் திரும்பவேண்டும். ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வுதான் தமிழ் மக்களின் விமோசனத்துக்கு வழி என்ற நிலைப்பாட்டுக்குக் கூட்டமைப்பு வர வேண்டும். அதிலுள்ள தடைகளைத் துணிச்சலுடன் நீக்க வேண்டும். நடைமுறைச் சாத்தியமான தீர்வையும் அதை அடைவதற்கான அணுகுமுறைகளையும் ஏற்றுச் செயற்பட முன்வரவேண்டும்.

இவற்றுக்குக் கூட்டமைப்புத் தலைமை தயாராக இல்லையென்றால் தமிழ் மக்களால் நிராகரிக்கப்படுவதைத் தவிர்க்க முடியாது.

# யுத்த கால பின்னடைவுக்கு பரிகாரம் காணவே வடக்கில் அதிக செலவில் துரித அபிவிருத்தி



(கொழும்பு)

யுத்தகால பின்னடைவை சமப்படுத்தும் நோக்கிலேயே ஏனைய மாகாணங்களை விட அதிகளவு நிதியை செலவிட்டு வடக்கு, கிழக்கில் அபிவிருத்தியை மேற்கொண்டு வருகின்றோம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிததார்

நாட்டின் அனைத்து துறைகளும் அபிவிருத்தியில் கட்டியெழுப்பப்பட்டுள்ள நிலையில், அடுத்த் இலக்கு மனித வள அபிவிருத்தியே என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வடக்கில் சகல துறைகளையும் அபிவிருத்தி செய்து 96 மகிந்தோதய விஞ்ஞான ஆய்வுகூடங்களையும் பெற்றுக் கொடுத்ததோடு எவ்வித அடிப்படை வசதிகளும் இல்லாத நெடுந்தீவுக்கு மின்சாரத்தையும், மகிந்தோதய விஞ்ஞான ஆய்வு கூடத்தையும் பெற்றுக்கொடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

காலி, அம்பாந்தோட்டை, மாத்தறை ஆகிய மூன்று மாவட்டங்களிலுமுள்ள கிராம சேவகர்களுக்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு அம்பாந்தோட்டை மாகம்புர. மகிந்த ராஜபக்ஷ சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முனதினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஜீ.எல்.பீரிஸ், ஜோன் செனவிரட்ன, மகிந்த அமரவீர உட்பட அமைச்சர்கள், முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது,

தென்மாகாணம் ஒரு காலத்தில் மிகவும் கவனிப்பாரற்றுக் கிடந்தது வெள்ளைக்காரர்கள் காலத்தில் மாத்தறை வரை வந்த புகையிரதம் அம்பாந்தோட்டைக்கு வரவில்லை. அதேபோல எம்மவர் ஆட்சிக் காலத்திலும் அம்பாந்தோட்டைவரை புகையிரத சேவைகள் தொடரவில்லை.

முழு நாட்டினதும் அனைத்துத் துறைகளையும் அபிவிருத்தி செய்வதே எமது அரசங்கத்தின் நோக்கமாகும்.

ஏனைய பிரதேசங்களோடு சமப்படுத்தும் வகையிலேயே வடக்கு, கிழக்கில் அதிக அபிவிருத்தியை மேற்கொண்டுள்ளோம். "புபுதமு ஸ்ரீலங்கா" கொள்கைத் திட்டத்தின் கீழ் அரச துறையை சீர்குலைக்கும் பாரிய நடவடிக்கையை ஐ.தே.க அரசாங்கம் மேற்கொண்டது.

அரசதுறை மீது நம்பிக்கையில்லாது தனியார் துறையை முன்னேற்றும் நோக்கத்திலேயே அவர்கள் செயற்பட்டனர்.

நாம் அரச துறைமீது நம்பிக்கை வைத்துள்ளோம். அதனால்தான் அரச துறை ஊழியர்களை 15 லட்சமாக அதிகரித்துள்ளோம். அவர்களது காலத்தில் அரசியலைப் பயன்படுத்தி 7 ஆம் வகுப்பு படித்த வரையும் கிராம சேவகர்களாக நியமித்தனர்.

படித்த அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்கும் வகையில் நாம் அவற்றில் மாற்றம் கொண்டுவந்தோம். க.பொ.த உயர்தரத்தில் சித்தி பெற்றவர்களை திறந்த போட்டிப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை மூலமே நாம் கிராம சேவகர்களைத் தேர்ந்தெடுத்துள்ளோம் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## அதீத ஆர்வம் விளைந்தது துன்பம்

சீகிரியா ஓவியங்களில் வர்ணப் பேனையால் வரைந்தமையால் கைதான கல்முனையைச் சேர்ந்த பாடசாலை மாணவி பிணையில் விடுவிக்கப்பட்டள்ளார்.

கல்வி சுற்றுலாவில் ஈடுபட்டிருந்த சந்தர்பத்தில் கடந்த வியாழக்கிழமை குறித்த மாணவி கைதுசெய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவிக்கின்றது. குறித்த மாணவியின் நடவடிக்கைகளை அவதானித்த தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், அவரைக் கைதுசெய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். கைதான 17 வயதான மாணவி நேற்றுமுன்தினம் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர், பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

## பொது வேட்பாளராக கரு ரணிலுக்கு வாய்ப்பே இல்லை

### கை நழுவிப் போவது திண்ணம்



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது, எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக கரு ஜயசூரியவை நிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார் என்றும் அவருக்கு பதிலாக கரு ஜயசூரிய போட்டியிடுவார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கரு ஜயசூரியவுக்கு, மக்கள் விடுதலை முன்னணியும் தனது ஆதரவை வழங்க உள்ளதாகவும் அக்கட்சியின் சார்பில் எவரும் போட்டியிட மாட்டார்கள் என்றும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் கரு ஜயசூரியவுக்கு ஆதரவு தெரிவிக்கவுள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றனர்.

மாதுலுவாவே சோபித்த தேரருடன் இடம்பெற்ற சந்திப்பொன்றின் போதே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் 10 ஆம் திகதியன்று ஜனாதிபதித் தேர்தல் தினம் அறிவிக்கப்பட்டதன் பின்னர் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் குறித்து அறிவிக்கப்படும் என்றும் மேற்படி தகவல்கள் மேலும் கூறுகின்றன.

# தொடரும் கொலை மிரட்டல்கள் முறையான விசாரணைக்கு கோரிக்கை

TRANSPARENCY INTERNATIONAL

(கொழும்பு)

அரச சார்பற்ற நிறுவனப் பணிப்பாளர்கள் மீதான மிரட்டல்கள் மற்றும் அச்சுறுத்தல் தொடரபில் உரிய விசாரணை நடாத்தப்பட வேண்டுமென ட்ரான் பெரன்ஸி இன்டர்நெசனல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

ஊழல் மோசடிகளை தடுத்தல் மற்றும் நல்லாட்சி ஆகியவனவற்றை வலியுறுத்தும் அமைப்பாக ட்ரான்பெரன்ஸி இன்டர்நெசனல் அமைப்பு செயற்பட்டு வருகின்றது.

இந்த அமைப்பின் பணியாளர்கள் திட்டங்கள், திட்டங்களில் பங்கேற்கும் ஊடகவியலாளர்கள் தொடர்ச்சியாக அச்சுறுத்தப்படுவதுடன் நிகழ்ச்சிகளை நடத்த விடாமல் தடுக்கபபடுவதாகவும் ட்ரான்பெரன்ஸி இன்டர்நெசனல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.ருஹகே தெரிவித்துள்ளார்.

இந்த கொலை மிரட்டல்கள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்பட வேண்டுமென பொலிஸ் மா அதிபர் என்.கே. இளங்கக் கோனிடம், ருஹகே எழுத்து மூலம் கோரியுள்ளார்.

அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தல்கள் தொடர்பில் நிறுவனத்தில் சான் விஜேதுங்கவினால் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் தெமட்டகொட பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.


ஏனைய முறைப்பாடுகள் தொடர்பில் இதுவரையில் விசாரணை நடத்தப்படவில்லை.

கிரித்தலே டியர் பார்க், நீர்கொழும்பு கோல்டன் சேன்ஸ் மற்றும் கொழும்பு கலதாரி ஹோட்டல் ஆகியவற்றில் புலனாய்வு செய்தி சேகரிப்பு தொடர்பில் நடத்தப்படவிருந்த ஊடக கருத்தரங்குகளை நடத்த விடாது தடுக்கப்பட்டதுடன், ஊடகவியலாளர்கள் கடுமையாக அச்சுறுத்தப்பட்டனர்.

ஏற்கனவே இது குறித்து முறைப்பாடு செய்துள்ளோம்.

மீண்டும் இவ்வாறான சம்பவங்கள் குறித்து உங்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

# தலதா மாளிகை மீதான குண்டுத்தாக்குதல் மேன்முறையீட்டு வழக்கு ஒத்திவைப்பு



(கொழும்பு)

கண்டி தலதா மாளிகை மீது குண்டுத் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடாபில் தண்டனை விதிக்கப்பட்ட நான்காம் சந்தேக நபர், தீர்ப்பிற்கு எதிராக செய்த மேன்முறையீட்டு வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குண்டுத் தாக்குதல் நடத்திய குற்றத்திற்காக மரண தண்டனையும், 667 ஆண்டு சிறைத்தண்டனையும், ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த தண்டனைகளுக்கு எதிராக குறித்த சந்தேக நபர் மேன்முறையீடு செய்துள்ளார்.

1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆம் திகதி இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதல் சம்பவத்தில் 15 பேர் கொல்லப்பட்டதுடன், மேலும் பத்து பேருக்கு காயங்கள் ஏற்பட்டிருந்தன.

முத்துசாமி தர்மலிங்கம் என்ற தண்டனை விதிக்கப்பட்ட நபர் பேராதனையை வதிவிடமாகக் கொண்டவர்.

தலதா மாளிகையில் வெடிக்கப்பட்ட வெடிபொருட்கள் நிரம்பிய லொறியை கண்டிக்கு கொண்டு வந்ததாக தர்மலிங்கம் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நான்காம் சந்தேக நபரான மேற்படி தர்மலிங்கத்திற்கு நீதவான் 667 வருட கடூழிய சிறைத்தண்டனை, மரண தண்டனை மற்றும் ஆயுள் தண்டனை ஆகியவற்றை விதித்திருந்தார்.

இந்த தண்டனைகளை ரத்து செய்யுமாறு தர்மலிங்கம் சட்டத்தரணியின் ஊடாக மேன்முறையீடு செய்துள்ளார்.

கடந்த 5 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்கு விசாரணை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# ஐ.நா. விசாரணைக்குழுவை நாட்டுக்குள் அனுமதியுங்கள்

### மீண்டும் ஒரு தடவை அரசிடம் கோரிக்கை

ஐக்கிய நடுகள் மனித உரிமைப் பேரவையின் விசாரணைக குழுவை இலங்கைக்கு விஜயம் செய்ய அனுமதிக்குமாறு அரசாங்கத்திடம் கோரப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் இணைய தளத்தில் ஏற்கனவே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. விசாரணைக்குழுவைநாட்டுக்குள் பிரவேசிக்க அனு மதிக்கப்பட மாட்டாது என இலங்கை திட்டவட்டமாக அறி வித்துள்ள நிலையிலும் மீண்டும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அரசாங்கத்திடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைய விசாரணைகளுக்கு இலங்கையின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முயற்சிக்கப்படும் என அறிவித்துள்ளது.

பல்வேறு வழிகளில் சாட்சியங்களைத் திரட்டி இந்த விசாரணைகள் நடத்தப்பட உள்ளதாக மனித உரிமைப் பேரவை அறிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் தரப்பினரை அடக்குமுறைக்கு உட்படுத்துவது கண்டிக்கப்பட வேண்டியது என பேரவையின் ஆணையாளர் அல் ஹுசெய்ன் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





வலி.மேற்கு பிரதேச சபையில் கடந்த 30 ஆண்டுகளாக சிரேஷ்ட நூலகராக பணியாற்றி ஓய்வுபெற்ற நாகலிங்கம் அருணகிரிநாதனின் பன்முக சேவையை பாராட்டி வலி.மேற்கு உப அலுவலகத்தின் பொறுப்பதிகாரி தலைமையில் பிரியாவிடை வைபவம் இடம்பெறுவதனையும் வலி.மேற்கு தவிசாளர் திருமதி.நா.ஐங்கரன் மற்றும் வலி.மேற்கு செயலாளர் திருமதி.உ.சாரதா ஆகியோர் பரிசில் வழங்குவதையும் காணலாம்.

– தேசிய நீர் வழங்கல் சபை –

# நவாலி வடக்கு தண்ணீர் தொட்டிக்கு குடிநீர் வழங்க முன்வரவேண்டும்



நவாலி வடக்கு குடிதண்ணீர் பொது தொட்டிக்கு கடந்த 6 மாதகாலமாக யாழ்.தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை குடிதண்ணீர் வழங்கவில்லை.

மேற்படி விடயமாக சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் உடனடியாக குடிதண்ணீர் வழங்குமாறு உத்தரவு பிறப்பித்தும் இதுவரை குடிநீர் வழங்கப்படவில்லை.

இதனால் பொதுமக்கள் பாதுகாப்பற்ற குடிதண்ணீரையே கடந்த 6 மாதகாலமாக பயன்படுத்தி வருகின்றனர்.

அத்துடன் சிறுவர்கள், முதியவர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும் பொதுமக்கள் நீண்டதூரம் பயணித்தே குடிதண்ணீர் தேவையை பூர்த்தி செய்து வருகின்றனர்.

இதேவேளை நவாலி வடக்கில் உள்ள வறியமக்கள் இந்த தொட்டிக்கு எப்போது தண்ணீர் வரும் என பொது அமைப்புக்களைக் கேட்ட வண்ணம் உள்ளனர்.

கடந்த இருவாரங்களுக்கு முன்னர் மேற்படி குடிதண்ணீர் தொட்டியை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினா பார்வையிட்டு சென்ற போதும் இதுவரை எந்த மீள்புனரமைப்பு பணியும் மேற்கொள்ளப்படவில்லை.

நவாலி பொது அமைப்பில் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்ட இக் குடிதண்ணீர் தொட்டிக்கு சுன்னாகத்தில் இருந்து பாதுகாப்பாக குழாய் மூலம் வரும் குடிதண்ணீரையே உடன் வழங்குமாறு மக்கள் கோருகின்றனர்.

மேற்படி குடிநீர்த்தொட்டியை 2011 ஆம் ஆணடு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாக கலந்து கொண்டு திறந்து வைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (05)

# தண்ணீர் பவுசர்கள் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மக்களது குடிநீர்த்தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் யூலி பவர் மற்றும் வீற்றா பவர் ஆகிய இரண்டு நிறுவனங்களும் இணைந்து 5 தண்ணீர் பவுசர்களை வடக்கு மாகாண விவசாய அமைச்சரிடம் வழங்கியுள்ளன.

அதற்கான நிகழ்வுகள் நல்லூர் சங்கிலியன் தோப்பில் நேற்று முன்தினம பி.ப 12.30 மணிக்கு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யூலி பவர் மற்றும் வீற்றா பவர் ஆகிய இரண்டு நிறுவனங்களைச் சேர்ந்த அக்பர் அலி மற்றும் மஞ்சுள பெரேரா ஆகியோர் வடக்குமாகாண சபையின் விவசாய அமைச்சரிடம் 5 பவுசர்களை கையளித்தனர்.

# மந்திகை வைத்தியசாலையில் மாணவர்களுக்கு விசேட சேவை

(பருத்தித்துறை)

மந்திகை ஆதார வைத்தியசாலையில் உளநோயாளருக்கான கிளினிக் ஒவ்வொரு செவ்வாய், வியாழக்கிழமைகளிலும் நடைபெற்று வருகிறது.

நோயாளர்கள் முற்பகல் பதினொரு மணிக்கு முன்பு தமது கிளினிக் அட்டைகளை சமர்ப்பித்து சிகிச்சை பெற முடியும்.

பாடசாலை மாணவர்களுக்கான சேவை ஒவ்வொரு சனிக்கிழமைகளில் 8.30 மணி முதல் 12 மணி வரை நடைபெறுமென தெரிவிக்கப்படுகிறது (150)

# முரசின் இன்றைய பலன்



(09.11.2014 ஞாயிற்றுக்கிழமை)

ஜய வருஷம் ஐப்பசி மாதம் 23 ஆம் திகதி.
திருதியை / சித்தம்.
ரோகிணி நட்சத்திரம் பி.ப 04.39 வரை. பின் மிருகசீரிடம்.
இராகு காலம் 04.35 - 06.05 வரை. சுபநேரம் 09.05 - 10.35 வீரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சட்டவிரோத மின்பாவனையால் தண்டம் பெறுதல். பொருட்கொள்வனவிற்காக திடீர் பயணம் ஏற்படல். சுவீப் அதிர்ஷ்டமுண்டு. |
| ரிஷபம் | பொறுப்புக்கோராமல் பணம் கொடுப்பதை மனையாள் விரும்பாமை. சகோதரருடன் ஏற்பட்ட மனத்தாங்கல் பிதா வின் சமரச முயற்சியால் சுமூகநிலை அடைதல். |
| மிதுனம் | காதலில் வீசிக்கொண்டிருந்த புயல்தணிந்து விடல் காலநிலை உவப்பாக இருக்காமையினால் பிரயாணத்தைக் கைவிடல். |
| கடகம் | மலத்தெற்று இருக்கலாம் எனச்சந்தேகப்பட்டதால் கண்டும் காணாது சென்றமையினால் ஏற்படவிருந்த எதிரியின் துயர் விலகுதல் |
| சிம்மம் | நேரத்தைப் பொன்னாகக் கருதியமையினால் வீண் பொழுது போக்க விரும்பாமை. பாரபட்சம் காட்ட முயன்றதால் வீட்டின் கவின்நிலை அற்றுப்போதல். |
| கன்னி | போலிஆபரணம் / கள்ளநோட்டுக்கள் பற்றி விழிப்பாக இருத்தல். ஆவணங்கள் எடுத்துச் செல்ல மறந்ததால் தண்டம் பெறல். |
| துலாம் | மேலதிகாரிகளுடன் சுமூகமான போக்கைக் கடைப்பிடிக்க முயலுதல். இடமாற்றம் கருணை மனுவினால் நிற்பாட்டப்படல். |
| விருச்சிகம் | மிதிவெடி அபாயகட்டம் மயிலிழையில் தப்பிவிடல். இயந்திரங்களுடன் மிக ஜாக்கிரதையாக பழகுங்கள். |
| தனுசு | கணக்கில் மோசடி செய்ததால் பதவியினின்றும் நீக்கிவிடல். காலாவதியான பொருட்கள் எனச்சந்தேகம் வலுத்ததால் கொள்வனவு செய்யாமை. |
| மகரம் | அனுபவமில்லாத தொழிலை தொடங்க வேண்டாமென மனையாள் தடுத்தல். விளம்பரத்தை நம்பி மோசம் போக முயன்றவேளை நம்பகமின்மையால் கைவிடல். |
| கும்பம் | விலக்குப்பிடித்தவேளை ஆயுதத்தினால் காயமேற்படல். மருத்துவரின் சிபார்சு இல்லாது பெற்ற குளிகையினை உட்கொண்டதால் தேகநலம் பாதிப்படைதல். |
| மீனம் | உறுதியில் ஏற்பட்ட மோசடி கண்டு துயரடைதல். பரீட்சையில் சித்தியடைந்தும் பதவி கிட்டாது விடல். |

# நோயாளர் பராமரிப்பு சேவை தெல்லிப்பளையில் ஆரம்பம்



யாழ்ப்பாணம் தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நோயாளர் பராமரிப்புச் சேவை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி மு.உமாசங்கர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி மு.உமாசஙகரும், பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி முகுந்தனும் இணைந்து நாடாவை வெட்டி ஆரம்பித்து வைத்தனர்.

தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலையின் நோயாளர நலன்புரிச் சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள மேற்படி நோயாளர் பராமரிப்புச்சேவை வடமாகாணத்திலேயே முதற்தரமாக வைத்தியசாலையோடு இணைந்த அமைப்பால் நடாத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிசங்க செயலாளரும் வலி.வடக்கு பிரதேச சபைஉறுப்பினருமாகிய லயன் சி.ஹரிகரன், நோயாளர் நலன்புரிசங்க உறுப்பினரும் வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளருமாகிய லயன் சோ.சுகிர்தன் மற்றும் நலன்புரிசங்க உறுப்பினர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், பராமரிப்புச் சேவைக்குத் தெரிவு செய்யப்பட்ட தொண்டர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (48)

# விளையாட்டுச் செய்திகள்

## களத்திற்கு வெளியில்...

உலக கிண்ண கிரிக்கெட் தொடர் எங்கள் நாட்டில் 23 ஆண்டுகளுக்குப்பின், இம்முறை நடைபெறவுள்ளது. நியூசிலாந்திலும் சில போட்டிகள் நடைபெறவுள்ளன. இந்த இரு நாட்டில் உள்ள இரசிகர்களும் உலக கோப்பை தொடருக்கு ஆதரவு தர வேண்டும்.

**கிளார்க் (ஆஸி. கப்டன்)**

ஒவ்வொரு வீரருக்கும் உலக கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்கேற்பது என்பது கனவு. இதற்கு நானும் விதிவிலக்கல்ல. தவிர, இத்தொடருக்கான அணியில் இடம்பிடிக்க கடும் போட்டி ஏற்படும் என எதிர்பார்க்கிறேன்.

**குக் (இங்கிலாந்து அணி கப்டன்)**

உலக கிண்ண கிரிக்கெட் தொடரின் முதல் போட்டியில் இந்தியாவை எதிர் கொள்வது முக்கியமானது. ஒவ்வொரு போட்டியிலும் எங்களின் திட்டங்களைச் செயற்படுத்த முயற்சிப்போம்.

**மிஸ்பா (பாகிஸ்தான் அணி கப்டன்)**

# சென். பற்றிக்ஸ், யாழ். மத்தி யாழ். இந்துவில் இன்று பலப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரியினால் நடாத்தப்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டம் இன்று மாலை 4.30 மணிக்கு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் யாழ். மத்திய கல்லூரி மற்றும் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிகள் பலப்பரீட்சையில் ஈடுபடவுள்ளன.

யாழ். மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடர் லீக் சுற்று அடிப்படையில் நடைபெற்றது. இதில் புள்ளிகள் அடிப்படையில் யாழ். மத்திய கல்லூரி, சென். ஜோண்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி அணிகள் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன.

இந்நிலையில் அரையிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன. முதலாவது அரையிறுதிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியும் சென். ஜோண்ஸ் கல்லூரி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் முதலிரு பாதி ஆட்டங்களிலும் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மோதிக் கொண்டன. பிற்பாதி இரு ஆட்டங்களிலும் ஆதிக்கம் செலுத்திய யாழ். மத்திய கல்லூரி அணி புள்ளிகளையும் வேகமாகப் பெற்றவண்ணமிருந்த நிலையில் யாழ். மத்திய கல்லூரி அணி 73-63 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் யாழ். இந்துக் கல்லூரி அணியும் மோதின. முதலிரு பாதி ஆட்டங்களும் இரு அணிகளுக்கும் மிகவும் கடுமையானதாக அமைந்திருந்தது. இதில் புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதில் இரு அணிகளும் பெரும் பிரயத்தனம் செய்தன. பிற்பாதி ஆட்டத்தில் வேகம் கொண்ட சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி புள்ளிகளைப் பெற்ற வண்ணமிருந்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் யாழ். இந்துக் கல்லூரி அணி செயற்பட்டபோதிலும் அது வெற்றிக்கான புள்ளிகளாக அமையவில்லை. நிறைவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 52-42 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் இன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் யாழ். மத்திய கல்லூரி அணியும் மோதவுள்ளன. இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். இந்துவின் பழைய மாணவர் ராஜ்குமார், சிறப்பு விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரியின் கொழும்புக் கிளையின் பழைய மாணவர் சங்கத் தலைவர் அசோகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (93)

# எழுச்சியுற முயல்வோம்

இந்திய அணிக்கெதிரான இன்றைய போட்டியில் நாங்கள் எழுச்சி பெற வேண்டிய நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கின்றோம். ஒருங்கிணைந்து செயற்பட்டு வெற்றிபெற முயற்சிப்போம் என இலங்கை அணிக் கப்டன் மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை, இந்திய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் மூன்றாவது போட்டி இன்றைய தினம் ஹைதராபாத்தில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே நடைபெற்ற இரு போட்டிகளிலும் இலங்கை அணி தோல்வியடைந்துள்ளது. இந்நிலையில் மூன்றாவது போட்டி குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே மத்தியூஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அணிக்கெதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் நாங்கள் 40 முதல் 50 ஓட்டங்கள் வரை குறைவாக எடுத்துவிட்டோம். 300 இற்கும் மேலான ஓட்ட எண்ணிக்கையைக் குவித்திருந்தால் ஆட்டத்தின் போக்கு வேறு மாதிரி இருந்திருக்கும். இந்திய அணிக்கு நாங்கள் போதுமான போட்டி அளிக்கவில்லை. முதலாவது ஒரு நாள் போட்டியில் அவர்கள் எங்களை துவம்சம் செய்தார்கள். இதேபோன்று இங்கும் அடித்து நொறுக்கி விட்டார்கள். எங்களை விட எல்லா வகையிலும் சிறப்பாக ஆடினார்கள். எஞ்சிய போட்டிகளில் நாங்கள் எழுச்சி பெற வேண்டியது அவசியம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# அல்-ஹசன் சாதனை

(டாக்கா)

சிம்பாப்வே அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணியின் சகலதுறை வீரர் ஷகிப் அல்-ஹசன் அரிய சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார்.

சிம்பாப்வே அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணியின் சகலதுறை வீரர் ஷகிப் அல்-ஹசன் முதலாவது இனிங்ஸில் ஐந்து விக்கெட்டுக்களை அள்ளியிருந்ததுடன் முதலாவது இனிங்ஸில் அவர் சதமும் (137 ஓட்டங்கள்) விளாசியிருந்தார். இந்நிலையில் இரண்டாவது இனிங்ஸிலும் ஷகிப் அல்-ஹசன் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார்.

இதன் மூலம் 137 ஆண்டுகால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரே டெஸ்டில் 10 விக்கெட்டுக்கள் கைப்பற்றியதுடன், அதில் சதமும் அடித்த 3ஆவது வீரர் என்ற அரிய பெருமையை ஷகிப் அல்-ஹசன் பெற்றார். முன்னதாக இங்கிலாந்தின் இயன் போத்தம் (114 ஓட்டங்கள், மொத்தம் 13 விக்கெட்டுக்கள்) 1980ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு எதிராகவும், பாகிஸ்தானின் இம்ரான்கான் (117 ஓட்டங்கள், 11 விக்கெட்டுக்கள்) 1983ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு எதிராகவும் இச்சிறப்பை பெற்றிருந்தனர். ஆனால் ஒரு சுழற்பந்து வீச்சாளர் இச்சாதனையை நிகழ்த்துவது இதுவே முதல் தடவையாகும்.

இது குறித்து 27 வயதான ஷகிப் அல்-ஹசன் குறிப்பிடுகையில், இப்படியொரு சாதனை இருப்பதை சில வாரங்களுக்கு முன்பு பத்திரிகையாளர் ஒருவர் என்னிடம் கூறியிருந்தார். நானும் அச்சாதனை பட்டியலில் இணைய வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்பட்டேன். அதிர்ஷ்டவசமாக இந்த டெஸ்டிலேயே அதை செய்திருக்கிறேன். நாங்கள் வலுவான அணியைக் கொண்டிருக்கின்றோம். சிம்பாப்வே அணியை குறைத்து மதிப்பிடவில்லை. பெரிய அணிகளுக்கு எதிராகவும் எங்களால் சிறப்பாக செயற்பட முடியும் என்றார்.

# மைலோ கிண்ண கால்பந்து நேற்று ஆரம்பம் முதல் போட்டியில் அண்ணா வெற்றி

(நாரந்தனை)

மைலோ கிண்ணக் கால்பந்துத் தொடரின் தீவக கால்பந்தாட்ட லீக்கிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான போட்டிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. இதன் முதல் போட்டியில் நாரந்தனை அண்ணா அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம், வடமராட்சி, வலிகாமம், தீவகம் ஆகிய கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான மைலோக் கிண்ணக் கால்பந்துப் போட்டித் தொடர் முதல் சுற்று ஆட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் தீவக கால்பந்தாட்ட லீக்கில் தெரிவு செய்யப்பட்ட பத்து அணிகளுக்கிடையிலான ஆட்டங்கள் நேற்று நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் நாரந்தனை அண்ணா அணியும் புங்குடுதீவு நண்பர்கள் அணியும் மோதின. இதில் அண்ணா அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இப்போட்டித் தொடரின் ஏனைய ஆட்டங்கள் இன்றைய தினம் நடைபெறவுள்ளதாகவும், இதில் இரு அணிகள் தெரிவு செய்யப்பட்டு இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இப்போட்டித் தொடரின் இரண்டாம் கட்டம் நாளை மறுதினம் யாழ்ப்பாண கால்பந்து லீக் அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

# கப்டன் பதவியில் கங்குலி ஆக்ரோஷம் கொண்டவர்

(புதுடில்லி)

வெளிநாட்டு மண்ணில் நாங்கள் வெற்றிபெற ஆரம்பித்தது கங்குலி தலைமையில் தான். கப்டன் பதவியில் கங்குலி மிகுந்த ஆக்ரோஷம் கொண்டவர் என சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

சச்சின் டெண்டுல்கர் பிளையிங் இட் மை வே என்ற பெயரில் சுயசரிதை எழுதியுள்ளார்.

இதில் பல்வேறு ருசிகரமான தகவல்களை தெரிவித்துள்ளார். தனக்கு கப்டனாக இருந்தவர்கள் பற்றி டெண்டுல்கர் சுயசரிதையில் எழுதியுள்ள தகவல் வருமாறு:

கப்டன் பதவியில் கங்குலி மிகுந்த ஆக்ரோஷம் கொண்டவர். விளையாட்டின் தன்மையை எளிதில் புரிந்து கொள்ளக் கூடியவர். அவரது தலைமையில் இந்திய அணி வெளிநாட்டு மண்ணில் வெற்றி பெறத்தொடங்கியது. தொடர்ந்து வெற்றிகளை பெற்றது. யுக்தியில் அவர் வல்லவர். விரைவாக முடிவுகளை எடுக்கக்கூடியவர். மனவலிமை கொண்டவர். எந்த நெருக்கடி வந்தபோதிலும் அதனைச் சளைக்காது எதிர்கொள்ளக் கூடிய வல்லமை அவரிடம் உள்ளது.

தகவல்களை தெரிவிப்பதில் கும்ளே சிறந்தவராக இருந்தார். வீரர்களுக்கு அவர் மிகவும் தெளிவாக விளக்குவார். ஆக்ரோஷமானவர். வீரர்களின் உள்ளுணர்வுகளை நம்பக்கூடியவர்.

ராகுல் பாரம்பரியமிக்கவர். அதிக மனவலிமை பெற்றவர். இதுவே அவருக்கு கப்டன் பதவியில் கூடுதல் பலமாக இருந்தது. தனது பதவியில் அவர் உறுதி கொண்டவர். ஆனால் சோதனையில் இருந்து அதிகமாக தள்ளி இருப்பவர்.

டோனி அனைவரிடமிருந்து வேறுபட்டவர். திடீரென உணர்ச்சி வசப்பட்டாலும் விரைவாக மீண்டெழக் கூடியவர். ஆட்டத்தின் தன்மையை தனது பிடியில் வைத்துக் கொள்வதில் சிறந்தவர். ஒருபோதும் அவர் பதற்றமாக இருந்தது இல்லை நெருக்கடியை சமாளிப்பதில் சிறந்தவர். வீரர்கள் அணுகுவதிலும் திறமை மிக்கவர் என்றுள்ளது.

இதேவேளை, கிரிக்கெட்டில் சாதனை மன்னனாக திகழ்ந்த சச்சின், அவரது சுயசரிதையும் விற்பனையில் உச்சத்தை தொட்டுள்ளது. சுயசரிதையை வெளியான முதல் நாளில் மட்டும் 1 இலட்சத்து 50 ஆயிரம் பேர் முன்பதிவு செய்துள்ளனராம்.



# முன்பள்ளிகளின் வருடாந்த விளையாட்டு விழா





புத்தூர் கிழக்கு விக்னேஸ்வரா முன்பள்ளி



பருத்தித்துறை விடிவெள்ளி முன்பள்ளி



வேலணை மத்திய சிறுவர் முன்பள்ளி







ஆவரங்கால் மேற்கு விவேகானந்தா முன்பள்ளி

கைதடி விநாயகர் முன்பள்ளி





# இவர்கள் இப்படியாக பேசுவது இது முதலுமல்ல, கடைசியுமல்ல!




ஐக்கிய இலங்கைக்குள் ஒரு தனியான நாட்டை அமைப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நோக்கமல்ல என்று தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா இலங்கை உயர் நீதிமன்றத்தில் 22.09.2014 இல் சத்தியக்கடதாசி ஒன்றினை சமர்ப்பித்துள்ளார்.

வட்டுக்கோட்டையில், இற்றைக்கு 38 ஆண்டுகளுக்கு முன்னதாக, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் முதலாவது தேசிய மாநாட்டில், வடக்கு கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய மக்களுக்கு "தமிழ் ஈழம்" என்ற தனியான அரசு உருவாக்கப்பட வேண்டுமென்று பிரகடனப்படுத்தப்பட்டது.

அத்துடன், அந்த மாநாட்டில் "தமிழ் ஈழ" அரசென்ற இலக்கு எட்டப்படும்வரை அஞ்சாது போரிடும் படியும் தமிழ் தேசிய இனத்துக்கும் குறிப்பாக இளைஞர்களுக்கும் அறைகூவல் விடுக்கப்பட்டது.

அன்றைய தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியில் முக்கிய இளைய தலைவராக அந்த மாநாட்டில் அங்கம் வகித்த மாவை சேனாதிராசா, இன்றைய தமிழரசுக்கட்சியின் தலைவராக, பிரிவினைக்கு எதிரானவராக, சத்தியக்கடதாசி வாயிலாக தெரிவித்துள்ளார்.

இந்த சத்தியக்கடதாசியினை இலங்கை உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நான்கு நாட்கள் முன்னதாக, தமிழரசுக்கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டமையை பாராட்டி காங்கேசன்துறை தமிழரசுக்கட்சி கிளையினால் வழங்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் உரையாற்றிய மாவை சேனாதிராசா "இன்று எமக்கு போடப்படும் மாலைகளும் பொன்னாடைகளும் எம்மை மேலும் போராட வேண்டும் என்றே தூண்டுகின்றன. போருக்கு செல்வதற்கான தூண்டுதலாகவே அவை அமைக்கின்றன. போருக்கு செல்வதற்கான ஆடை அணிகளாகவே நான் அவற்றைப் பார்க்கின்றேன்" என்று கூறியுள்ளார்.

மேலும் பேசிய அவர் "எமக்கு கிடைக்கப்போகும் தமிழீழம் எங்கு கிடைக்க வேண்டும் என்றால் எமது மண்ணில் தான் கிடைக்க வேண்டும். இதனை விடுத்து நாம் மொழியை இழந்து மண்ணை இழந்து வேறு எங்கும் பெற முடியாது" எனவும் கர்ச்சித்துள்ளார்.

கொழும்பில் ஒன்றை சொல்வதும் வடக்கு கிழக்கில் வேறொன்றை சொல்வதும் என்பது, (தமிழ் காங்கிரஸ், தமிழரசுக்கட்சியிலிருந்து இன்றைய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வரை) பாராளுமன்ற தமிழ் தலைவர்கள் காலங்காலமாக கடைப்பிடித்து வரும் கேவலமான ஒரு நடைமுறை.

2009 இல் புலிகள் அழிக்கப்படும் வரை புலிகளுடன் கூடிக்குலாவிட்டு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களில் சிலர் தாங்கள் ஒருபோதுமே ஆயுதப்போராட்டத்தினை ஆதரிக்கவில்லையெனக் கூறி, அகிம்சை வழியில் தமிழர்களின் உரிமைகளை பெற்றுத் தரப்போவதாக ஊடகவியலாளர்கள் மத்தியில் பேசுவார்கள். அத்தோடு நின்று விடாது, ஆயுதப்போராட்ட குழுக்களிலிருந்து வந்தவர்களை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்து ஓரங்கட்ட வேண்டுமென்றும் பகிரங்கமாக கூறுவார்கள்.

பின்னர் வன்னியை "வீரமண்" என்றும் புலிகளை "வீரர்கள்" என்றும் புகழ்பாடுவார்கள். இது வாக்குப் பொறுக்கி அரசியலென நீண்ட காலமாக சொல்லப்பட்டு வருகின்றது.

நான்கு நாட்கள் இடைவெளியில் போர், தமிழீழம் என்றும் பின்னர் பிரிவினைக்கு எதிராக நீதிமன்றில் சத்தியக்கடதாசி முடிக்கும் தகிடுதத்தித்தனங்களை பொதுவாகவே பாராளுமன்ற தமிழ் தலைவர்கள் "அவசியமாக" கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறையென தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்ள பழகிவிட்டார்கள்.

அதாவது சட்டப்பிரச்சனையென்று வரும்போது எதையாவது சொல்லித் தப்பிப்பதில் தவறேதுமில்லை என்ற மனோபாவம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாகத்தான் தாங்கள் வாக்குப்போட்டு பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தெற்கில் என்ன பேசுகிறார்கள், வடக்கு கிழக்கில் என்ன பேசுகிறார்கள் என்பதனை தமிழ் மக்கள் சீரெடுத்து பார்ப்பதில்லை.

உண்மையில் "தமிழீழம்" என்பது ஒரு சாத்தியமற்ற கோரிக்கை என்பது எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தில் இருந்து மாவை சேனாதிராசா வரைக்கும் நன்கு தெரிந்த விடயம். ஆனால் அந்த கோரிக்கை வைக்கும் போது, எவ்வளவு போலியாக அந்த இலக்கை இலகுவாக அடையலாமென தமிழ் இளைஞர்களை தூண்டிவிட்டு நாடகம் ஆடினார்களோ, அதே வீச்சில் சற்றும் குறையாமல் அண்மைக்காலமாக மீண்டும் நாடகம் ஆடத் தொடங்கி இருக்கிறார்கள்.

தமிழீழ மாயையில் தூண்டப்பட்டு கால்நூற்றாண்டுக்கு மேல் நீடித்த யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கானோர் மாண்டு ஐந்து வருடங்களே ஆகியிருக்கின்றன. இந்த இழப்புகளின் பின்னராவது தமிழீழக் கோரிக்கையை முன்வைத்த சூத்திரதாரிகளுக்கு ஒரு குற்ற உணர்வு வந்திருக்க வேண்டும்... வரவில்லை. தமிழ் மக்களிடம் பகிரங்க மன்னிப்புக்கோரி இருக்க வேண்டும்... இன்னும் செய்யவில்லை.

- வானவில் 45 இதழிலிருந்து.

# சொன்னார்கள்...

எனது படங்களில் நடிகர்கள் கதைக்கேற்றபடி தங்கள் உடம்பையும் மாற்றிக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பேன். இதனால், விஜய் மற்றும் அஜித் போன்ற நடிகர்கள் தயங்குவதுண்டு. ஆனால், நண்பன் படத்தில் உடம்பை வருத்த வேண்டிய பிரச்சினை இல்லாததால் விஜய் நடித்தார். அதைப்போல, "அஜித்தை வைத்தும் படம் இயக்க வேண்டும்..." என்று அவரது ரசிகர்கள் இணையதளம் வாயிலாக, கேட்டு வருகின்றனர். நான் அவரை வைத்து படம் இயக்க எப்போதும் தயார் தான்;



நான் சொல்லும் கதைக்கேற்ப அவர் மாறினால், உடனே ஆக்'ன் சொல்லத் தயாராக இருக்கிறேன்...

- ஷங்கர்

அதிகப் பாடல்கள் எழுதிய பாடலாசிரியர்கள் வரிசையில் கடந்த பத்து ஆண்டுகளாக தொடர்ந்து முதல் இடத்தில் இருப்பதில் மகிழ்ச்சி. இது பொறுப்புணர்வைக் கொடுத்திருக்கிறது. உத்வேகம் நிறைய தந்திருக்கிறது. கடந்த ஆண்டு "தங்க மீன்கள்" படத்தில் வந்த "ஆனந்த யாழை மீட்டுகிறாய்...." பாடல் இலக்கியத் தரம் வாய்ந்ததாய் அமைந்து மனதுக்குப் பிடித்தது. கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் 100இற்கும் அதிகமான பாடல்கள் எழுதும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

- நா.முத்துக்குமார்

தடைகள் இல்லாவிட்டால் வாழ்வில் ருசி இல்லை. துன்பமில்லாத வெற்றிக்கு சுவையில்லை. இரண்டு தென்னை மரங்கள் இருந்தன. ஒன்று நேராக இருந்ததாம். ஒன்று வளைந்து இருந்ததாம். இரண்டு மரங்களில் எது மனதைக் கவருகிறது என்ற கேள்வி எழுந்தது. சிலர் நேரான மரம் என்றார்கள். சிலர் வளைந்த மரம் என்றார்கள். உண்மை என்னவென்றால் நேரான மரத்தில் மனது உடனடியாக உச்சிக்கு போய் விடுகிறது. ஆனால் வளைந்த மரத்தில்தான் ஒவ்வொரு வளைவிலும் மனது உட்கார்ந்து உட்கார்ந்து போகிறது. எனவே மனதை கவருகிற வளைந்த மரம்தான் வசீகரமான மரம் என்று தீர்ப்பு சொன்னார்களாம். வாழ்வும் அப்படித்தான். வளைந்து, நெளிந்து போகிற வாழ்க்கையில்தான் ருசி அதிகம். நானும் என் எழுத்தும் இளமையாக இருப்பதாக நண்பர்கள் மேடைகளில் கொண்டாடுகிறார்கள். வாழ்வை நேசிக்கிறவன் இளமையாக இருக்கிறான். சூரியன் மிகப் பழையது. ஆனால் ஒவ்வொரு சூரியோதயமும் புதியது. நிலா மிகப் பழையது. ஒவ்வொரு சந்திரோதயமும் புதியது. பூங்கொடி பழையது பூக்கள் புதியவை. வாழ்க்கையும் அப்படித்தான். மனிதன் இயல்பாகவே குறையுடையவன். அவன் வாழ்வில் நிறைய வெற்றிடங்கள் இருக்கின்றன. அந்த வெற்றிடத்தை நிரப்புகிற முயற்சிதான் வாழ்க்கை. ஆண் பெண்ணைக் கொண்டும், பெண் ஆணைக் கொண்டும் நிரப்ப முயன்றும் அது நிறையவில்லை. அந்த வெற்றிடத்தை நிரப்ப வந்ததே கலை.

- கவிஞர் வைரமுத்து.

மனித நேயத்தையும், நல்ல செய்திகளையும் பதிவு செய்கிற படங்கள் தமிழில் குறைவாகத்தான் வந்து கொண்டிருக்கின்றன. அப்படி வரும் ஒரு சில படங்களை விரல் விட்டு எண்ணி விடலாம். "அவதார்" படத்தின் மூலம் புது உலகத்தை உருவாக்கி அதை சாத்தியப்படுத்திய கமருனை விட, அவரது மனைவி இயக்கத்தில் உருவான ஈரானிய படம்தான் அதிகப்படியான ஒஸ்கார் விருதுகளைக் குவித்தது. வெடிகுண்டுகளை அகற்றும் ஒருவனின் வாழ்க்கையைச் சித்திரித்த கதை அது. மனித உணர்வுகளை ஆண்களை விட பெண்களே அதிகமாகப் புரிந்து கொள்ள முடியும். என் மகளின் தலைமுறையின் போது வாழ்வும், அதன் சூழலும் எப்படி இருக்கும் என்பதை நினைத்துப் பார்த்தால் பயம் வருகிறது. சினிமாக்களின் பிரதிபலிப்புகள் சமுதாயத்தைப் பாதிக்கின்றன. அதனால் எல்லோரும் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டிய தருணம் இது.

- சூர்யா

50 வருட கலைப் பயணத்தில் இதுவரை 11 படங்களை மட்டுமே இயக்கி இருக்கிறேன். 16 தேசிய விருதுகள், பத்ம விருதுகள், தாதா சாஹேப் பால்கே விருது, பிரிட்டிஷ், பிரான்ஸ் எனக் கடல் கடந்தும் வந்து சேர்ந்த அங்கீகாரங்கள் மகிழ்ச்சி தந்தன. ஆனாலும் நான் எனது கிராமத்தில் அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்களுக்குக் கூடத் தெரியாமல் தனிமையில் அமைதியாக வாழவே விரும்புகிறேன். விருதுகளையும் பாராட்டுகளையும் பெரிதும் மதிக்கிறேன். ஆனால், அந்த மேடைகளை விட்டு இறங்கும் போதே, அந்த விருதுகளையும் மறந்து விடுவேன். அதனால், அந்த விருதுகள் என்னிடம் எந்த பாதிப்பையும் ஏற்படுத்துவது இல்லை. இதுவும் கூட என் தனிமைக்கும், அமைதிக்கும் காரணமாக இருக்கலாம்.

- அடூர் கோபால கிருஷ்ணன்

என் தம்பி காயன் கார்த்திக் பெரிய திறமைசாலி. வித்தியாசமாக யோசிப்பான். தம்பிக்கு நான் நிறைய பணம் சேர்த்துக் கொடுக்க வேண்டும். அதன் பின் அவன் வந்து நிறைய வித்தியாசமான சினிமாக்களில் நடிப்பான். சினிமாவுக்கு வந்தால் அவன் இடமே வேறு.

- கௌதம் கார்த்திக்

இருந்ததாம் இரண்டு மரங்களில் எது

கமருனை விட, அவரது மனைவி இயக்கத்தில் உருவான ஈரானிய

- கௌதம் கார்த்திக்

# நடேசன் எழுதிய "அசோகனின் வைத்தியசாலை"

- சுகு-ஸ்ரீதரன் -

மெல்பேர்ன் வளர்ப்பு பிராணி வைத்தியசாலை ஒன்றை பிரதான தளமாக கொண்டு இந்த நாவல் இயங்குகிறது.

மானிடம் அதனோடு இரண்டறக் கலந்த பிராணி -வாழ்வுச் சிக்கல்கள் தொடர்பான கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

வியட்னாமிலிருந்து 1970களில் சென்ற படகு மக்களில் இருந்து அவுஸ்ரேலிய பூர்வ குடிகள் உலகின் வெவ்வேறு பகுதிகளில் இருந்து வந்த மனிதர்கள் பிராணி உலகம், வரலாறு, வைத்தியம் தொடர்பான விசயாதாரங்கள் நிரம்பி வழிகின்றன.

பிராணிகளுக்கும் மனிதர்களுக்கு மிடையேயான கனதியான ஊடகம் ஒன்றின் தேடலை உணரக் கூடியதாக இருக்கிறது.

நவீன வாழ்க்கை முறைச் சவால் களை மனிதர்களும், பிராணிகளும் எவ்வாறு எதிர்கொள்வது

வைத்தியசாலையின் பல்லினப் பாங்கு, அங்கு பிராணிகளை அழைத்து வரும் மனிதர்களின் பன்மைத்தன்மை வைத்திய சாலையில் தூக்கலாகத் தெரியும் மனித நல்லியல்புகள்

எமது சமூகத்தில் நிலவும் ஆதிக்க சமூக மதிப்பீடுகள் தொடர்பாக கேள்விகளை எழுப்புகிறது.

யாழ்ப்பாண ஆதிக்க மதிப்பீடுகள் பிரதானமாக தீண்டாமையிலிருந்து கட்டியெழுப்பப்பட்டவை.

வளர்ப்பு பிராணி நேசிப்பு வாழ்க்கை தாதர நிலைகளுடனும் கலாசாரத்துடனும் தொடர்பு பட்டதாக இருக்கிறது.

மனிதர்களுக்கு நேரும் விபத்துக்கள், நோய்கள் தொடர்பாக எமது அக்கறைகள் எவ்வாறிருக்குமோ அந்த கரிசனையுடன் அந்த மெல்போர்ன் மிருக வைத்தியசாலை இயங்குகிறது.

மனிதர்களும் பிராணிகளும் இயற்கையும் ஒன்றித்த வாழ்வை வலியுறுத்துகிறது.

சிவாசுந்தரம்பிள்ளை என்ற மிருகவைத்தியருக்கு ஒரு ஆலோசகராக விமர்சகராக நண்பனாக "ஹோலிங்வுட்" என்ற பூனை அவரது பிராணி நேச ஆன்மாவை பிரதிபலிக்கிறது.

சமூகத்தில் கபடமில்லாத நல்ல மனிதர்கள் என்று சொல்லப்படுபவர்கள் யார் என்பதையும் இந்த நாவல் அனுபவங்களினூடாகச் சொல்கிறது.

எமது யாழ்ப்பாண மதிப்பீடுகளில் பல சந்தர்ப்பங்களில் ஆசாடபூதிகள் சிறந்த மனிதர்களாக சித்தரிக்கப்படுகிறார்கள்.

டாக்டர் நடேசன் புலம்பெயர்தளத்தில் தனது கடந்தகால நிகழ்கால இடையறாத தேடலில் பிராணிகள் மனிதர்கள் இடையே உன்னதமான தரிசனமொன்றைப் பெற்றுள்ளார் என்பதை இந்நாவல் நிறுவுகிறது.




## "அசோகனின் வைத்தியசாலை" நாவலில் இருந்து சில பந்திகள்

"காலம் காலமாக ஐரோப்பிய இறைச்சி வண்டிகளை இழுத்து இறைச்சிக்கடைக்காரர்களுக்கு உழைத்து வந்த இனத்தைச் சேர்ந்த நாய் ஒன்று மூட்டை போல் வண்டியில் வைத்து தள்ளப்படுகிறது.

ஏற்கனவே போஸ்ட் காட் அளவு சிவப்பு அட்டையில் கருணைக் கொலை செய்ய வேண்டும் என எழுதி பெயர் விலாசத்தோடு கையொப்பம் இட்டிருந்தார்கள். இதற்கு மேல் சுந்தரம்பிள்ளைக்கு எதுவும் செய்ய முடியாது. அவர்களது கோரிக்கையின் படி கருணைக்கொலை மாத்திரமே செய்ய முடியும். அவர்கள் பெயர் தோற்றம் பேசும் தோரணை இத்தாலி பரம்பரையில் இருந்து வந்தவர்கள் என்பதை காட்டியது.

அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டிருந்த அந்த நாயின் கண்களை பார்க்க பரிதாபமாக இருந்தது. தலையைத் தூக்க முடியாமல் கண்களை மட்டும் அசைத்தபடி படுத்திருந்தது.

அந்த சிவப்பு கார்ட்டை எடுத்து வயதை பார்த்த போது அந்த இருவர் மேல் சுந்தரம்பிள்ளைக்கு ஆத்திரம் போய் வெறுப்பு மனதில் குடி வந்தது.

நாயை வீட்டு பின் வளவில் அடைத்து உணவைக் கொடுத்து பன்றியை கொழுக் கவைப்பது போல் உடலைப் பருக்க வைப்பதன் மூலம் அவசரமாக காலைக் களத்திற்கு தள்ளியிருக்கிறார்கள்.

உணவு மட்டும் போதும் என நினைத்து உடற் பயிற்சியோ அல்லது நடக்கவைத்தோ எதுவித- முயற்சியும் இல்லாமல் வளர்த்திருக்கிறார்கள். எட்டுவயதே உள்ள அந்த நாயை தங்கள் வளர்ப்பு பிழையால் தோல் மூடிய கொழுப்பு மூட்டையாக மாற்றியிருக்கிறார்கள்.

என்ன முட்டாள்தனம் செய்திருக்கிறார்கள்?

ஐம்பது வயதில் இவர் களது உறவினர் ஒருவர் இறந்தால் எவ்வளவு கவ லையைத் தரும். நாயை வளர்ப்பது என்ற கடமையில் தவறியவர்கள் என்ற காரணத்தால் அவர்கள் மேல் வெறுப்பை வெளிக்காட்ட முடியாமல் மனம் புகைந்தான் சுந்தரம்பிள்ளை.

ஜேர்மன் நாட்டின் ரொட்வீலர் என்ற பிரதேசத்தில் இருந்து அறிமுகமான இந்த ரொட்வீலர் நாய்கள் ஆரம்பகாலத்தில மாடுகளை மேய்க்கவும் பின்பு இறைச்சி விற்பவர்களின் வண்டியை இழுப்பதற்கும் அத்துடன் ரோமானிய சாம்ராச்சியத்தின் ஆட்சிக்காலத்தில் பாதுகாப்பு பணியையும் செய்தன.

காலம் காலமாக உடலால் உழைக்கும் பாட்டாளி வர்க்கத்து நாய் இனம் தற்போது செல்லப்பிராணியாக உடற்பயற்சி அற்று வளர்க் கப்படும் போது புளி மூட்டையாகி விடுகிறது. இதனால் விரைவில் முடக்குவாதம் இரண்டு இடுப்பு மூட்டிலும் ஏற்படுவதால் நடக்கமுடியாமல் போகிறது.

ரோம சாம்ராச்சியத்து போர் வீரனோடு பக்கத்தில் கம்பீரமாக தலையையும் நெஞ்சையும் நிமிர்த்தியபடி வரும் சரித்திர காட்சிக்குப் பதிலாக அதே நாட்டுக்காரர் களால் கேவலமாக வண்டியில் வைத்து அழுக்கு துணி மூட்டை போல் தள்ளப்பட்டு கருணைக் கொலைக்காக கொண்டு வரப்படுவது உண்மையிலேயே பரிதாப- கரமான காட்சியாக இருந்தது.

சுந்தரம்பிள்ளை அந்த ரொட் வீலரை போலின் உதவியுடன் கருணைக் கொலை செய்தான். பச்சைத் திரவகத்தை உடலில் ஏற்றியதும் சுவாசத்தை இருமுறை பலமாக இழுத்து கடைசி மூச்சை வெளித் தள்ளி விட்டு அமைதியாகியது. அந்த ரொக்கி எனப் பெயர் கொண்ட ரொட் வீலர்.

இறந்த ரொக்கியோடு அந்த அறையில் தனித்து

விடப்பட்டபோது சுந்தரம் பிள்ளைக்கு இப்போது இந்த பெரிய உடலைத் தள்ளிக் கொண்டு குளிர் அறைக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் வந்தது....

அந்த குளிர் அறையின் உள்ளே பல தள்ளுவண்டி களில் லாபிரடோர், ஜேர்மன் செப்பேட் என்ற பெரிய நாய்களும் பொமரேனியன், ஜக் இரஸ்ஸல் போன்ற சிறிய இன நாய்களுமாக பல இன நாய்கள் விறைத்தபடி ஒன்றுடன் ஒன்று உராய்ந்த படியும் ஒன்றின் மேல் ஒன்றாக சமாதானமாகவும் கிடந்தன.

இவ்வளவு நாய்கள் அமைதியாக இருப்பது இந்த அறையில் தான் சாத்தியமாகிறது. இவை உயிருடன் இந்த சிறிய அறையில் இருந்தால் எப்படி இருக்கும்.

மனிதர்கள் பார்வைகளை முதற்புலனாக கொள்வது போன்று நாய்கள் மூக்கை தங்கள் முதற்புலனாக கொண்டவை. அத்துடன் இருட்டில் அவைகளின் பார்வை மனிதர்களிலும் கூர்மையானது. இந்த இரண்டு புலன்களின் தொழிற்பாடு இங்கே ஒரு மகாயுத்தத்தை உருவாக்கியிருக்கும். ஒன்றை ஒன்று அடையாளம் கண்டு யார் குழுத் தலைவர் என்பதை நிலை நிறுத்த போர் நடந்திருந்தால் நிச்சயமாக ஜேர்மன் செப்பேட் வென்றிருக்கும்.

நாய்கள் மட்டுமா? பூனைகள் இதனை அங்கீகரிக்குமா? அவைகள் தங்களுக்குள் குழுவாக கோரத தன்மையினால் என்ன நடந்திருக்கும்? பல பிணங் களாக மாறியிருக்கும் மீண்டும் இது சவ அறை தான்."

# முகத்தில் உள்ள ரோமங்கள் நீங்க...



● குப்பைமேனி இலை, வேப்பிலை, மஞ்சள் ஆகியவற்றைச் சம அளவு எடுத்து அரைத்து தேவையற்ற ரோமங்கள் உள்ள இடங்களில் தேய்க்க வேண்டும். அதே போல், வேப்பங்கொழுந்தை அரைத்தும் பூசலாம். இவ்வாறு செய்து வந்தால் நாளடைவில் தேவையற்ற ரோமங்கள் அகன்று விடும்.


● பச்சைப் பயிறை நன்றாக அரைத்து முகத்தில் தேய்த்து சிறிது நேரம் கழித்துக் கழுவ வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால், சிலருக்கு முகத்தில் காணப்படும் தேவையற்ற ரோமங்கள் உதிர்ந்து விடும். தினசரி மஞ்சள் தேய்த்து குளித்து வருவதாலும், முகத்தில் ரோமங்கள் வளராது.

# சிங்கத்தைக் காட்டில் பார்த்திருக்கிறீர்களா?

சிங்கங்கள் இன்று ஆபிரிக்காவிலும் இந்தியாவிலும் உள்ள காடுகளில் மட்டுமே காணப்படுகின்றன.

ஆண்சிங்கங்களிலும் பார்க்க பெண்சிங்கங்களே சுறுசுறுப்பாக திறமை யாக வேட்டையாடுவன.

ஆண்சிங்கங்கள் தன்னைச் சுற்றியுள்ள இடத்தை பாதுகாப்பதிலும் மற்றைய சிங்கங்களை விரட்டுவதிலுமே ஈடுபடும். தன் கூட்டத்துக்கு என்று ஒரு எல்லையை உருவாக்கி வைத்துக் கொள்ளும். இதனை தன் வட்டத்தினுள் மலம், மூத்திரம் கழிப்பதன் மூலமும் கர்ஜிப்பது மூலமும் தன் நகத்தால் மரங்களில் கீறியும் இது தன் எல்லை என மற்ற சிங்கங்களுக்கும் ஏனைய பெரிய ஊனுண்ணிகளுக்கும் தெரிவிக்கிறது.



இளம் ஆண் சிங்கங்கள் கிடையில் இருந்து விரட்டப்பட்டு அவை தன்னையொத்த வயது சிங்கங்களுடன் இணைந்து ஒன்றாக வேட்டையில் ஈடுபடும். இவை ஒன்றாகத் திரிவதால் வேட்டை இலகுவாகிறது. ஒரு வேட்டை கிடைத்து நன்கு உண்ட சிங்கம் பின்னர் பல நாட்களுக்கு வேட்டையாடுவதில்லை.

ஆண் சிங்கங்களின் சராசரி ஆயுட்காலம் 12 வருடங்களும் பெண் சிங்கங்களின் சராசரி ஆயுட்காலம் 16 வருடங்களும் ஆகும். ஒரு கூட்டத்தில் ஒரு வயது முதிர்ந்த ஆண் சிங்கமே இருக்க வேண்டும் என்பதால் தலைவனான ஆண் சிங்கம் 10 வயது வருவதற்குள்ளாகவே அக்குழுவில் உள்ள மற்ற இளைய சிங்கத்தோடு சண்டையிட்டு இறக்கவோ அதிக காயத்திற்குள்ளாகவோ ஆக்கப்படுகிறது.

கூட்டத்தில் இருந்து விரட்டப்படும் சிங்கம் தன் வயது முதிர்ச்சியால் வேட்டையாடுவதற்கு மிகவும் சிரமப்படும். இதனால் வலிமை இழந்த சிங்கம் மிகவும் ஒல்லியாகவும் பலவீன மாகவும் இருப்பதால் வேட்டையாடப்படும் எளிய விலங்குகளாலேயே சில சமயங்கள் கொல்லப்படுகின்றன.

ஆனால் பெண் சிங்கம் வயது முதிர்ச்சி அடைந்தாலும் கூட்டத்தில் ஒன்றாகவே இருக்கும். பூனை போன்று பெண் சிங்கந்தான் ஆண்சிங்கத்தின் முன்னால் படுத்தபடி உறவு கொள்ள அழைக்கும். ஆனால் உடலுறவில் ஆண்சிங்கத்தின் குறியில் உள்ள முள்ளுப் போன்ற குத்தும் தன்மையினால் காயப்பட்டு சீற்றமடைந்து முன்காலால் ஆண்சிங்கத்தை அடிக்கும். மேலும் அந்த ஆண் குறியில் உள்ள முள்ளுகள் அடிக்கடி பெண்குறியில் படும்போதே பெண்ணின் சூலகம் முட்டையை வெளித்தள்ள உதவும். இதனால் சிங்கங்கள் அடிக்கடி உடலுறவு கொள்ளும்.

சிங்கங்களும் நாய் பூனையைப்போல் நிறங்களை பகிர்ந்தறிய முடியாதவை. ஆனால் இரவுப்பார்வைக்கு சிறு அசை வையும் மிகத் தெளிவாக புரிந்து கொள்ள அவற்றின் கண்களில் உள்ள சிவப்புக்கலங்கள் உதவுகின்றன. இதனால் பெரும்பாலானவை இரவிலேயே வேட்டையாடும்.





மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையின் நிறுவுநர் தினமும் பரிசில் வழங்கலும் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வின்போது விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும், பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சந்திரராஜா மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (48)

# அபிவிருத்தி அரசியலை விமர்சித்தவர்கள் இன்று தலைகுனிந்து செல்கின்றனர்

## நாடாளுமன்றில் அலன்ரின் எடுத்துரைப்பு



ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த வரவு செலவுத்திட்டத்தில் எமது மக்களுக்குப் பயன்படத்தக்க பல அரிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன்.

இந்த வரவு-செலவுத்திட்டத்தின் ஊடாக எமது மக்களின் முன்னேற்றமும் எமது பிரதேசங்களின் அபிவிருத்தியும் சிறந்து விளங்கவேண்டும் இந்த வகையில் இந்த வரவு- செலவுத்திட்டத்தை நாம் பயன்படுத்திக் கொள்வோம்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) நாடாளுமன்ற குழு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

மேற்படி விடயமாக அலன்ரின் தெரிவிக்கையில், யாழ்ப்பாண தேர்தல் மாவ்ட்டத்தில் நெடுஞ்சாலைகள் மற்றும் மின்வலு எரிசக்தி பெற்றோலியக் கைத்தொழில் தொடர்பாக நிலவுகின்ற முக்கிய விடயங்களை பொறுத்தவரையில் யாருமே எதிர்பாராத வகையில் நாட்டின் ஏனைய பகுதிகளுடன் நெடுஞ்சாலைகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த வீதிகளின் பயனை வட பகுதி மக்கள் இன்று முழுமையாக அனுபவிக்கின்றனர்.

எமது அபிவிருத்தி அரசியலை விமர்சித்தவர்கள் இன்று தலைகுனியும் வகையில் இந்த வீதிகள் சான்று பகிர்கின்றன.

ஆனால் இன்னும் யாழ்ப்பாணத்திலும் வன்னிப்பகுதியிலும் சில வீதிகள் புனரமைக்கப்பட வேண்டியுள்ளன. பருத்தித்துறையில் இருந்து சுண்டிக்குளம் வரையான வடக்கு கிழக்கு கடற்கரை வீதி,நெல்லியடி-கொடிகாமம் வீதி, சாவகச்சேரி ஆனையிறவு வீதி ஆகியன அவசியமாகப் புனரமைப்புச் செய்யப்படவேண்டியுள்ளன.

இதைப் போல கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதான நெடுஞ்சாலையாக இருக்கின்ற முறிகண்டி வலைப்பாடு வீதியில் அக்கராயனுக்கும் வலைப்பாட்டுக்கும்இடைப்பட்ட வீதியும் அக்கராயன் -கிளிநொச்சி வீதியும் முழுமையாகப் புனரமைப்புச் செய்யப்படவேண்டியுள்ளன.

இந்த இரண்டு வீதிகளும் மாகாணசபையின் நிர்வாகத்தின் கீழ் இருந்தாலும் இவற்றை சிறப்பு நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனரமைப்புச் செய்யவேண்டும்.

ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தபோது இந்த விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டதை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்த வீதிகள் அனைத்தையும் புனரமைப்புச் செய்தால் மக்களின் போக்குவரத்தை இலகுவாக்குவதுடன், மக்களின் பொருளாதார அபிவிருத்திக்கும் உதவ முடியும் அது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும், அடுத்ததாக துறைமுகங்கள் தொடர்பாக என்னுடைய கவனத்தை முன்வைக்க விரும்புகிறேன்.

காங்கேசன்துறைதுறைமுகம், பருத்தித்துறை துறைமுகம் ஆகிய இந்த இரண்டு துறைமுகங்களும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். என்று இந்தச் சபையிலே கேட்டுக்கொள்கிறேன்.

வடபகுதியில் ஒரு துறைமுகமாவது சீரான முறையில் இயங்குவது அவசியமாகும். கடந்த யுத்தகாலத்தில் இந்தத் துறைமுகங்களே யாழ்ப்பாணத்துக்கான சகல வழங்களைச் செய்து வந்தன என்பதை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்ததாக சிவில் விமானச் சேவையைப்பொறுத்தவரையில் பலாலி விமான நிலையம் சிவில் பயன்பாட்டுக்கு முற்றுமுழுதாக மாற்றியமைக்கப்படவேண்டும். யாழ்ப்பாணத்துக்கும் இந்தியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் பிற நாடுகளுக்குமான பயணம் இன்று அதிகரித்துள்ளது.

வடபகுதியைச் சேர்ந்த இலட்சக்கணக்கான மக்கள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கிறார்கள்.

இவர்கள் எமது மண்ணுக்கு வருவதற்கும் பொருளாதார முதலீடுகளைச் செய்வதற்கும் ஏற்ற வகையில் குறுகிய நேரப்பயணத்தை மேற்கொள்வதற்காக இந்த விமான நிலையம் உதவும்.

ஆகவே இதனைச் சாதகமாகப் பரிசீலிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பலாலி விமான நிலையம் மீண்டும் சிவில் மயப்படுத்தப்பட்டால் வடபகுதியின் பொருளாதாரம் மட்டுமல்ல. நாட்டின் பொருளாதாரமும் மேம்படும்.

யுத்தம் முடிவடைந்த பிறகு மீண்டும் பலாலி விமான நிலையம் தங்களின் பயன்பாட்டுக்கு உரியதாக கிடைத்து விடும் என்று மக்கள் நம்பினார்கள். அந்த நம்பிக்கையை நாம் பாதுகாக்க வேண்டும் என்றார் சி. அலன்ரின்.

# அளவெட்டி வாசிக்கு அடித்தது அதிர்ஷ்டம்

(திருநெல்வேலி)

சுப்பிரிவாசனா சம்பத அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் அளவெட்டி வாசியொருவருக்கு ரூபா 50ஆயிரம் பணப்பரிசாகக் கிடைக்கப் பெற்றுள்ளது.

மூன்று இலக்கங்களும் போனஸ் இலக்கமும் பொருந்தியதினால் கடந்த 5ஆம் திகதி புதன்கிழமை அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டிழுப்பில் இவர் இப்பரிசுக்குரியவரானார்.

சுன்னாகம் காங்கேசன்துறை வீதியில் அதிர்ஷ்ட சீட்டுக்கள் விற்பனை செய்யும் வைத்திலிங்கம் நடராசா என்பவரிடம் இவ்வதிர்ஷ்ட சாலி இச் சீட்டினைப் பெற்றிருந்தார்.

சுன்னாகத்தில் அடிக்கடி பல அதிர்ஷ்டசாலிகள் உருவாகியுள்ளார்கள் அவர்களில் அதிகளவிலானோர் இவ் விற்பனையாளரிடமே அதிர்ஷ்டச் சீட்டுக்களை வாங்கியிருந்தனர் என்பதுகுறிப்பிடத்தக்கது. (137)

# ஆசிரியர் விபரம் திரட்டப்பட்டது

(நெல்லியடி)

வலிகாமம் வலயத்தில் வன்னிப்பகுதியில் கடமையாற்றாத ஆசிரியர்களுக்கான கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் யாழ். இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் வலிகாமம் வலயத்திற்குட்பட்ட ஆசிரியர்களில் 45 வயதுக்கு உட்பட்ட வன்னியில் இதுவரை கடமையாற்றாத ஆசிரியர்களின் விபரங்கள் திரட்டப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (17)

# கருத்தரங்கு

பிரிட்டிஷ் கவுன்சிலின் யாழ் கிளையில் நூல் வெளியீட்டாளர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

இலங்கை நூல் வெளியீட்டாளர் சங்கத்தலைவர் விஜித யாப்பா தலைமையில் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9.00மணி முதல் 1.00 மணி வரை இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் பங்கு பற்றுவோருக்கு 2015ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெறவுள்ள சர்வதேச புத்தக கண்காட்சியில் இலவசமாக காட்சியறை அமைப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்படுமென பிரிட்டிஷ் கவுன்சில் யாழ் கிளை தெரிவித்துள்ளது. 2014 ம் ஆண்டு நடைபெற்ற நூற்கண்காட்சியில் பல இலட்சக்கணக்கான உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது

# சிறப்பு கருத்துரையுடன் யோகா பயிற்சி ஆரம்பம்

யாழ் யோகா அரங்கத்தினர் நடாத்தும் மாலை நேர யோகா பயிற்சிக்கான அறிமுக நிகழ்வு நல்லூர் தேரடி அருகே அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் இன்று மாலை 5.00மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அரசவிருது பெற்ற பிரபல சோதிடர் V.A. சிவராசா 'சோதிடமும் யோகாசனமும்' என்னும் தொனிப் பொருளில் சிறப்புக் கருத்துரையை வழங்குவார். யோகா பயிற்சிகள் மாலை 5.00மணி தொடக்கம் 6.00 மணிவரை இரண்டுமாதங்கள் தினமும் நடைபெறும். சூரியநமஸ்காரம், யோகாசனம், பிராணாயாமம், தியானம் மற்றும் தளர்வுப் பயிற்சிகள் அனுபவமுள்ள ஆசிரியர்களால் சிறப்பாக பயிற்றுவிக்கப்படுவதுடன் கையேடுகளும் யோகாசன செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும் ஆர்வமுள்ள அனைவரும் இணைந்து பயன்பெற முடியுமென்று யாழ். யோகா அரங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

# சென். ஜேம்ஸ் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு



'நாம் நண்பர்கள்'அமைப்பின் ஏற்பாட்டில் கல்வியின் வறுமையினை ஒழிப்போம் என்ற தொனிப் பொருளில் 'புத்தகப் பை சவால்' மூலம் சேகரிக்கப்பட்ட கற்றல் உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு அங்கமாக கடந்த 30ஆம் திகதி யாழ்ப்பாணம் குருநகர் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் கல்விகற்கும் 50மாணவர்களுக்கு தேவையான கற்றல் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

பாடசாலைச் சமூகம் விடுத்த வேண்டுகோளை ஏற்று அவர்களின் தேவைப்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்து இக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து வரும் காலங்களில் உதவிகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்கள் காட்டும் அடைவு மட்டங்களின் அடிப்படையில் உதவிகள் தொடர்ந்து வழங்கப்படவுள்ளதாகவும் நாம் நண்பர்கள் அமைப்பினர் தெரிவித்தனர்.

குருநகர் சென் ஜேம்ஸ் மகா வித்தியாலய அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் நாம் நண்பர்கள் அமைப்பினர் கலந்து கொண்டு கற்றல் உபகரணங்களை அன்பளிப்பு செய்தனர்.

இந் நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர் ஆசிரியர்கள் உள்ளிட்டவர்களும் கலந்து கொணடிருந்தனர். (48)

# பாரிய அபிவிருத்திகளை முன்னெடுத்து சாதனை படைக்கிறது; யாழ். பல்கலை

### ஊடகவியலாளர் சந்திப்பில் வசந்தி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

பல்வேறு மூலகங்களூடாக எமக்கு கிடைக்கப்பெற்ற நிதியைக் கொண்டு பாரிய அபிவிருத்திகளை முன்னெடுத்து வருகின்றோம்.

குறிப்பாக உலக வங்கி மற்றும் ஏனைய மூலங்களின் ஊடாக பெறப்பட்ட 268 மில்லியன் நிதி ஊடாகவே இந்த அபிவிருத்திகளை முன்னெடுத்து வருகின்றோம் என யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் 30 ஆவது பொது பட்டமளிப்பு விழா குறித்து இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வருடம் திறக்கப்பட்ட கிளிநொச்சி பொறியியல் பீடத்தில் தற்போது 50 மாணவர்கள் கற்கிறார்கள். அவர்களுக்கான விடுதி வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. மேலும் 2 விடுதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதுதவிர கற்றலுக்கான வசதிகளும் செய்யப்படுகின்றது.

தற்போது பொன்னகரில் பாரிய கிணறும் பாரிய நீர்த்தாங்கியும் அமைக்கப்பட்டு வருகின்றது.

எதிர்காலத்தில் இங்கு விவசாய பீடத்திற்கான செய்முறைகளை மேற்கொள்ள வசதியாகவும் 400 மாணவர்கள் தங்கியிருக்கக்கூடிய வகையில் விடுதிகளும் அமைக்கப்படுகின்றன.

மேலும் அதற்கான நீர் வசதியும் மேற்கொள்ளப்படவுள்ளதுடன் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியை தற்போது பல்கலைக்கழகம் உள்வாங்கி நடனம், சங்கீதம், சித்திரமும் வடிவமைப்பும் என்ற 3 கற்கைநெறிகள் இடம்பெறுகின்றன.

இதை உயர்நிலைக்கு கொண்டுசெல்ல நான்காவது கற்கைநெறியாக நாடகமும் அரங்கியலும் இணைக்கப்பட்டு உத்தியோகபூர்வமாக இதை ஆரம்பிக்கவுள்ளோம்.

அதேபோல் சித்தமருத்துவத் துறை நேரடியாக துணை வேந்தரின் நேரடிக் கண்காணிப்பில் உள்ளது. இது யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தின் கீழ் தற்போது கொண்டுவந்து அதற்கான அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கென 5 மாடிக் கட்டடம் ஒன்றும் அமைக்கப்பட்டு வருவதுடன் மாணவர் விடுதிக்காக காணியும் கொளவனவு செய்யப்படவுள்ளது.

முன்னர் இருந்த வர்த்தகத் துறையை மீண்டும் நாம் வியாபாரத்துறையும் வர்த்தகமும் என்று ஆரம்பித்துள்ளோம். இதற்கு 75 மாணவர்களும் உள்வாங்கப்பட்டுள்ளனர். ஊடகத் துறை கற்கைநெறி 2009 இல் ஆரம்பிக்கப்பட்டபோதும் தற்போதுதான் அதற்கான அனுமதியும் மொழிபெயர்ப்புக்குரிய பட்டப்படிப்புக்கான அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக ஏனைய பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளன என்றார் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம். (இ)

## கைதடி அரச முதியோர் இல்லத்துக்கு ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் விஜயம்

(திருநெல்வேலி)

ஓய்வு பெற்ற இலங்கை வங்கியின் உத்தியோகத்தர்கள், சங்க உறுப்பினர்கள் சுமார் 40 பேர் கடந்த வியாழக்கிழமை கைதடி அரச முதியோர் இல்லத்திற்கு வருகைதந்தனர்.

பௌர்ணமி தினத்தில் இல்லத்துக்கு விஜயம் செய்த இவர்கள் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணிவரை அங்கு தங்கியிருந்து இல்ல முதியவர்களுக்கு மதிய போசனம் அளித்து மகிழ்ந்தனர்.

பொக்கிஷம் என்னும் குறுநாடகம் ஒன்றையும் உத்தியோகத்தர்கள் நடாத்தி இல்ல முதியவர்களை மகிழ்வித்தனர்.

இலங்கை வங்கியின் 75ஆவது ஆண்டு நிறைவையொட்டி முதியோர் இல்ல அத்தியட்சகர் த. கிருபாகரன் தலைமையில் இல்லத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

ஓய்வு பெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்சங்க உறுப்பினர்களும், இல்லத்தை சேர்ந்த முதியவர்களும் இந்நிகழ்வின் மூலம் பெரும் பயனை அடைந்துள்ளதோடு பல அனுபவப்பகிர்வுகளையும் பெற்றுக்கொண்டனர். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(137)


## மானிய உர விநியோகம் வியாழனன்று கிடைக்கும்

சந்திரபுரம் விவசாயிகளுக்கு காலபோகத்திற்கான 2ஆம், 3ஆம் கட்ட மானிய உர விநியோகம் எதிர்வரும் வியாழக்கிழமை வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கைதடி கமநலசேவை நிலையத்தில் காலை 8.30 மணி முதல் மாலை 3.30 மணிவரை இம் மானிய உர விநியோகம் இடம்பெறவுள்ளதாகவும் பயனாளிகள் தவறாது உரத்தைப் பெற்று கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பாடசாலை மட்ட விவாதப் போட்டியில் கிளி.மத்திய மகாவித்தியாலயம் முதலிடம்

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் செயற்பாடுகளை சமூகமயப்படுத்தும் வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட விவாதப் போட்டியில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.



கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டியில் கிளி. முருகானந்தா கல்லூரியுடன் நடாத்தப்பட்ட இறுதிப் போட்டியில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் மாகாண மட்டப் போட்டிகளுக்குச்செல்ல உள்ளதுடன் மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றமைக்காக மிக விரைவில் கொழும்பில் வைத்து ஜனாதிபதியிடம் 25000 ரூபா பணப் பரிசிலையும் பெறவுள்ளனர்.

கிளி.புனித சென் திரேசா மகளிர் கல்லூரி மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

## பதிவிறக்கப் பெட்டகம்

"கப்பல் மூழ்குவது போன்ற ஆபத்தான நிலைமையில் இருக்கு. நாம் ஆறு பேரும் தப்பணும். இங்கு உள்ளவர்களில் யாருக்கு கடவுளிடம், நல்லா பிரார்த்தனை செய்யத் தெரியும்?" என்று கேட்டார் கப்பலின் கப்டன்.

உடனே, "நான் நல்லா பிரார்த்தனை செய்வேன் கப்டன்" என்று ஒருவர் பிரார்த்தனை செய்ய முன்வந்தார்.

"நல்லது... நீங்கள் பிரார்த்தனை செய்யுங்கள்... ஐந்து ஃலைப் பெல்ட்கள்தான் இருக்கிறது நாங்கள் பயன்படுத்திக் கொள்கிறோம்" என்றார் கப்டன்.

*** *** *** ***

மனநோய் மருத்துவமனை. மூன்றாம் அறையில் ஒரு வாலிபன் "மாலினி... மாலினி' என்று நடந்து புலம்பிக் கொண்டிருந்தான். பார்வையாளர் ஒருவர் டாக்டரிடம் விளக்கம் கேட்டார். "இவன் மாலினி என்ற பெண்ணை உயிருக்குயிராய் காதலித்தான். ஆனால் கல்யாணம் பண்ண முடியவில்லை. அதனால் அந்தத் துக்கத்தைத் தாங்க முடியாமல் இப்படி ஆகிவிட்டான்" என்றார் டாக்டர்.

எட்டாம் அறையில் இருந்த இளைஞன் ஒருவனும் சுவரில் தலையை மோதிக் கொண்டு "மாலினி... மாலினி' என்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தான்.

"ஐயோ... பாவம். இவனும் அந்த மாலினியைக் காதலித்தானா? என்று பார்வையாளர் கேட்டார்.

"இல்லை. இவன் அந்த மாலினியைக் கல்யாணம் செய்து கொண்டவன்" என்றார் டாக்டர்.

*** *** *** ***

ஓர் உணவகத்தின் வெளியே பலகையில், "நீங்கள் சாப்பிட்டதற்கான பில் உங்களுடைய பேரன்களிடம் வசூலிக்கப்படும்' என்று எழுதியிருப்பதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்த இரு நண்பர்களில் ஒருவன், "வா மச்சான். ஒரு வெட்டு வெட்டலாம். நமக்கு எப்ப கல்யாணமாகி, எப்ப பிள்ளை பிறந்து, எப்ப பேரன் பேத்தி எடுக்கிறது?" என்று கூறி உணவகத்தின் உள்ளே நுழைந்து, ஆளுக்கு 1000 ரூபாய்க்குச் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தவர்களிடம், பில்லை நீட்டினார் முதலாளி.

அது 2 ஆயிரம் ரூபாய்க்கான பில்.

"இது அநியாயம். நாங்கள் சாப்பிட்டதை எங்களுடைய பேரன்களிடம் தானே வசூல் பண்ண வேண்டும்? அப்படித் தானே எழுதியிருக்கிறீர்கள்?" என்று ஒரு நண்பன் கத்தினான்.

உணவக முதலாளி சொன்னார்: "இந்த பில் நீங்கள் சாப்பிட்டதற்கான பில் அல்ல. உங்களுடைய தாத்தாக்கள் சாப்பிட்டதற்கான பில்"

*** *** *** ***

ஆசிரியர் மாணவனிடம், "ஆயிரம் ரூபாயை நூற்றுக்கு 2 வட்டி வீதம் ஆண்டுத் தவணைக்கு உன் அப்பாவிடம் கொடுத்தால் அசலும் வட்டியுமாக எவ்வளவு திருப்பித் தருவார்?" எனக் கேட்டார்.

மாணவன் "ஒன்றுமே தரமாட்டார்" என்றான்.

ஆசிரியர் "உனக்குக் கணக்கே தெரியவில்லை" என்றார் கோபமாக.

மாணவனோ, "உங்களுக்கு என் அப்பாவைப் பற்றித் தெரியவில்லை சேர்" என்றான் அமைதியாக.

*** *** *** ***

ஒருமுறை இங்கிலாந்து பாராளுமன்றத்தில் வில்லியம் ஜோன்சன் எனும் உறுப்பினர் எதைப் பற்றியோ ஆணித்தரமாக பேசிக் கொண்டிருந்த போது, சேர்ச்சில் அதை மறுக்கும் பாவனையில் தலையை ஆட்டிக் கொண்டிருந்தார். அதைப் பார்த்த வில்லியம், 'நீங்கள் ஏன் மறுத்து தலையை ஆட்டுகிறீர்கள் நான், என் சொந்த கருத்தைத் தானே சொல்லிக் கொண்டிருக்கிறேன்...' என்றார்.

அதற்கு சேர்ச்சில், 'நான், என் சொந்தத் தலையைத் தானே ஆட்டிக் கொண்டிருக்கிறேன்...' என்றார்.

*** *** *** ***

ஜோர்ஜ் சிமின் என்பவர், ஒரு பிரெஞ்ச் எழுத்தாளர். எந்த நாவலையும் படுவேகமாக எழுதி முடித்து விடும் அசுர எழுத்தாளர். இவர் தன், 158வது மர்ம நாவலை எழுதிக் கொண்டிருந்த போது, திகில் பட மன்னன் ஹிட்ச்கொக் அவருடன் பேச விரும்பி, அமெரிக்காவிலிருந்து போன் செய்தார். போனை எடுத்த சிமின் மனைவி, 'அவர் மும்முரமாய் எழுதிக் கொண்டிருக்கிறாரே..' என்றார்.

'பரவாயில்லை. அவர் புத்தகத்தை எழுதி முடிக்கட்டும் நான் லைனிலேயே இருக்கிறேன்...' என்றாராம், ஹிட்ச்கொக்!

# மன்னர் ஆட்சிக்காலத்திலும் மனித உரிமைகள் பேணப்பட்டன

## எப்போதுமே சோடை போகாத நாடு



மன்னர் ஆட்சிக்காலம் தொடக்கம் எமது நாட்டில் அனைத்து மனிதர்களுக்கும் வாழ்வதற்கான உரிமை உண்டு என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பிரதிபா மஹானாமஹேவா தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். தகவல் அறிந்து கொள்ளும் உரிமையானது தற்போது சர்வ தேசமயமான ஓர் எண்ணக் கருவாக மாற்றம் பெற்றுள்ளது.

கடந்த காலங்களில் மனித உரிமை தொடர்பில் எவரும் பேசியதில்லை. தற்போது மனித உரிமை பற்றிய விவகாரங்கள் நாள் தோறும் பேசப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அனைத்து மனிதர்களும் வாழ்வதற்கு உரிமை உண்டு எனவும், பௌத்த, இந்து, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மதங்கள் சமத்துவம் வாழ்வதற்கான உரிமை மனித நேயம் பற்றியே போதிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பண்டைய மன்னர்கள் ஆட்சி நடத்திய காலத்திலும் இலங்கையில் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்பட்டமையை எமது வரலாற்றின் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

தகவல்களை அறிந்துகொள்ளும் உரிமை மிகவும் முக்கியமானது. இலங்கையில் அந்த உரிமை உறுதிப்படுத்தப்பட வில்லை.

உதாரணமாக கலிபோர்னியாவின் கோல்டன் கேட் பாலம் தொடர்பிலான உண்மையான விபரங்கள் மக்களுக்கு அம்பலபடுத்தப்பட்டுள்ளது.

பாலத்தின் நிர்மாணப் பணிகளின் போது காவுகொள்ளப்பட்ட உயிர்களின் எண்ணிக்கை, நிர்மாணப் பணிகளுக்கான செலவுகள் உள்ளிட்ட விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும், இலங்கையில் இவ்வாறான தகவல்கள் பொது மக்களுக்கு வழங்கப்படாத நிலைமை தொடர்ந்தும் நீடித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

# மூன்று சிறுவர்கள் உறவினர்களிடம் ஒப்படைப்பு

(கொஸ்லாவத்தை)

கொஸ்லாந்தை, மீரியபெத்தயில் மண்சரிவினால் பெற்றோரை இழந்த மூன்று பிள்ளைகள், அவர்களின் நெருங்கிய உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைய மூன்று பிள்ளைகளும் நெருங்கிய உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

பெற்றோரை இழந்த மூன்று சிறுவர்கள் குறித்து தொடர்ந்து கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

மண்சரிவினால் இடம்பெயர்ந்துள்ள பிள்ளைகளை இயல்புநிலைக்கு கொண்டுவரு வதற்கு தேவையான செயற்பாடுகள் முன்னதாகவே முன்னெடுக்கப்பட்டு வருவதாக அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்பொருட்டு விசேட உத்தியோகத்தர்கள் குழுவொன்று இடம்பெயர் முகாம்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, மீரியபெத்தயில் மண்சரிவில் சிக்குண்டவர்களை மீட்கும் பணிகள் பிரதேச மக்களின் ஒத்துழைப்புடன் இன்றும் முன்னெடுக்கப்படும் என இராணுவம் குறிப்பிடுகின்றது.

சீரான வானிலை நிலவுமிடத்து, மீட்புப் பணிகளை துரிதமாக மேற்கொள்ள முடியுமென மத்திய பாதுகாப்பு கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மனோ பெரேரா தெரிவித்தார்.

பிரதேச மக்களின் தகவல்களுக்கு அமைய, மீட்புப் பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்படுகிறது.

கடந்த 10 நாட்களாக முன்னெடுக்கப்பட்ட மீட்புபணிகளில் இதுவரை 11 சடலங்களும், மேலும் சில உடற்பாகங்களும் மீட்கப்பட்டதாக மேஜர் ஜெனரல் மனோ பெரேரா மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

வடபகுதி கடற்பரப்பினுள் பிரவேசித்த குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் 24 பேரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதவான் எஸ். லெனின் குமார் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து, அவர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை இம் மீனவர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்டெம்பர் மாத இறுதியில் நான்கு படகுகளுடன் மாதகல்லை அண்மித்த கடற்பரப்பில் கைதான 16 இந்திய மீனவர்கள் யாழ் மாவட்ட கடற்றொழில் அதிகாரிகளால் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டிருந்தனர்.

இதுதவிர எரிபொருள் தீர்ந்த நிலையில் நெடுந்தீவில் கரையொதுங்கிய நான்கு இந்திய மீனவர்களும், அண்மையில் கடும் காற்றினால் கச்சத்தீவு பகுதியில் கரையொதுங்கிய 4 மீனவர்களும் நெடுந்தீவு பொலிஸாரினால் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர்.

தமிழக மீனவர்களின் விளக்கமறியல் மூன்றாவது முறையாகவும் இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# தமிழக அகதிகள் நாடு திரும்ப உதவி வழங்கத்தயார்

## எஸ்.சி.சந்திரஹாசன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் நாடு திரும்ப விரும்பினாலும் அதற்கான உதவிகளை வழங்க தாம் தயார் என்றும் தமிழகத்தில் வாழும் தமிழ் அகதிகள் இலங்கைக்கான சொத்துக்கள் என்று இலங்கை அகதிகள் புனர்வாழ்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பின் தலைவர் எஸ்.சி.சந்திரஹாசன் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த அவர் இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளில் 3500 பட்டதாரிகள் இருப்பதாக குறிப்பிட்டார்.

அவர்கள் இலங்கையை பொறுத்தவரை சொத்துக்கள் என்றும் அவர் கூறினார்.

இந்தநிலையில் அகதிகள் யாவரும் நாடு திரும்புவதற்கு தமது அமைப்பு உதவும் என்றும் சந்திரஹாசன் குறிப்பிட்டார்.

இதன்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஆற்றிய உரை ஒன்றில் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் நாடு திரும்பவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தமையை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவில் தற்போது சுமார் ஒரு லட்சம் அகதிகள் முகாம்களிலும் வெளியிடங்களிலும் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது

## தினமுரசுக்கு வந்த கடிதம்

# பேரழிவை சந்தித்த சண்டிலிப்பாய் விவசாயிகளுக்கு நிவாரண நிதி கிடைக்குமா?

- பிரதி ஆணையாளர் நடவடிக்கை எடுப்பாரா -

2013 ஆம் ஆண்டு வலி.தென்மேற்கு நெற்பயிர் செய்கை விவசாயிகளுக்கு பெருமந்தமான காலம்.

விவசாயிகள் வங்கிகளில் கடனெடுத்து பெரும்போக நெற்செய்கைக்கான ஆயத்தப்படுத்தல்களை மேற்கொண்டு உழுது, பண்படுத்தி நல்லினவிதை நெல் கொள்வனவு செய்து அதனை விதைத்து உரியகாலத்தில் களைநாசினி, பூச்சிநாசினி மருந்துகளை உரங்களை விசிறிய காலத்தில் தொடர்ச்சியான வரட்சியினால் சண்டிலிப்பாய் விவசாயிகள் பெரும் சொல்லொண்ணா துயரங்களை அனுபவித்தனர்.

நீர்ப்பாசன வசதியுள்ள விவசாயிகள் இயந்திரம் மூலம் பயிர்களுக்கு நீரைப்பாய்ச்சினர்.



எனினும் கடும்வரட்சி, வலி.தென்மேற்கில் உள்ள நவாலி, சங்குவேலி, மானிப்பாய், பண்டத்தரிப்பு உள்ளிட்ட விவசாயிகளை மிகவும் பாதித்ததை ஏற்கனவே ஊடகங்கள் வாயிலாக யாவரும் அறிந்துள்ளனர்.

இந்த உண்மை வலி.தென்மேற்கு பிரதேச செயலருக்கு சண்டிலிப்பாய் பெரும்போக அலுவலர் (Divisional Officer) ஊடாக அறிவிக்கப்பட்டது.

பின்னர் இச் செய்தியானது யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதிஆணையாளர் (ACAS) மற்றும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் (Govt Agent) ஆகியோருக்கும் தெரியப் படுத்தப்பட்டு பின்னர் கொழும்பு கமநல அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கும் தெரி யப்படுத்தப்பட்டது.

இங்கு நான் சொல்ல வருவது யாதெனில் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளும் விவசாய நெற்பயிர் காப்புறுதி, 2013 ஏக்கர் வரி மற்றும் ஆவணங்கள் என்பன உரிய பெரும்போக அலுவலருக்கு முறைப் படி சமர்பிக்கப்பட்டன.

இதன் பிரகாரம் பயிரழிவு என்பது விவசாயிகளுக்கு ஏற்பட்ட பேரிடராகும்.

இந்த பேரிடரிலிருந்து காப்பாற்ற உரிய வேதனம் பெறும் அதிகாரிகள் தலையிட்டு 2013 டிசம்பர் மாதமளவில் அழிவுநிதியைக் பெற்றுக் கொடுத்திருக்க வேண்டும். இல்லாவிடில் 2014 'மே' மாதத்திற்கு முன்னர் இந்த அழிவு காப்புறுதி நிதியை பெற்றுக்கொடுத்திருக்க வேண்டும்.

இவ்வாறாக இந்த நிதியை 2014 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் முடிவுற்றும் சண்டிலிப்பாய் கமநல பிரிவிற்கு உட்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படாதது பெருங் குறை யாக தெரிகிறது.

தற்போது 2014 ஆம் ஆண்டு பெரும்போகம் தொடங்கியுள்ளது.

நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட போதும் இவ்வருடமும் "மழை பொய்க்கும்" போல தெரிகின்றது.

இவ்வாறு 2014 இல் மழை பொய்த்தால் கடும் வரட்சி என்பதுடன் பஞ்சம் – பசி – பட்டினி என்பன வலி.தென்மேற்கு பிர தேசத்திற்கு மட்டுமன்றி யாழ்.மாவட்டத்திற்கும் ஏற்பட வாய்ப்புண்டு.

எனவே முதற்கட்டமாக விவசாய திணைக்கள பிரதி ஆணையாளர் முதலில் 2013 இல் பாதிக்கப்பட்ட விவசாய நெற்செய்கைகளுக்கான காப்புறுதி நிதியை வழங்க முற்பட வேண்டும்.

இதுவே விவசாயிகளின் ஊக்கத்திற்கு பேருதவியாக இருக் கும்.

இவ் உதவிகள் கிடைக்காத விடத்து இந்த வரிசை நிலை அதிகாரிகள் (வேதனம் பெறுவோர்) இருந்தும் பயனற்ற நிலையேற் படும்.

எனவே விவசாயிகளை சினம் கொள்ள வையாது. பாதிக் கப்பட்ட 2013 விவசாயிகளுக்கு உரிய அழிவு நிதியை வழங்கி வாழ்வில் சுபீட்சம் ஏற்படுத்துமாறு மன்றாட்டமாக கேட்டுக் கொள்கின்றேன்.

வலி.தென்மேற்கு பாதிக்கப்பட்ட பிரதேச<br>
மானிப்பாய் சபை உறுப்பினர்

# சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது சட்டத்தின் முன் குற்றமாகும்

இன்றைய சிறுவர்கள் எதிர்காலத் தலைவர்கள் இவர்களைக் கல்விமான்களாக்கி எதிர்காலத்தில் நாட்டிற்கு நல்ல சேவகர்களாக மாற்றி அமைக்கும் பொறுப்பு இன்று எமது கரங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தமிழர் தாயகத்தில் வறுமை நிமித்தம் பாடசாலை செல்லாது வர்த்தக நிலையங்கள், அழகுமாடங்கள், வீட்டு வேலைகளுக்கு கல்வி கற்கும் மாணவர்களை வைத்திருத்தல் என்பது பாரியதொரு குற்றச்செயலாக உருவெடுத்துள்ளது.

குறைந்த வருமானத்தில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தி அவர்களின் கல்வியையும் சீரழித்து எதிர்கால அறிவாற்றலையும் பாழாக்கி விடாது எம்மால் இயன்ற உதவிகளை மாணவ செல்வங்களுக்கு வழங்கி பாடசாலைக்கு அனுப்ப வேண்டியது இன்று எமது கடமை ஆகும். அரசு இன்றும் இலவச புத்தகம், சீருடை, உணவு சகலவற்றையும் வழங்கி மாணவர்களை கல்விக்குள் புகுத்தியுள்ளது. கல்வி கற்க வேண்டி வயதில் தான் (பாடசாலை) கற்க முடியும்.

காலம் கடந்த பின் (கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம் செய்து பலன் இல்லை) மாணவர்கள் வாழ்வு பூச்சியமே. இவ்வாறான வறுமைச் சிறுவர்களை உங்கள் பிள்ளைகள் போல் நேசித்து அவர்களுக்கு கல்வி புகட்ட முன்வாருங்கள். தாயகத்தில் யாராவது சிறுவர் இப்படி பாடசாலை வயதில் வேலைக்கு அமர்த்தப்பட்டு இருந்தால் இந்த ஏழைச்சிறார் களின் நன்மை கருதி அப்பகுதி கிராம அலுவலருக்கோ அல்லது சிறுவர் நன்னடத்தைப் பிரிவுக்கோ தெரியப் படுத்துங்கள்.

நிச்சயமாக அவர்கள் மாற்று நடவடிக்கை எடுத்து அந்த அப்பாவிச் சிறுவர்களை கல்விச் செல்வத்திற்குள் புகுத்தி நற்பிரஜை களாக்கி நமது நாட்டில் இன, மத, பேதமின்றி சேவையாற்ற வழி ஏற்படுத்துங்கள். ஒரு கணம் சிந்தியுங்கள் மறுகணம் செயற்படுங்கள்!

தமிழ்ப்பிரியன் வரணி


குறிப்பு:- தினமுரசுக்கு வந்த கடிதம் எனும் தலைப்பில் பலவேறு கடிதங்கள் வருகின்றன. தங்கள கடிதங்களும் பிரசுரமாகாததைக் கேட்டும் வாசகர்கள் எழுதுகிறார்கள். கண்டிப்பாக தரமானவை அனைத்தையும் பிரசுரத்துக்கு எடுத்துக்கொள்வோம் என்பதனை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம்.


- ஆசிரியர் -

04. 7m நீளமான நாடாவொன்றை 1m 75cm நீளம் உடைய எத்தனை துண்டுகளாக வெட்டலாம்?
..........................

05. ஏறுவரிசைப்படுத்துக 1.5, 0.5, 0.4, 0.25, 0.8 ..........................

06. பெருக்கல் குறியீட்டினாலும் வகுத்தல் # குறியீட்டினாலும் காட்டப்படுமெனின் 28# 4*3 இன் பெறுமானம் யாது?
..........................


07. 
இப்பென்சிலின் நீளம் எத்தனை cm ஆகும்?

08. 

A யிலிருந்து D வரையான தூரம் எத்தனை கிலோமீற்றராகும்?
..........................

09. ஒரு வாழைப்பழச்சீப்பில் 12 பழங்கள் உள்ளன. ஒரு வாழைப்பழத்தின் விலை ரூபா 8.50 சதம் எனின் வாழைப்பழச்சீப்பில் பெறுமானம் யாது?
..........................

10. ஒரு விளையாட்டு படகு ஒன்றின் விலை ரூபா 120.00 ஆகும். படகினது விலையின் $\frac{3}{4}$ பங்கை பந்து ஒன்றை வாங்கச் செலவிட்டால் பந்து ஒன்றின் விலை யாது?


11. 

இவ்வுருவில் சகல விளிம்புகளினதும் மொத்த நீளத்தை காண்க?
..........................

12. மாலை 5 மணியளவில் நான் நகரில் இருந்து வீட்டுக்குத் திரும்பி வரும் போது எனது நிழல் என்னை பின் தொடர்ந்து வந்ததாயின் நான் எந்தத் திசையை நோக்கி நடந்து கொண்டிருந்தேன்?
..........................

13. எண்கோலத்தை பூர்த்தி செய்க. 24,30,37,45 ..........................

14. சதுரம் ஒன்றின் ஒரு பக்கத்தின் நீளம் 8cm எனின் அதனது பரப்பளவு யாது?
..........................

15. 
ஒரு சிறிய சதுரம் ஒன்றின் சுற்றளவு 4cm எனின் பெரிய சதுரத்தின் மொத்த பரப்பளவு யாது?
..........................

12) பின்வரும் தலைப்புக்கு பொருத்தமான மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்கள் இடம்பெற வேண்டும். இலக்கணத் தொடர்பு சரியாக அமைய வேண்டும்

பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்போம்

01..........................
02..........................
03..........................

பயிற்சி வினாக்களின் விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



1 தொடக்கம் 12 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்க

01) பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

பாலைப்போல் நிலவு வானில்
பவனி வரப் போகுது
கோலக்கடல் அலைக்கைத் தட்டிக்
குதூகலிக்கப்போகுது
நிலவாளும் கண் சிமிட்டி நின்று பார்க்க போகுது
மாலை வேளை மலர்ந்து கங்குல்
மங்கை தோன்றப் போகின்றாள்

01. மூன்றாவது வரியில் உள்ள பெயரடைமொழியை எழுதுக?
..........................
02. இருள் என்னும் சொல்லுக்கு பொருத்தமான ஒத்தகருத்து சொல்லை எழுதுக?
..........................
03. காலை என்னும் சொல்லுக்கான எதிர் சொல்லை எழுதுக?
..........................
04. பாடலில் இடம்பெற்றுள்ள உவமானத்தை குறிப்பிடுக?
..........................
05. வானில் உலா வரப்போவது எது?
..........................
06. எதற்காக கடல் குதூகலிக்கப் போகிறது?
..........................

02) பின்வரும் வாக்கியங்களை எதிர்பால் சொற்களைக் கொண்ட வாக்கியங்களாக மாற்றி எழுதுக

1. அவன சிறந்த ஓட்ட வீரன் ..........................
2. அரேபிய தேசத்து சீமாட்டி அவளாவாள் ..........................
3. இராணித்தேனீ தலைவனைத் தேடிச்சென்றது ..........................
4. அரசனைக்கண்ட சிறுவன் பயத்தால் நடுங்கினான் ..........................

03) பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொல்லை தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக
1. கதலி .................... (வாளை,வாழை,வாலை) பழுக்க சற்று .................... (புலிக்கும், புழிக்கும், புளிக்கும்)
2. சூழலின் .................... (சமநிலை, சமனிலை,சமனிலை) பேணப்படுவதால் இயற்கையின் .................... (சீடறத்தில்,சீற்றத்தில்,சீட்ரத்தில்) இருந்து தப்பிக்கொள்ளலாம்

04) சரியான முடிக்கும் சொல்லை தெரிவு செய்து எழுதுக
1. அவர்கள் இருவருக்கும் கிடைத்த சம்பளத்திலே வேறுபாடு .................... (காணப்பட்டன/காணப்பட்டது)
2. பாபுவினதும் பிரபுவினதும் நட்பு மேலும் .................... (வளர்ந்தது,வளர்ந்தன)

3. எசமானின் பார்வையில் ஓராயிரம் செய்திகள் ........................................ (மறைந்திருந்தது/ மறைந்திருந்தன)
4. மகாத்மாகாந்தியை பாரதநாடு மட்டுமன்றி முழுஉலகமுமே ........................................ (போற்றுகின்றது /போற்றுகின்றன)

05. பின்வரும் வினாக்களுக்கு விடைகளை எழுதுக
1. தங்கை தண்ணீர் குடித்தால் எனும் வாக்கியத்தில் வந்துள்ள செய்யப்படுபொருள் யாது?
........................................

2. தேனீ பூவில் அமர்ந்து தேனைக் குடித்தது எனும் வாக்கியத்தில் வந்துள்ள பயனிலைச் சொல் எது?
........................................

3. ஆண்கள், பறவைகள், பெற்றோர் இச்சொற்களில் பலவின்பாற் சொல்லை தெரிவு செய்து எழுதுக?
........................................

06. பின்வரும் பழமொழிகளுக்கான பொருளை எழுதுக
1. அழுத பிள்ளை பால் குடிக்கும் ........................................
2. உயர உயரப்பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா? ........................................

07. கருத்தினை தமிழில் எழுதுக
01. Wish your all the best ..................... 02. Fruits .....................
03. Grapes ..................... 04. Birds .....................

08. கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக
01. தயவுசெய்து வீட்டுக்குப் போவோம் ........................................
02. புகையிரத நிலையம் ........................................


09. சிங்களச் சொற்களுக்கான கருத்தினை தமிழில் தருக
01. பொத்த தென்ன ..................... 02. குருத்துமா எய்த .....................
03. உங்களுக்குப் பசிக்கிறதா? என்பதை சிங்களத்தில் (தமிழில்) எழுதுக
........................................

10. மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக
1.



இவ்வுரு காட்டும் விளக்கம்
1) மின்சார சபை 2) தொலைபேசி வசதி
3) பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 4) எரிபொருள் நிரப்பு நிலையம்

2.



இவ்வுருவில் உள்ளவர்
1) ஆதர்.சீ.கிளார்க் 2) டி.பி.ஜயதிலக்க
3) ஆனந்த் சமரகோன் 4) கேனல் ஸ்டில் ஒல்கட்

3. நீரினால் பரவலடையக்கூடிய வித்துக்களாவன
1. புலிநகம், மகோகனி, புன்னை 2. கடல்மாங்காய், கத்தாப்புக்காய், தேங்காய்
3. கத்தாப்புக்காய், ஆமணக்கு, மரமுந்திரி 4. எருக்கலை, அச்சி, வேங்கை

4. வீட்டுத்தோட்டம் ஒன்றிற்கு ஏன் நீர் பிசாகு அவசியமாகின்றது
1. பயிர்களுக்கு தேவையான நீரைப் பெற்றுக்கொள்ள
2. பயிர்களுக்கு நீரைப் பாய்ச்சுவதற்கு
3. தோட்டத்திற்கு பூச்சிகளை வரவழைப்பதற்கு
4. பிராணிகளின் தாகத்தில் இருந்து பயிர்களை காப்பதற்கு




5. தென்னை மரம் ஒன்றில் இருந்து தேங்காய் ஒன்று கீழே விழுவதற்கு காரணம்
1. தேங்காய் பாரம் அதிகமாக என்பதால் 2) தென்னை மரம் உயரம் என்பதால்
3. புவிக்கு ஈர்ப்பு சக்தி உண்டு என்பதால் 4) புவி கோள வடிவமானதால்



06. உருவில் காட்டப்பட்டுள்ள A எனும் நதியானது?
1. மகாவலி கங்கை 2. களனிகங்கை
3. வளவே கங்கை 4. மாணிக்ககங்கை

07. புள்ளி B யினால் காட்டப்படுவது மத்திய மாகாணத்திற்கு உட்பட்ட மாவட்டமாகும்
1. கண்டி 2. கம்பளை
3. கொழும்பு 4.பதுளை

08.



உருவிலுள்ள உடுக்கோலம் எது?
1. கார்த்திகை 2. ஓராயன்
3. இடையன் 4. ரிஷபம்

09. பின்வருவனவற்றுள் ஒளிரும் மின்சுற்று எது?



10. ஓட்ட நிகழ்ச்சிகளுக்கு மைதானத்தில் இடப்பட்டிருக்கும் ஓடு பாதைகளின் எண்ணிக்கை?
1. 13 2. 06 3. 07 4. 08

11. இலங்கையில் பேணப்படும் சட்டதிட்டங்களுள் ஒன்று?
1. தினமும் சோறு சாப்பிடுதல் 2. வீதியில் வலதுபுறம் பாதசாரிகள் பயணித்தல்
3. வீதியில் வலது புறம் வாகனங்கள் பயணித்தல் 4. போயா தினங்களில் கடைகள் மூடுதல்

12. இலங்கை நாட்டுக்கே உரித்தான தாவரவகை
1. ஆம்பல் 2. முருங்கை 3. மாமரம் 4. பலாமரம்

13. வளர்வதற்கு அதிக நீர் தேவைப்படுவது?
1. மரவள்ளி 2. பலா 3. கரும்பு 4. கள்ளி

14. கிளைத்தண்டுகள் நடுவதன் மூலம் கன்றுகள், பெறப்படத்தக்க பயிர் வகை
1. மிளகாய் 2. பயறு 3. கங்குன் 4. ஈரப்பலா

15. இதழ்களின் அளவும், வடிவமும் ஒன்றுக்கொன்று வேறுபட்டு காணப்படும் பூ?
1. அகத்தி 2. அலரி 3. நாகதாளி 4. மல்லிகை

11) கணித வினாக்களுக்கு விடை தருக
01. கூட்டுக $\frac{1}{3} + \frac{2}{6}$ ........................

02. பி.ப.9 கழிந்து 10 நிமிடம் என்னும் நேரத்தை நியம நேரத்தில் தருக
........................................

03. ஒரு பாத்திரத்திலுள்ள நீரின் கனவளவு 350ml ஆகும். 8 பாத்திரத்திலுள்ள நீரின் மொத்தக் கனவளவு யாது? ........................................

# கல்லூரி மைதான புனரமைப்புக்கு 2 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

## வடமாகாண சபை உறுப்பினர் தவநாதன் தெரிவிப்பு

பூநகரி மத்திய கல்லூரியின் மைதானம் ம்றுசீரமைப்பு தொடா பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் பாடசாலை சமூகத்துடன் கலந்துரையாடியுள்ளார்.

2014 ஆம் ஆண்டு மாகாண சபை உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் இருந்து பூநகரி மத்திய கல்லூரியின் மைதானத்தை சீரமைப்பதற்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் இரண்டு இலட்சம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்திருந்தார்.

எனவே இந்த நிதியினை கொண்டு மாணவர்களின் விளையாட்டு நடவடிக்கைகளுக்கு ஏற்ற வகையில் மைதானத்தை புனரமைப்பது குறித்தே இந்த கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் பிற்பகல் இரண்டு மணிக்கு பாடசாலையில் இடம்பெற்றது.

தற்போது மைதானம் மாணவர்களின் எந்தவொரு தேவைக்கும் பயன்படுத்த முடியாத மிகவும் மோசமான நிலையில் காணப்படுகிறது. எனவே அதனை மண் நிரப்பி சீரபடுத்த வேண்டும் அதற்கான பாடசாலை சமூகத்தின் கோரிக்கைக்கு அமைவாக மாகாண சபை உறுப்பினர் நிதியினை ஒதுக்கீடு செய்து நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளனர்.

பாடசாலை அதிபர் இ.பாலச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரும், பூநகரி பிரதேச சபை உறுப்பினருமான குகேந்திரன், பிரதேச சபை உறுப்பினர் இராசலிங்கம், கொல்லக்குறிச்சி கமக்கார அமைப்பின் தலைவரும், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினருமான சண்முகலிங்கம், வலயக் கல்வி திணைக்கள தொழிநுட்ப உத்தியோகத்தர் மு.யுவராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# யாழிலும் 'ரோஸ்மாஸ்ரர்'

(வடமராட்சி)

சர்வதேச தலைமைத்துவ விருத்திக்கும் தொடர்பாடலுக்குமான 'ரோஸ்மாஸ்டர்' அமைப்பு அமைப்பு தனது செயற்பாடுகளை யாழ்ப்பாணத்திலும் விஸ்தரிவலாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக இவ் அமைப்பின் செயலமர்வு இணைப்பாளர் சட்டத்தரணி கே.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

இது பற்றி மேலும் தெரிவிக்கையில்,

உலகளாவிய ரீதியில் 'ரோஸமாஸ்ரர்' என்கின்ற தலைமை வாசகத்துடன் சாதி, சமய, இன, மொழி வேறுபாடுகளின்றி அனைத்து தரப்பி னர்களுக்கிடையேயும் தலைமைத்துவ விருத்திக்கும் தொடர்பாடலுக்குமான நன்கு திட்டமிட்ட ஆய்வுகளின் பின் ஒழுங்கமைக்கப்பட்ட பயிற்சி நெறிகளை சேவை அடிப்படையில் இவ் அமைப்பு மேற்கொண்டு வருகின்றது.

இவ் அமைப்பு உறுப்பினர்களால் யாழ்ப்பாணத்திலும் 'யாழ்ப்பாணம் ரோஸ்மாஸ்ரர்' அமைப்பு அமைக்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்ற போதிலும் தற்போது அதன் செயற்பாடுகளை செழுமைப்படுத்தும் நோக்குடன் அண்மையில் விழிப்புணர்வுச் செயலமர்வு ஹற்றன் நஷனல் வங்கி மெற்றாக்கிளை கட்டடத்தில் நடாத்தப்பட்டது.

இவ்விழிப்புணர்வுக் கருத்தரங்கில் இலங்கைக்கான சந்தைப்படுத்தல் அதிகாரி எஸ்சுதாஸ் லியனகே இலங்கைக்கான முன்னாள் ஆளுநர் எஸ்.சலீஸ், முன்னாள் பிராந்திய ஆளுநர் கே.வசந்தன் மற்றும் சிரயந்தி சல்காடோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

இது பற்றிய மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் www.toast masters. org இணையத்தள மூலமும், pirabalaw@gmail.com என்ற email க்கு எழுதுவதன் மூலமோ 0777583377 தொலை பேசியூடாக தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார். (01)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சித்தம் அழகியார் வெளியீடான குப்பிளான் ஐ.சண்முகனின் 'பிரபஞ்ச சுருதி' கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று மாலை 4.00 மணிக்கு பருத்தித்துறை ஞானாலய மண்டபத்தில் இ.து.குலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

அறிமுகவுரையை ஆங்கில ஆசான் ஏ.கந்தையாவும், வெளியீட்டுரையை எஸ்.ராதேயனும், நயப்புரையை கவிஞர் ரீ.ஜெயசீலனும் நிகழ்த்துவார்கள். (01)

# தரம் 11 மாணவர்களுக்கு நாளை முதல் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை வலிகாமம் வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 11 மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இப் பரீட்சை வினாத்தாள்களை கோட்டக்கல்வி அலுவலகத்தில் பரீட்சை நடைபெறும் தினத்தன்று காலை பாடசாலைகள் பெற்றுக்கொள்ள முடியும் என வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (66)

# வலி.தென்மேற்கில் நஷ்ட ஈடு எப்போது?

(வலிகாமம்)

வலி. தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 2006 இல் எறிகணைத் தாக்குதலுக்கு உள்ளான சனசமூக நிலையத்திற்கு இதுவரை நஷ்டஈடு வழங்கப்படவில்லை.

நவாலி தெற்கு ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையம் எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காகி கூரைகள், மதில், தீராந்திகள் என்பன முழுவதுமாக சேதமாகியதுடன் கணனிகளும், தளபாடங்களும் சேதமடைந்தன.

மேற்படி பாதிப்பு குறித்து 2006 இல் வலி.தென்மேற்கு பிரதேச செயலர் ஊடாக அரசாங்க அதிபருக்கு குறித்த ச.ச.நிலையம் விண்ணப்பித்தும் இதுவரை நஷ்டஈடு எதுவும் வழங்கப்படாமையால் சுமார் 5 லட்சம் ரூபா செலவில் ச.ச. நிலையத்தினர் இந்நிலையத்தை மீள்புனரமைப்பு செய்து முடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிரிய கிளர்ச்சியாளர்களுடன் இணைய முயற்சி

# நாடு கடத்தப்பட்டனர் 3 மாலைதீவு பிரஜைகள்

(கொழும்பு)

சிரியா கிளர்ச்சிக்காரர்களுடன் இணைந்து போராடுவதற்கு இலங்கையூடாக சிரியாவிற்கு செல்ல முயன்ற மூன்று மாலைதீவு பிரஜைகள் கொழும்பில் கைதுசெய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

25, 23 வயதான இளைஞர்கள் இருவரும் 18 வயதான யுவதி ஒருவரும் இவ்வாறு கைதுசெய்யப்பட்டு நாடுகடத்தப்பட்டுள்ளனர்.

மருத்துவ சிகிச்சையைக் காரணம் காட்டி இலங்கை வந்த இவர்கள் பின்னர் கொழும்பிலிருந்து துருக்கிக்கு செல்ல முயன்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் இலங்கை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட வேளை இலங்கையில் மருத்துவ சிகிச்சை தமக்கு திருப்தியளிக்கவில்லை என்றும் இதனால் தாங்கள் துருக்கி செல்லமுயன்றதாகவும் தெரிவித்துள்ளனர்.

மாலைதீவின் பொலிஸார் அந்த நாட்டின் பயங்கரவாத தடுப்பு பிரிவினருக்கு வழங்கிய தகவலைத் தொடர்ந்து அவர்கள இலங்கையிலுள்ள தமது தூதரகத்துக்கும் , இலங்கை பொலிஸாருக்கும் தகவல் அனுப்பி மூவரையும் கைதுசெய்துள்ளனர்.

# வெளிநாடு செல்வோருக்கு தேவையில்லை அடையாள அட்டை

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு நீண்ட கால பயணங்களை மேற்கொள்பவர்கள் தேசிய அடையாள அட்டையை கொண்டுசெல்வதற்கான சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படவுள்ளன என்று ஆடபதிவுத் திணைக்கள ஆணையாளர் ஆர்.எம்.எஸ்.சரத்குமார தெரிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டையில் விபரங்கள் சிங்களம் மற்றும் தமிழில் மாத்திரமே காணப்படுவதால் அதனை வெளிநாடுகளுக்குக் கொண்டுசெல்ல வேண்டிய தேவையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடுகளுக்கு நீண்ட கால பயணங்களை மேற்கொள்பவர்கள் அடையாள அட்டைகளை கொண்டுசெல்வது தொடர்பாக கடுமையான நடைமுறைகளை பின்பற்றவுள்ளோம்.

வெளிநாடுகளிலுள்ள தூதரகங்களுக்கு இது குறித்து அறிவுறுத்துவதற்காக வெளிவிவகார அமைச்சுடன் பேச்சுக்களை மேற்கொள்ளவுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சிறுவர்களுக்கு கல்வி பொதி வட வரணியில் வழங்கப்பட்டது

(வடமராட்சி)

வேள்ட்விஷன் நிறுவனத்தின் அனுசரணையுடன் வட வரணி 339 கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட சிறார்களுக்கு குழந்தைகளுக்கான சித்திரம் வரைதல் நிகழ்வுத்திட்டம் கடந்த வியாழக்கிழமை சைவப் பிரகாச கௌரிபாலன் முன்பள்ளியில் நடைபெற்றது.

சிறுவர்களுக்கு அன்பளிப்பாக குடை, பாடசாலை பை என்பன இலவசமாக வழங்கப்பட்டன. பெருமளவான சிறார்கள் இதன் மூலம் நன்மையடைந்தனர்.

இதேவேளை, வேள்ட்விஷன் நிறுவனம் இப்பிரிவில் சில குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை அண்மையில் வழங்கியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (150)

# வீடு கையளிக்கும் நிகழ்வு

(கைதடி)

வறுமைக்கோட்டின் கீழ் உள்ள வீடற்ற குடும்பங்களுக்கு நிரந்தர வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தின் கீழ் மூன்றாவது வீடு உரியவர்களிடம் கையளிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு லயன் ப.செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசாவும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை தலைவர் ச.துரைராசாவும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வு கைதடி சரஸ்வதி சர்வதேச அமைப்பின் நிதிப் பங்களிப்புடன் கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தினால் நடாத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (08)





வவுனியா பூந்தோட்டம் நரசிங்கர் ஆலய பரிபாலன சபையின் ஏற்பாட்டில், மலையக மீரியபெத்த மண்சரிவு அனர்த்தத்தில் உயிர் நீத்த மலையக மக்களுக்கு அஞ்சலி செலுத்துவதோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாகவும், ஆலயத்தில் இடம்பெற்ற பிரார்த்தனை நிகழ்ச்சியில் சூ.ஞானப்பிரகாசம் அஞ்சலிச் சுடர் ஏற்றுவதையும் ஆலய உபதலைவர் கோ.ஸ்ரீஸ்கந்தராஜா, அஞ்சலியுரை நிகழ்த்துவதையும் காணலாம்.

# அமெரிக்காவும் நேச நாடுகளும் இணைந்து
# ஐ.எஸ்.ஐ.எஸ். மீது பாரிய திடீர் தாக்குதல்





சிரியாவில் 'ஐ.எஸ்.ஐ.எஸ்' தீவிரவாதிகள் மீது கடந்த செப்டம்பர் 23ஆம் திகதி முதல் அமெரிக்காவும், அதன் தோழமை நாடுகளும் குண்டுவீச்சு தாக்குதல் நடத்தி வருகின்றன. இதற்கு பழி தீர்க்கும் வகையில் அங்குள்ள 'கோரசான்' என்ற அமைப்பை சேர்ந்த தீவிரவாதிகள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் தாக்குதல் நடாத்த திட்டமிட்டிருப்பது தெரியவந்தது.

'கோரசான்' அமைப்பு அல் கொய்தாவுடன் தொடர்பு கொண்டது. எனவே, அவர்களை அழிக்கும் நடவடிக்கையில் தற்போது அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. வடமேற்கு சிரியாவில் துருக்கி எல்லை அருகே சர்மதா நகரம் உள்ளது. இது 'கோரசான்' தீவிரவாதிகள் கட்டுப்பாட்டில் உள்ளது. எனவே நேற்று அங்கு அமெரிக்க இராணுவம் குண்டு வீசி தாக்கியது.

அங்கு தீவிரவாதிகளின் 5 நிலைகள் குண்டு வீசி தகர்க்கப்பட்டன. அதில் ஏராளமான தீவிரவாதிகளும், 2 குழந்தைகளும் பலியாகினர். பலியான தீவிரவாதிகளில் பிரான்சை சேர்ந்த ட்ருஜியான் என்பவரும் ஒருவர் என அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் தீவிரவாதிகளின் பயிற்சி மையங்கள், வாகனங்கள் மற்றும் கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாயின.

உலகச் செய்திகள்

# இந்திய வம்சாவளி ஒருவருக்கு இங்கிலாந்தில் உயரிய விருது



இங்கிலாந்தின் லைசெஸ்டர் கிழக்கு தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்து வருபவர் கெயித் வாஸ். இந்திய வம்சாவளியை சேர்ந்தவரான இவர், தனது தொகுதியில் நலிவடைந்தோர், சிறுபான்மையினருக்காக சிறந்த முறையில் பணியாற்றி வருகிறார். இந்த அரிய பணிகளை பாராட்டி அவருக்கு இந்த ஆண்டுக்கான சிறந்த உழைப்பாளர் எம்.பி. விருது அறிவிக்கப்பட்டு உள்ளது.

இதற்கான அறிவிப்பை இங்கிலாந்து நாடாளுமன்ற சபாநாயகர் ஜான் பர்கவ் வெளியிட்டார். நாடு முழுவதும் சிறுபான்மையினருக்காக சிறப்பாக பணிபுரியும் அரசியல்வாதிகளுக்கு ஆண்டுதோறும் இந்த விருது வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இந்த விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது குறித்து கெயித் வாஸ் கூறுகையில், எனது லைசெஸ்டர் கிழக்கு தொகுதியில் நான் தனிநபராகவும், பல்வேறு குழுவினருடனும் இணைந்து சிறப்பாக பணியாற்றினேன். இந்த விருது மூலம் எனக்கு சிறந்த கௌரவம் அளிக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

விருது அறிவிக்கப்பட்டுள்ள கெயித் வாசுக்கு இங்கிலாந்தில் பாராட்டுகள் குவிகிறது. குறிப்பாக தொழிலாளர் கட்சி தலைவர் எட் மிலிபந்த், தேசிய ஆலோசனை வாரிய உறுப்பினர் சைமன் வூல்லே உள்பட பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

# இங்கிலாந்தில் பேய் வீடு; புகைப்படத்தில் மர்மப்பெண்



இங்கிலாந்தில் உள்ள ஒரு பழமையான வீட்டில் பல ஆண்டுகளுக்கு முன் இறந்த பெண் ஒருவரின் உருவம் புகைப்படத்தில் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

1924 ஆம் ஆண்டு தேம்ஸ் பகுதியில் கட்டப்பட்ட வீட்டில் அமானுஷ்ய நிகழ்வுகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டதை அடுத்து, இது தொடர்பான ஆய்வு மேற்கொண்டுவரும் மைக்கல் மொரிஸ் எனும் பெண் அந்த வீட்டிற்கு சென்று ஆய்வு மேற்கொண்டார். அப்போது அந்த வீட்டில் விளக்கமுடியாத செயல்கள் மற்றும் சத்தங்கள் கேட்டதாகவும், வீட்டை படமெடுத்தபோது பெண் ஒருவரின் உருவம் புகைப்படத்தில் பதிவாகியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வீட்டில் பல ஆண்டுகளுக்கு முன் இருந்த பெண் தான் கவனித்துவந்த குழந்தை உயிரிழந்ததை அடுத்து குற்ற உணர்வால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும், அவர் இறந்தபிறகு பேயாக இதே வீட்டில் இருந்து வருவதாகவும் கருதப்படுகிறது.

இதனால், அந்த புகைப்படத்தில் பதிவாகியிருக்கும் பெண்ணின் உருவம் இறந்த பெண்ணுடையதாக இருக்கலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மைக்கல் மொரிஸ் தெரிவிக்கையில், அமானுஷ்ய நிகழ்வுகள் குறித்து ஆய்வுகளில் ஈடுபடுவது எனக்கு மிகவும் பிடித்துள்ளது. இப்போது கிடைத்திருக்கும் புகைப்படம் அதனை இன்னும் பயனுள்ளதாக்கியுள்ளது எனக் கூறியுள்ளார்

# தமிழக மரண தண்டனை கைதிகளுக்கு ஆதரவாக 2000பேர் உண்ணாவிரதம்



தமிழக மீனவர்கள் ஐவருக்கு இலங்கையின் உயர்நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்டதை கண்டித்து தமிழக மாநிலம் முழுவதும் மீனவர்கள் காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழக மாநிலத்தின் 13 கரையோர மாவட்டங்களை சேர்ந்த மீனவர்கள் நேற்று முன்தினம் முதல் காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக இந்திய தகவல்கள் குறிப்பிடுகின்றன.

ராமேஸ்வரத்தை சேர்ந்த ஐந்து மீனவர்களும், இலங்கை மீனவர்கள் மூவரும் 2011 ஆம் ஆண்டு கடற்படையினரால் கைது செய்யப்பட்டதுடன், இலங்கை கடற்பரப்பினுள் போதைப் பொருள் கடத்தியதாக அவர்கள் மீது வழக்குப் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கின் பிரதிவாதிளான 8 மீனவர்களுக்கும் உயர் நீதிமன்றில் கடந்த வாரத்தில் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

இந்த தீர்ப்பினை கண்டித்து, தமிழக மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டங்களையும், அரசியல் கட்சிகள் தொடர் போராட்டங்களையும் தமிழகம் முழுவதும் நடத்தி வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாகவே தமிழகத்தின் 13 கரையோர மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் நேற்று முன்தினம் காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

ராமேஸ்வரம், தங்கச்சிமடத்தில் ஆரம்பமான இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் 2000 இற்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டதாக இந்திய தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன.

# எவ். 11-16 ரக போர் விமானம் புளோரிடாவில் விழுந்து நொருங்கியது



அமெரிக்காவின் வடக்கே மெக்சிகோ வளைகுடா பகுதியில் நேற்று காலை பயிற்சியில் ஈடுபட்ட அமெரிக்க போர் விமானம் கீழே விழுந்து நொறுங்கியது. அந்த விமானத்தையும் விமானியையும் தேடும் பணி நடைபெற்று வருகிறது என்று அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன.

அமெரிக்காவின் வடக்கே புளோரிடா, அலபாமா, மிசிசிபி, லூசியானா மற்றும் டெக்சாஸ் மாநிலங்கள் இணைந்த பகுதி மெக்சிகோ வளைகுடா என்று அழைக்கப்படுகிறது.

மெக்சிகோ வளைகுடா பகுதியில் உள்ள டைன்டால் விமானத்தளத்தில் இருந்து நேற்று காலை F11-16 என்ற நவீன ரக போர்விமானம் பயிற்சிக்காக கிளம்பி சென்றது.

அந்த விமானம் கிளம்பி சென்ற ஒரு சில மணி நேரங்களில் புளோரிடாவின் பான்ஹேண்டில் விமானக் கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, அந்த விமானத்தை தேடும் பணியில் அமெரிக்க விமானப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். இன்றுவரை அந்த விமானத்தின் பாகங்கள் நிலப்பகுதியில் கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் கடலில் விழ்ந்து மூழ்கியிருக்கலாம் என்றும் அமெரிக்க கடற்படையினர் சந்தேகிக்கின்றனர்.

இந்தத் தொடர்ந்து, அமெரிக்க கடற்பகுதியில் கடலோர காவல்படையினர் படகு மற்றும் ஹெலிகாப்டர் மூலம் தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த விமானத்துடன் விமானியையும் தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறோம் என்று அமெரிக்க விமானப் படையின் துணை கமாண்டர் மார்க் ஓ லாப்ளின் கூறினார்.

## உலகை அச்சுறுத்தும் எபோலா இன்றுவரை 13500ஆக பதிவாகியது

கடந்த மாதம் 31ஆம் திகதி வரை எபோலா நோய் தாக்குதலால் இறந்தவர்களின் எண்ணிக்கை 4,818 என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. இதற்கு முன்பு பலி எண்ணிக்கை 4951 என தகவல் வெளியாகியது இதில் வேறு நோய்களில் உயரிழந்தவர்களும் சேர்க்கப்பட்டுவிட்டதாகவும், தற்போது அதனை நீக்கிவிட்டு எபோலா நோய்க்கு பலியானவர் எண்ணிக்கையை மட்டும் வெளியிடப்பட்டிருப்பதாகவும் உலக சுகாதார நிறுவனம் விளக்கம் அளித்துள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடுகளான லைபீரியா, கினியா மற்றும் சியர்ரா லியோனி ஆகிய 3 நாடுகளில் எபோலா தாக்குதல் எண்ணிக்கை 13,567 ஆக பதிவாகி இருந்தது. தற்போது 13,042 ஆக குறைந்துள்ளது.லைபீரியாவில் 2,697 பேரும், சியர்ரா லியோனியில் 1,070 பேரும், கினியாவில் 1,041 பேரும் எபோலா நோய் தாக்குதலால் பலியாகி உள்ளனர். மற்றைய 5 நாடுகளில் பலி எண்ணிக்கை மிகவும் குறைவு என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

# கண்கவர் கவர்ச்சிபெண்கள் கண்களை மறைக்கவேண்டும்
## சவுதியில் புதிய சட்டம் அமுல்



கவர்ச்சியான கண்கள் உள்ள பெண்கள் அதை வெளியில் காட்ட தடை விதித்து சவுதி அரேபியா புதிய சட்டத்தை கொண்டு வந்துள்ளது. சவுதி அரேபியாவில் கவர்ச்சியான கண்கள் உள்ள பெண்கள் அதை வெளியில் காட்ட தடை விதித்து புதிய சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த புதிய சட்டத்தின்படி கவர்ச்சியான கண்கள் உள்ள பெண்கள் அதை மறைக்கும் வகையில் பர்தா அணிய வேண்டும். இந்த சட்டத்தை கண்டித்து பலர் சமூக வலைதளங்களில் கருத்து தெரிவித்து வருகிறார்கள்.

இது குறித்து சவுதி அரசின் நல்லொழுக்க மேம்பாடு மற்றும் தீயவை தடுப்பு குழுவின் செய்தித் தொடர்பாளர் 'ஏக் மோத்லப் அல் நபத் கூறுகையில், கண்களை மறைக்குமாறு அதிலும் கவர்ந்திழுக்கும் கண்களை மறைக்குமாறு குழு உறுப்பினர்கள் பெண்களிடம் தெரிவிப்பார்கள். அவ்வாறு செய்யும் உரிமை எங்களுக்கு உண்டு என்றார். இந்த குழுவின் புதிய சட்டத்திற்கு முஸ்லீம்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்று இளவரசர் நயிப் தெரிவித்துள்ளார்.

# 400 தமிழ் பௌத்த குடும்பங்கள் யாழ்.குடாநாட்டில் உள்ளன

## யாழ். தமிழ் பௌத்த சங்கத் தலைவர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 400 தமிழ் பௌத்த குடும்பங்கள் இருப்பதாக யாழ். தமிழ் பௌத்த சங்கத்தின் தலைவர் ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற பௌத்தத்தை அறிந்துகொள்வோம் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவோம் எனும் தொனிப்பொருளில் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், பௌத்த அறநெறிப் பாடசாலை ஒன்றும் இங்கு இயங்கி வருவதாகவும் அதில் 60 மாணவர்கள் கல்வி பயின்று வருவதாகவும் தெரிவித்தார். இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தேசிய பௌத்த சம்மேளனத்தின் தலைவர் ஜெகத்சுமதிபால கருத்துத்தெரிவிக்கையில், 1959ஆம் ஆண்டு யாழ். குடாநாட்டின் தமிழ் பௌத்த சங்கம் தேசிய பௌத்த சம்மேளனத்தில் இணைந்துள்ளது. கொழும்பும் யாழ்ப்பாணமும் இணைந்து பல நிகழ்வுகளை நடாத்தியிருந்தன. பின்னர் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையினால் அவை நடைபெறுவது தடைப்பட்டது பின்னர் 2010இல் ஒரு சந்தர்ப்பம் வந்தது. நாக விகாரை சிறிவிமலதேரரின் உதவியுடன் யாழ். தமிழ் பௌத்த சங்கம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு ரவிக்குமார் தலைவராக விளங்குகின்றார். பௌத்தம் வேறு பௌத்தமதம் வேறு பௌத்தம் யாரையும் மத மாற்றம் செய்யவில்லை. அது மதங்களுக்கிடையே ஒற்றுமையை வலியுறுத்துகின்றது. நல்ல மனிதனாக வாழ்வதனை போதிக்கின்றது. இது குறித்து மானிப்பாயில் கருத்தரங்கினை நடாத்தியுள்ளோம் என்றார்.(பா)

# முதியோர் கொடுப்பனவு பெறலாம்

வரணிப்பிரதேசத்தில் வசிக்கும் 70 வயதிற்குட்பட்டவர்களுக்கான மாதாந்த 1000 ரூபா கொடுப்பனவு கடந்த 5ஆம் திகதி தொடக்கம் வழங்கப்படுகிறது. உரிய பயனாளிகள் வரணி உப அஞ்சலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (150)

# ஆசிரிய கலாசாலையில் திருக்குடமுழுக்குப் பெருவிழா

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கோவில் கொண்டருளும் ஸ்ரீ யோகாம்பிகா சமேத யோகலிங்கேஸ்வரர் சுவாமியின் திருக்குடமுழுக்குப் பெருவிழா எதிர்வரும் வியாழக்கிழமை (13.11.2014காலை 8.35 இற்கும் 9 மணிக்கும் இடைப்பட்ட சுப முகூர்த்தத்தில் இடம்பெறவுள்ளது. இதனையொட்டிக் கோவில் மூர்த்தங்களுக்கான எண்ணெய்க் காப்பு நிகழ்வு 12 ஆம் திகதி புதன்கிழமை பகல் 11 மணி முதல் மாலை 3 மணிவரை இடம்பெறும். கும்பாபிஷேகக் கிரியைகளை தென்கோவை கற்பக விநாயகர் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ பா.செல்வசேனக் குருக்கள் நடத்தி வைப்பார். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 15 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும்.

# நெற்பயிரை பாதுகாக்க நீர் இறைக்கும் விவசாயிகள்

(யாழ்ப்பாணம்)

பருவகால மழை வீழ்ச்சியின்மையால் காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தமது நெற்பயிர்களுக்கு நீர் இறைப்பதை தற்போது காணக்கூடியதாக உள்ளது

குடாநாட்டில் மழையை நம்பியே நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. தற்போது நெற்பயிர் வளர்வதற்கு வயல்களில் வெள்ளம் இல்லாத நிலையில் பயிர்கள் எரியும் நிலையில் உள்ளது. தமது நெற்பயிர்களை பாதுகாக்கும் வகையில் குடாநாட்டில் பல பகுதிகளிலும் விவசாயிகள் நீர்இறைக்கும் இயந்திரத்தின் மூலம் நெற்பயிர்களுக்கு நீர்பாய்ச்சுவதை காணக் கூடியதாக இருக்கின்றது. (இ)

# தேர்தல் அறிவிப்பின் பின்னரே பொது வேட்பாளர் பெயர்

## கூறுகிறார் சோபிததேரர்

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பின் பின்னரே பொது வேட்பாளரின் பெயர் அறிவிக்கப்படும் என சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரை தெரிவு செய்வது தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் கோட்டே நாகவிகாரையின் விகாராதிபதியும் சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் தலைவருமான மாதுலுவாவே சோபித தேரர் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் பிரதான எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட முக்கிய அரசியல் பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க நேற்று முன்தினம் காலை கோட்டை நாக விகாரையின் விகாராதிபதி மாதுலுவாவே சோபித தேரரை சந்தித்துள்ளதோடு பொது நிகழ்ச்சிநிரலில் பொது எதிரணியொன்றினை உருவாக்குவது தொடர்பிலும் இரு தரப்பு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கலந்துரையாடல்களைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த மாதுலுவாவே சோபித தேரர், ஜனாதிபதித் தேரதலுக்கான அறிவிப்பு வெளியானதன் பின்னர், எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரின் பெயர் அறிவிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

### பொதுவேட்பாளர்யார்..

இதேவேளை பௌத்த மத குருமார்கள் குழுவொன்று கருஜெயசூரியவிற்கு ஆதரவாக அறிக்கையொன்றை விடுப்பதற்கு தயாராகிவருவதாகவும் தெரிய வருகின்றது. இலங்கையின் பௌத்த மதகுருமாரின் ஆதரவை கருஜெயசூரிய பெறக்கூடியதாக இருப்பது மிகமுக்கியமான விடயம் என கட்சிக்குள் கருத்து காணப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி கருஜெயசூரியவை நியமித்தால் அவருக்கு ஆதரவளிக்க சந்திரிகா குமாரதுங்கவும், அத்துரலிய ரத்ன தேரரும் இணங்கியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

எனினும் ரணிலின் நெருங்கிய நண்பரான மலிக் சமரவிக்கிரமவும் வேறு சிலரும் முன்னாள் ஜனாதிபதிக்கு சார்பான நிலைப்பாட்டை எடுத்துள்ளனர்.

### பொதுவேட்பாளர் தெரிவு..

இந்தநிலையில் தற்போதைய அரசி யல் சூழ்நிலையில் 40 வீத வாக்கு வங் கியை கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியே பொதுவேட்பாளர் நிலைக்கு பொருத்தமான வேட்பாளரை கொண்டிருக்கிறது என்பது யதார்த்தம்.

எனவே பொதுவேட்பாளருக்கு, ஜே.வி.பி.யினர், ஜாதிக ஹெல உறுமயவினர், சந்திரிகா குமாரதுங்க மற்றும் மாதுலவேவ சோபித தேரர் ஆகியோரின் முழுமையான ஆதரவு கிடைக்கவேண்டும் என்றும் தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

### ஜனாதிபதி...

தொடர்பில் எழுத்து மூலம் பதிலளிக்கத் தவறியிருந்தால் அவர் மக்களை பிழையாக வழி நடத்தியதாகவே அர்த்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினையை பொதுப பிரச்சினையாக சரத் என் சில்வாவே மாற்றியிருந்தார் என அவர் குறிப்பிட்டுள்ளார். சரத் என் சில்வாவின் சட்டத்தர்க்கம் சிறந்த முறையில் அமைந்திருந்த போதிலும், உச்ச நீதிமன்றில் சட்ட விளக்கம் கோரப்பட்டமை தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கத் தவறியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

# யாழ். தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் டிசம்பரில் நாவலர் விழா



யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் முன்னெடுக்கவுள்ள நாவலர் விழா எதிர்வரும் டிசம்பர் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளதாகத் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தெரிவித்துள்ளார். இதனையொட்டி யாழ். பல்கலைக்கழக நடனத்துறையினர் நாவலரின் வாழ்வியலைச் சித்தரிக்கும் வகையில் நாட்டிய நாடகம் ஒன்றைத் தயாரிக்கத் தொடங்கியிருப்பதாகவும், அவர் கூறினார். இந்நிகழ்வு யாழ். கரிகணன் நிறுவனத்தின் அனுசரணையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### இலங்கை..

தில் இந்த 45 பேரும் டுபாயில் அடைக்கலம் பெற்றுக்கொள்ள நேரிட்டது.

இந்தப் படகில் பயணித்த ஏனைய 38 பேரும் ஏற்கனவே சில நாடுகளில் குடியேற்றப்பட்டுள்ளனர். உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டுத் தப்பித்து, தாம் புகலிடம் கோரியதாகவும் பிரேஸில் புகலிடம் வழங்கியுள்ளமை பெரும் மகிழ்ச்சி அளிப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மீண்டும் மறு பிறவி எடுத்தாற்போல் பூரிப்பு ஏற்பட்டுள்ளது என 37 வயதான ரமணன் குணசீலன் தெரிவித்துள்ளார். தமது மகள் பிரேஸில் பாடசாலைக்கு செல்ல முடியும் என அவர் தெரிவித்துள்ளார். மீண்டும் இலங்கை திரும்ப முடியாத நிலைமை நெடுநாள் வேதனையாகவே காணப்படுகின்றது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### 29 ஐஸ்கிறீம்...

தகர்களை அழைத்துப் பேசியிருந்தோம். தொடர்ந்து கடந்த 30 ஆம் திகதி மாகாண சுகாதார அமைச்சர் மற்றும் பணிப்பாளர் ஆகியோருடனும் கலந்துரையாடியிருந்தோம். இதனைத் தொடர்ந்து அக் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

இதற்கமைவாக சுகாதார சேவைகள் திணைக்களம் பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு இதன் முதற்கட்டமாக 29 ஐஸ்கிறீம் மற்றும் யூஸ் உற்பத்தி விற்பனையாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

இதேபோன்று, தடை விதிக்கப்பட்ட ஏனைய நிலையங்களும் அடிப்படைச் சுகாதார வசதிகளை எதிர்வரும் இரு வாரத்திற்குள் ஏற்படுத்திக் கொண்டால் அவற்றையும் மீள இயங்க அனுமதிப்பதாக மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார் என யாழ். வர்த்தகர் சங்கத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யப்படுகின்ற உணவுகளைப் பரிசோதிப்பதற்கான ஆய்வு கூடங்களை அமைக்க வேண்டுமென யாழ்ப்பாண வர்த்தகர் சங்கம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை ஒன்றையும் விடுத்துள்ளது.

### இலங்கையின்...

கும் நோக்கில் அல்ல என்றும் அரசாங்கம் கூறியுள்ளது.

1955 ஆம் ஆண்டு முதல் ஐ.நா.வின் உறுப்பினராக உள்ள ஒரு இறைமை மிக்க நாட்டின் நேர்மையை ஒரு அதிகாரி கேள்விக்குள்ளாக்குவது கவலைக்குரியது என்றும் அந்தக் கடிதத்தில் ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

ஐ.நா.வின் புலன்விசாரணை குறித்து இலங்கையின் வெளியுறவு அமைச்சினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையின் சாரத்தையும், உள்ளடக்கத்தையும் புரிந்துகொள்ள முயற்சி எடுக்காமல், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையரின் செய்தி அறிக்கை வெளியாகியிருப்பது துரதிர்ஷ்டவசமானது என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விசாரணைக்குழுவின் நடைமுறைகள் குறித்து இலங்கை எழுப்பிய நியாயமான சந்தேகங்களுக்கு தொழில்சார் ரீதியில் பதிலளிக்க மாத்திரமே ஐ.நா. ஆணையருக்கு முடியுமே ஒழிய நாட்டின் நேர்மைத்தன்மை குறித்து கேள்வியெழுப்ப முடியாது என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சமுர்த்தி...

யடுத்து வவுனியா பொலிஸாருக்கு தொலைபேசி மூலம் முறைப்பாடு செய்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட போது சமுர்த்தி அலுவலகத்தின் யன்னல்கள் உடைக்கப்பட்டு அங்கிருந்த சமுர்த்தி ஆவணங்கள் பல தீமூட்டப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (70)

# மூன்றாவது முறையும் போட்டி ஜனாதிபதிக்கு வாய்ப்பில்லை

## என்கிறது ஐ.தே.க.

மூன்றாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வாய்ப்பு இருப்பதாக ஏற்றுக்கொள்ள வில்லை என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீ பெரேரா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது, அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா வெளியிட்ட கருத்து ஒன்றை மேற்கோள் காட்டி அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதியால் மூன்றாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட சட்ட ரீதியாக அனுமதி இல்லை என்றும் அவர் இதன் போது குறிப்பிட்டார்.

இதற்கிடையில் இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு வினால் வழங்கப்படுகின்ற பரிந் துரைகளை அரச நிறுவனங்கள் அமுலாக்குவதில்லை என்பதை யும் அவர் இதன் போது சுட்டிக்காட்டினார்.

இதற்கு பதில் வழங்கிய அமைச்சர் டபிள்யூ. டி.ஜே. செனவிரட்ன, அதனை தாமும் ஏற்றுக் கொள்வதாக தெரிவித்தார்.

# காணாமற் போனோர் குறித்து முல்லையில் 175 முறைப்பாடு

(கொழும்பு)

காணாமற் போனோர் தொடர்பிலான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முல்லைத் தீவு மாவட்ட அமர்வில் 175 பேர் முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒட்டுசுட்டான் மற்றும் கரைத் துறைப்பற்று ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் குறித்த நடவடிக்கை அண்மையில் மேற்கொள்ளப்பட்டது.

காணாமற் போனோர் தொடர்பிலான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு இதுவரை 19,766 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்கள் அடங்கலாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமற் போனோர் தொடர்பான ஆணைக்குழு தமது முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி கடந்த 2ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரை முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டாவது முறையாகவும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# விசாரணைகளில் ஈடுபாடா? நிராகரிக்கும் கூட்டமைப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையகத்தின் விசாரணைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனிப்பட்ட வகையில் ஈடுபாடு காட்டுவதாக கூறப்பட்ட கருத்தை முற்றாக நிராகரிப்பதாக இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். கடந்த 4ஆம் திகதி வெளிவிவகார அமைச்சு தெரிவித்த கருத்தொன்றுக்கு பதிலளித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

மேலும் இது கேலிக்கூத்



தான விடயம் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# அடையாள அட்டை வழங்க விசேட நடமாடும் சேவை

அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னராக தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான விசேட நடமாடும் சேவையொன்றை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கவுள்ளதாக கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

அவ்வமைப்பு வெளியிட்டுள்ள விசேட அறிக்கையொன்றிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பதுளை, திருகோணமலை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களை மையப்படுத்தியதாக இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதனையடுத்து, ஏனைய மாவட்டங்களில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைக்கு வரும்.

இந்த பாரிய செயற்றிட்டத்தை ஆட்பதிவுத் திணைக்களம் மற்றும் இலங்கை மனித உரிமைகள் அமைப்பு என்பனவற்றுடன இணைந்து முன்னெடுக்கவுள்ளதாகவும் அவ்வமைப்பு அறிவித்துள்ளது.

# நாடாளுமன்றில் வேண்டாம் நித்திரை



(கொழும்பு

நாடாளுமன்ற அமர்வுகளின் பொது நித்திரை செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நித்திரை கொள்ள வேணடாம் என்று அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச 2015ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்த போது அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நித்திரை கொண்டமை தொடர்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா நேற்று நாடாளுமன்றத்தில் செய்தித்தாள் ஒன்றின் புகைப்படம் ஒன்றை காண்பித்து இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இதன்போது கருத்துரைத்த உள்துறை அமைச்சர் ஜோன் செனவிரட்ன, ஒருவரை சுட்டிக் காட்டி இந்தக் குற்றச்சாட்டை முன்வைப்பது கூடாது என்று கூறினார்.

இதனை ஏற்றுக்கொண்ட அஜித் பி பெரேரா, பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் முக்கிய அமர்வுகளின் போது நித்திரை செய்வதாக குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி, நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் நித்திரை செய்வதற்கு இது சிறந்த உதாரணமாகும் என்று தெரிவித்தார்.

# நெல்லியடி பெண் கொலை; கைதானவர் விளக்கமறியலில்

நெல்லியடி முள்ளிப்பகுதியிலுள்ள பற்றைக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் கொலையுடன் தொடர்புடையவர் என சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவரை எதிர்வரும் 17ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் ஏ.கே. நடராஜா, நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ் நாகர்கோவில் கிழக்கு பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான கலியுக மூர்த்தி சுகந்தி (வயது-36) கடந்த ஒக்ரோபர் 20ஆம் திகதி காணாமற்போயிருந்தார்.

மனைவி காணாமற் போனமை தொடர்பில் கணவன் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒக்ரோபர் 21ஆம் திகதி முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.

தொடர்ந்து, ஒக்ரோபர் மாதம் 24ஆம் திகதி நெல்லியடி முள்ளி பகுதியிலுள்ள பற்றைக் குள் இருந்து அழுகிய நிலை யில் மேற்படி பெண் சடலமாக மீட்கப்பட்டார்.

பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட போது, மேற்படி பெண் பணத்திற்காக கொலை செய்யப்பட்டிருப்பது தெரியவந்தது.

அதாவது, பெண் காணாமற் போன தினம் வங்கியொன்றில் நகைகள் அடகு வைத்து பணம எடுத்ததுடன், வங்கிக் கணக்கிலிருந்தும் பணம் எடுத்துள்ளார்.

இதனையடுத்து, பெண்ணின் தொலைபேசி பதிவுகளை வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது, கொலை செய்யப்பட்ட பெண்ணுடன் கைத தொலைபேசியில் அதிக தடவைகள் உரையாடிய முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய சந்தேகநபர் கடந்த 5ஆம் திகதி கைது செய்யப்பட்டார். சந்தேகநபரின் முச்சக்கர வண்டியும் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

பருத்தித்துறை நீதிமன்ற அனுமதியை பெற்று, சந்தேக நபரை 48 மணித்தியாலங்கள் பொலிஸ் காவலில் வைத்து பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

தொடர்ந்து, மேற்படி சந்தேக நபர், நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப் பட்டார் இதன்போதே நீதவான் சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (18)

# பொருளாதார தொகைமதிப்பீடு உண்மையான தகவலை தர வேண்டும்

(கொழும்பு)

பொருளாதார தொகைமதிப்பின் இறுதிக்கட்ட நடவடிக்கை இன்னும் இரண்டு மாதங்களுக்குள் நிறைவு செய்யப்படவுள்ளதால், அதற்கான தகவல்களை சரியான முறையில் புள்ளிவிபரவியல் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கி உதவி செய்யுமாறு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டி.சீ.ஏ.குணவர்தன பொதுமக்களிடத்தில் வேண்டு கோள் விடுத்துள்ளார்.


கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகள் தகவல் சேகரிக்கும் கட்டம் தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு, நேற்று மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து விளக்கமளித்த அவர்

பொருளாதார தொகைமதிப்பின் இறுதிக்கட்டமான கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகள் ஆகிய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கூறுகளின் தகவல்களை சேகரிக்கும் நடவடிக்கை 2014ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் மேற்கொள்ளப்படவுள்ளது .

இந்த தரவுசேகரித்தல் நடவடிக்கைகளுக்காக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் இதற்காக பயிற்றுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மூலம் மேற்கொள்ளப்படும்.

இவ் உத்தியோகத்தர்களுக்கு உண்மையான தகவல்களை வழங்கி இந் நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ள



உதவுமாறு புள்ளிவிபரத்திணைக்களம் வேண்டிநிற்கின்றது.

இந்தத் தகவல்கள் தொகைமதிப்பு கட்டளைச்சட்டத்தின் கீழ் சேகரிக்கப்படுவதுடன் தகவல்களின் இரகசியத் தன்மையை பாதுகாப்பதற்கு திணைக்களம் சட்டத்தால் கடப்பாடுடையது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கலந்துரையாடலென அழைத்து இடமாற்ற படிவங்கள் வழங்கல்

## ஆசிரியர்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களைக் கலந்துரையாடல் என அழைத்து இடமாற்றப் படிவங்கள் வழங்கப பட்டமையால் அவர்கள் அதிர்ச்சியும், விசனமும் அடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெறவுள்ளதாவும், இதில் கலந்து கொள்ளுமாறு ஆசிரியர்களுக்கு ஏற்கனவே கடிதங்கள் அனுப்பப் பட்டிருந்தன.

இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்பதற்காக வலயக் கல்வி அலுவலகத்துக்கு ஆசிரியர்கள் சென்றபோது கலந்துரையாடல் எதுவும் நடத்தாமல் வன்னிப் பிரதேசத்திற்கான இடமாற்ற படிவங்கள் வழங்கப்பட்டன.

எந்த வகையான திட்டமிடலும் இன்றி ஏற்கனவே வன்னி மாவட்டத்தில் கடமையாற்றியவர்கள், இடமாற்ற வயதைக் கடந்தவர்கள் உட்பட அனைவருக்கும் படிவங்கள் வழங்கப்பட்டன என்றும், இதனால் தாம் அதிருப்தியும், விசனமும் அடைந்தனர் என்றும் ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 நவம்பர் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.